

ஓம் வில்வப் பிரமனே நம

பாரிஸ் லா சப்பலில்

ESANE JEWELLRY

தங்க நகை சேமிப்புத் திட்டத்தில் இணைபவர்களுக்கு முதல் மாதம் இலவசம்!

8, Rue Cail,75010 Paris Tel: 01 42 81 18 03 Port: 06 66 09 55 11

email: esanejewellery@gmail.com



ஐரோப்பியப் பதிப்பு


# ஈழமுரசு®


முரசு 05 | 07 - 20 ஜனவரி 2020 | முழக்கம் 116



பிரான்சின் ஏக விநியோகஸ்தர்கள் ...

SKYROSE

YUPPTV

14, RUE CAIL - 75010 PARIS

01 77 17 63 58

M° Gare du Nord / La Chapelle





விடியல் சூரியன்
எழுந்துவர
தமிழன் தரணியில்
தலைநிமிர்வான்
புதிய பானையில்
பொங்கலிட்டு
தமிழ் புத்தாண்டை
வரவேற்போம்


V.T Cash & Carry

www.vtcashcarry.com

11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92

E-mail: vtsuperstore@organge.fr

பாலன்ஸ் சலூன்

தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்



29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle Tél: 06 63 01 75 80

ரஜின்தரா CASH AND CARRY

BOBIGNY வாழ் மக்களுக்காக...



இலங்கை, இந்திய, ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல ...

Tel. : 09 87 03 70 07

1 Ave. Edouard Vaillant - 93000 Bobigny



குபேரன் GOLD HOUSE

உங்களின் மனதிற்குப் பிடித்தமான வடிவங்களில் உங்கள் தங்கநகைகளைச் செய்து கொள்ள...

4 rue Cail - 75010 Paris
Tél.: 06 95 35 46 83

Crédits - Solutions

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்

திரு.சிவா: 0973255923 - 0665660305

Fond de Commerce மற்றும் Mur Commerciaux ஆகியவற்றிற்கு கடன் உதவிகள் செய்து தரப்படும்

2-4 rue de l'Orillon - 75011 Paris

email: creditssolutions@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com

197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04


தமிழ் மக்களின் இதயநாதமாய் என்றும் முழங்குவது ஈழமுரசு



LINGAM CONSEIL
À VENDRE
À LOUER
பல வருடங்களுக்கும் மேலான
அனுபவம் மிக்கவர்கள்.
VOUS AVEZ UN PROJET IMMOBILIER?
VENDRE · ACHETER · INVESTIR
Conseil pour tout type de projet immobilier et commercial (Fonds de commerce/Local commercial)
Obtention de crédits de financement
Une grande expérience à votre service
Simple, rapide et efficace
குறைந்த வட்டி
Nouveau projet près de la Gare de Drancy
Réserver rapidement afin de bénéficier de frais notaires offerts
புதிய வீடுகள் கட்டும் பிரபல நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிகின்றோம்
உங்கள் விருப்பப்படி...
நீங்கள் தெரிவு செய்யும் இடத்தில்!
LINGAM CONSEIL IMMOBILIER
"CRÉDIT TAUX 0% SUR LE NEUF"
PROVEFA
"Pavillons Drancy"
83 Avenue de la République
93150 Le Blanc-Mesnil
B RER B Le Blanc-Mesnil
1 Bis, Rue de la Réunion - 75020 Paris
Tél: 09.50.46.47.17 ou 07.67.98.84.45
M 2 AVRON M 9 BUZENVAL
Du lundi au samedi de 10h à 18h lingamconseil@hotmail.com




MINIEMITH Living the Current
CONTACTEZ NOUS: 06 51 66 28 51
MINIEMITH
OFFRE SPECIALE
PALMYRAH JAFFNA
TODDY
VIN DE PALME
யாழ்ப்பாணத்துப் பனங் கள்ளு
1 ACHETÉES 2 GRATUITE
offre valable jusqu'au: 01/01/2020
*jusqu'à épuisement du stock*
VS PALMYRAH TODDY
DÉCOUVREZ
PALMYRHA ARRACK
100% NATURAL
APPELÉ JAFFNA USAAR, IL EST CONNU AU SRI LANKA POUR SA BOISSON SAVOUREUSE.
32,90 €
L'abus d'alcool est dangereux, consommez avec modération
WWW.MINIEMITH.FR
MINIEMITH
CONTACTEZ NOUS: 06 51 66 28 51
MINIEMITH
FARINE DE TUBERCULE DE PALMYRAH
ஒடியல் மா
FARINE DE TUBERCULE BOUILLI DE PALMYRAH
புழுக்கொடியல் மா
PANADDU
பனாட்டு
Panaddu
TUBERCULE BOUILLI DE PALMYRAH CHIPS
SUCRE DE PALMYRAH
பனங்கட்டி
PULPE DE FRUIT DE PALMYRAH
PALMYRAH CRUCH
JUS DE FRUIT DE PALMYRAH
VIN DE PLAM
பனங்கள்ளு
KUMARIKA SANTHANANDHI OIL
சந்தனாதி தைலம்
100% NATURAL
3,50 €
3,50 €
4,99 €
DISPONIBLE EN MAGASIN:
VS & CO
197 RUE FDG ST DENIS
75010 PARIS
LE MARCHE EXOTIQUE
1 RUE CAIL
75010 PARIS
LOVELY OCEAN
13 RUE PERDONNET
75010 PARIS
FOOD'S CITY
3 BIS AV CARNOT
94190
VILLENEUVE-SAINT-GEORGES
WWW.MINIEMITH.FR

ஈழமுரசு
mediacentre ஊடகமையம்
முரசு 05 07 – 20 ஜனவரி 2020 முழக்கம் 116



“அனைத்துத் தமிழ் மக்களும்
ஒரே இனம் என்ற தேசாபிமான
உணர்வுடன் போராட்டத்தில்
பங்கு கொண்டால்,
எமது விடுதலை இலட்சியம்
வெற்றி பெறுவது நிச்சயம்.”
– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

# ஓர் இனப்படுகொலையாளியின் மரணம் 3ம் உலகப் போருக்கான தொடக்கமா?

– விவேகன்

அமெரிக்கா - ஈரான் இடையே வரலாறு காணாத நேரடி மோதலுக்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ‘அமெரிக்காவானது வளைகுடா பிராந்தியத்தை தீப்பற்றி எரிவதற்குத் தயாரான தீப்பெட்டியாக மாற்றி வருவதாக’ ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஜாவத் ஸரீப் கடந்த ஆண்டு ஒகஷ்ட் மாதம் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். அந்த குற்றச்சாட்டு சரியானது என எண்ணும் அளவிற்கு நிலைமை இன்று மாறியுள்ளது.

ஈராக் தலைநகர் பக்தாத் விமான நிலையம் அருகே, அமெரிக்கா நடத்திய வான் வழித் தாக்குதலில், ஈரானின் 2வது சக்தி வாய்ந்த நபராக கருதப்பட்ட, ஈரானின் புரட்சிகர காவல் படைப் பிரிவின் தலைவரான ஜெனரல் குவாசிம் சுலைமானி (Qassem Soleimani - 62 வயது) கொல்லப்பட்டது வளைகுடாவையும் கடந்து உலகளவில் போர்ப் பதட்டத்தை உண்டாக்கியிருக்கின்றது.

பக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த 3ம் திகதி அமெரிக்கப் படை நடத்திய ஆளில்லா விமான தாக்குதலிலேயே சுலைமானி கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் உலக அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்த நிலையில், இந்தத் தாக்குதலை இலக்குவைத்து நடத்தியது தாங்கள்தான் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் அறிவுப்பு வெளியிட்டதுதான் உலகளவில் பெரும் பதட்ட நிலையை உருவாக்கியுள்ளது. ஏனெனில் ஈரான் - அமெரிக்கா போர் என்பது உலகளவில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. உலகப் பொருளாதாரத்தின் ஆணிவேரையே அசைக்கும் திறன் வளைகுடாப் பகுதிக்கே இருக்கின்றது. மத்திய கிழக்கில் ஏற்படும் போர், வளைகுடாப் பகுதியையே போர் வலையமாக மாற்றிவிடும். இது உலகளவில் எரிபொருளுக்கான பெரும் தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிடும். எனவே, இந்தப் படுகொலை விவகாரம் அடுத்த உலகப் போருக்கு வித்திடும் மோசமான சம்பவமாகக் கூட அமையலாம் என அஞ்சப்படுகிறது. அத்துடன், டிரம்பின் இந்த நடவடிக்கை உலகில் இன்னொரு அணு ஆயுத நாட்டை உருவாக்குவதற்கும் வழிவகுத்துள்ளதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

அதேவேளை, கொல்லப்பட்ட ஜெனரல் குவாசிம் சுலைமானி ஒன்றும் அத்தனை நல்லவரில்லைத்தான். விடுதலைக்காகப் போராடும் குர்திஸ் இன மக்களின் மீது ஏராளமான படுகொலைத் தாக்குதலை நடத்தியதில் இவரது பங்கு காத்திரமானது. ஈராக்கின் குர்திஸ் கட்டுப்பாட்டிலுள்ள அவர்களின் சொந்த மண்ணான கேர்குக் பகுதி 2017ம் ஆண்டு ஆக்கிரமிக்கப்படுவதற்கும், குர்திஸ் படுகொலைகள் அதிகளவில் இடம்பெறுவதற்கும் இவர் முதன்மைக் காரணமாக இருந்ததாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அத்துடன், ஈராக், சிரியா, லெபனானில் பல்வேறு இனக்குழுக்களை அழிப்பதிலும், அமெரிக்காவிற்கு எதிரான



நடவடிக்கைகளிலும் இவரது மறைமுகக் கரங்கள் காத்திரமாக இருந்துள்ளன.

இனஅழிப்புப் போரில் ஈடுபட்ட சிறீலங்காவிற்கு பேருதவிகளைப் புரிந்ததில் ஈரானின் பங்கு மிகவும் காத்திரமானது. சமாதானப் பேச்சுக்களை முறித்துக்கொண்டு இனஅழிப்புப் போரை ராஜபக்ச ஆட்சியாளர்கள் மெது மெதுவாக ஆரம்பிக்கத் தொடங்கிய 2005ம் ஆண்டு காலப்பகுதியில் சிறீலங்காவிற்கு 150 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை ஈரான் வழங்கியதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். அத்துடன், விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் (எல்லாளன் நடவடிக்கை உட்பட) ஏராளமான வான் கலங்களை இழந்துநின்ற சிறீலங்காவிற்கு, வான் படையை மீளக் கட்டியெழுப்புவதற்கு துணை நின்றதும் இதே ஈரான்தான். அதேவேளை, இன அழிப்புப்போர் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருந்த 2008ம் ஆண்டு காலப்பகுதியில் சிறீலங்காவிற்குச் சென்றிருந்த அப்போதைய

தொடர்ச்சி 04ம் பக்கம்









ஈழமுரசு

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE" JOURNAL TAMOUL

bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France

Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com

ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com

விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென் தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
அருளப்பு (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
POP,
30, rue Raspail,
93120 La Courneuve.

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
**பிரான்ஸ்** 75€
**ஐரோப்பா** 85€
**ஏனைய நாடுகள்** 99€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.






TAMILPOLITY.COM


# ஓர் இனப்படுகொலையாளியின் மரணம்....

ஈரான் ஜனாதிபதி மமூத் அகமத்நிஜாத் (Mahmoud Ahmadinejad) சிங்களப் பேரினவாத அரசிற்கு பல்வேறு ஆதரவுகளை வழங்கினார். இதனைவிட மகிந்தவும் அக்காலப் பகுதியில் ஈரானுக்குப் பயணம் மேற்கொண்டு பல்வேறு உதவிகளைப் பெற்றுக்கொண்டிருந்



தார். இரு நாடுகளுக்கும் இடையில் இனஅழிப்பில் காத்திரமான ஒருங்கிணைவு இருந்ததை இந்தச் சம்பவங்களின் போது இரு நாட்டுத் தலைவர்களும் நடந்துகொண்ட விதங்களும், எடுத்துக்கொண்ட நிழற்படங்களும் உணர்த்தி நின்றன.

இறுதியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முற்றாக அழிப்பதற்காக 2009ம் ஆண்டு 52 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை ஈரான் வழங்க முன்வந்தபோதும், சர்வதேசத்தின் ஈரான் மீதான தடை காரணமாக அப்போது அதனைச் சிறீலங்காவினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனினும், ஈரானின் கோரிக்கைகளுக்கும் அமைவாகவுமே பாகிஸ்தான் போன்ற ஈரானின் நட்பு நாடுகள் அந்த உதவிகளை சிறீலங்காவிற்குப் புரிந்தன. ஏன் கடந்த 02.01.2020 அன்று அதாவது சுலைமானி கொல்லப்படுவதற்கு முதல்நாள் கூட, சிறீலங்காவின் பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவை சந்தித்துத்துப்



பேசிய ஈரானிய தூதுவர் ஸாயிரி அமிரனி, சிறீலங்காவின் காவல்துறையினர் மற்றும் முப்படையினருக்கு பயிற்சி வசதிகளை வழங்க ஈரான் முன்வந்துள்ளதாகத் தெரிவித்திருந்ததும்



ஈரான் - சிறீலங்காவிற்கு இடையிலான நெருங்கிய நட்புக்கு ஆதாரமாகும்.

இவற்றைவிட தமிழின அழிப்பில் சுலைமானியின் ஆலோசனைகள் இருந்ததாகவும் தகவல்கள் உள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு 2008 டிசெம்பர் மாதம் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, பாகிஸ்தான், ஜப்பான், பங்களாதேஷ் மற்றும் மாலத்தீவு ஆகிய ஏழு நாடுகளின் இராணுவ அதிகாரிகள் குழு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கியிருந்ததுபோன்று, ஈரானின் இராணுவ ஆலோசனைகளும் சிறீலங்காவிற்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த ஆலோசனைகளில் முக்கிய பங்காற்றியவர்களில் தற்போது கொல்லப்பட்ட ஜெனரல் குவாசிம் சுலைமானி அடங்கியிருந்ததாகக் தெரியவருகின்றது. எனவே, தமிழின அழிப்புப் போரிலும் இவரது பங்கு இருந்திருக்கிறது என்பது இங்கு மறுப்பதற்கில்லை. எனவே, சிறீலங்காவின் ஜனாதிபதி மற்றும் படைத் தளபதிகளைப் போன்றே இவரும் ஓர் இனப்படுகொலையாளி. ஓர் இனப்படுகொலையாளியை அழித்ததற்காக குர்திஸ் மக்களும், இனப்படுகொலையாளிகளுக்கு தண்டனை வழங்கவேண்டும் என எதிர்பார்க்கும் தமிழ் மக்களைப் போன்ற இனங்களுக்கும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை மகிழ்ச்சியை அளிக்கலாம்.

ஆனால், இந்தப் படுகொலையால் உலகளவில் எழுந்திருக்கும் அச்சம் புறந்தள்ளத்தக்கதல்ல. மீண்டுமொரு உலகப் போருக்கு இது வித்திடுமோ என்று உலக நாடுகள் பலவும் அச்சமடைந்துள்ளன.

கொல்லப்பட்ட சுலைமானி சாதாரணமானவரல்ல. ஈரானின் மிகவும் பலம் வாய்ந்த நபராக கருதப்படுபவர். ஈரான் தலைவர் அலி கமேனியுடன் நேரடி தொடர்பில் இருந்தவர். அந்நாட்டின் கதாநாயகனாக போற்றப்படுபவர். ஈராக், லெபனான், சிரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள ஈரான் ஆதரவு படைகள், இவரது உத்தரவுக்கு கட்டுப்பட்டவை. சிரியாவில் உள்நாட்டு போர் வெடிப்பதற்கு முக்கிய காரணகர்த்தா இவர்தான் என்று கூறப்படுகின்றது.

1998ல் ஈரானின் புரட்சிகர பாதுகாப்பு படையின் (Quds Force) தளபதியாக இவர் பொறுப்பேற்றார்.

தொடர்ச்சி 13ம் பக்கம்

# எதற்காக இந்தப் படுகொலை?

ஈரான் உடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து 2018ல் விலகிய அமெரிக்கா, தீவிரவாத சக்திகளுக்கு அந்நாடு உதவுவதாக குற்றம்சாட்டி, ஈரான் மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்தது. எந்த நாடும் ஈரானிடம் மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்யக்கூடாது என தடையும் விதித்தது. ஈரானுக்கு மிகப்பெரும் பொருளதார நெருக்கடியை ஏற்படுத்தியது, அந்நாட்டு மக்களிடையேயும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஒரு கட்டத்தில் ஈரான் அரசு எரிபொருள் விலையை மிக மோசமாக அதிகரிக்கப்போய், அது உள்நாட்டுக் கலவரம் வரை கொண்டுசென்றது. அமெரிக்காவின் இந்தப் பொருளதாரத் தடைகளுக்கு பதிலடியாக ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்க கூட்டு படையினர் மீது ஈரான் ஆதரவு கிளர்ச்சி படைகள் தாக்குதல் நடத்துவது அதிகரிக்கத் தொடங்கியது. இதற்கு எதிராக அமெரிக்காவின் பதிலடியும் அதிகரிக்கத் தொடங்கியது. இது ஈராக்கில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி போராட்டங்களுக்கு வழிவகுத்தது. இதனையடுத்து கடந்த மாத இறுதியில் நடந்த எதிர்ப்பு பேரணியின்போது, பக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டு, சூறையாடப்பட்டது. இந்த வன்முறையில் ஈடுபட்டவர்கள் ஈராக், ஈரான் இராணுவச் சீருடைகளையும் அணிந்திருந்தனர். இது அமெரிக்காவுக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. ஈரானே இந்தத் தாக்குதலுக்கு காரணம் எனக் குற்றம் சாட்டி, இதற்கான பதிலடி மிக பயங்கரமாக இருக்குமென அமெரிக்க அதிபர் டிரம்ப், ஈரானுக்கு எச்சரிக்கையும் விடுத்திருந்தார். இந்நிலையில்தான், ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள விமான நிலையத்துக்கு கடந்த 3ம் திகதி இரவு ஈரானின் இராணுவ தளபதி சுலைமானி வருவதை அறிந்த அமெரிக்க படை, ஆளில்லா விமான தாக்குதலை நடத்தியது. அவர்கள் பயணித்த ஐந்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் இலக்குவைத்து தாக்கி அழிக்கப்பட்டன. வாகனத்தில் இருந்து குதித்துத் தப்பியோடியவர்களும் விரட்டி விரட்டி வேட்டையாடப்பட்டனர். எனினும், இதில், சுலைமானியும், ஈரானின் ஆதரவு படையான ஹசத்தின் துணைத் தளபதி அபு மகதி அல் முகந்திஸ் உள்ளிட்ட 7 பேர் மட்டுமே கொல்லப்பட்டனர்.



கொல்லப்பட்ட சுலைமானி, லெபனான் அல்லது சிரியாவில் இருந்து விமானம் மூலம் பக்தாத் வந்ததாக கூறப்படுகிறது. அவரை ஈராக் அதிகாரிகள் வரவேற்று அழைத்துச் சென்றுகொண்டிருந்தபோதே இந்த தாக்குதல் நடந்துள்ளது. சுலைமானி அணிந்திருந்த மோதிரத்தை கொண்டு அவரது சடலம் அடையாளம் காணப்பட்டதாக ஈராக் அதிகாரிகள் கூறியுள்ளனர். சுலைமானி இறந்ததைத் தொடர்ந்து குத்ஸ் படைப்பிரிவின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் இஸ்மாயில் கானியை ஈரான் நியமித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்க வான்படையால் படுகொலை செய்யப்பட்ட ஈரானிய தளபதியை 2007ம் ஆண்டே பிரித்தானியா குறிவைத்துள்ளதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. பிரித்தானியாவின் SAS என்ற சிறப்பு வான்படை குறித்த திட்டத்தை செயல்படுத்த தயாரானதாகவும் ஆனால் கடைசி நொடியில், அப்போதைய வெளியுறவு செயலாளர் டேவிட் மிலிபாண்ட் தடுத்து நிறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

2007 காலகட்டத்தில் சுலைமானி தெற்கு ஈராக்கில் ஈரானிய சார்பு போராளிக்குழுக்களை ஆதரிப்பதில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இந்தப் போராளிக் குழுக்களானது பிரித்தானிய இராணுவத்தினரை வெடிகுண்டுகள் மற்றும் ஏவுகணைகளால் மிரட்டி வந்துள்ளனர். இதில் பிரித்தானிய தரப்பில் பெரும் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டு வந்துள்ளது. இதற்கு முடிவு கட்டவும், தகுந்த பதிலடி வழங்கும் பொருட்டும் பிரித்தானியாவின் SAS என்ற சிறப்பு வான்படை அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது. சுலைமானியை குறிவைத்து முன்னெடுக்கப்பட்ட இந்த திட்டமானது, டேவிட் மிலிபாண்டினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அந்த காலகட்டத்தில் பணியாற்றிய ஒரு மூத்த பிரித்தானிய இராணுவ பிரமுகர் இந்த தகவலை தற்போது வெளியிட்டுள்ளார். பேச்சுவார்த்தையில் முடித்துக் கொள்ளும் விவகாரம் இதுவென்றும், ஈரானியர்களை கொல்வதற்கு உத்தரவிட முடியாது என அப்போது டேவிட் மிலிபாண்ட் கூறியதாகவும் அந்த இராணுவ பிரமுகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழமுரசு

# சாம்பல் மேட்டிலிருந்தும் மீண்டும் எழுவோம்



ஈழமுரசு தனது பயணத்தை ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து இருபத்து ஆறாவது ஆண்டில் காலெடி எடுத்து வைக்கின்றது. 1995ம் ஆண்டு தைப் பொங்கல் நன்நாளில் '**உண்மையின் முன்னால் நடுநிலைமை இல்லை. ஈழமுரசு என்றும் போராட்டத்தின் பக்கமே நிற்கும்**' என்ற உறுதி மொழியுடன் கப்டன் கஜன் அவர்களால் தொடங்கப்பட்ட ஈழமுரசு இதழின் பயணம், கால் நூற்றாண்டைக் கடந்து இன்னும் இலக்கு நோக்கி மாறாமல் பயணிக்கின்றது.

கடந்த 25 ஆண்டுகளில் இழப்புக்கள், ஆபத்துக்கள், அச்சுறுத்தல்கள் என ஈழமுரசு சந்தித்த தடைகள் ஏராளம். எனினும் அத்தனையையும் கடந்து, இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது சாதனை மட்டுமல்ல, 'புலம்பெயர்ந்த தமிழர்களின் ஊடக வரலாற்றில் ஒரு சரித்திரமும் கூட.'

ஈழமுரசு ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு உள்ளாகவே, அதனை ஆரம்பித்த கப்டன் கஜன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டபோதும், தனது பயணத்தை இடைநிறுத்தாது இன்னும் வீச்சுடன் தொடர்ந்தது. தாயகத்தில் உன்னத போராட்டத்தில் போராளிகளும், மக்களும் குதித்திருந்த வேளையில், அப்போராட்டத்திற்கு பலம் சேர்க்கும் பணியை ஐரோப்பிய நாடுகளைக் கடந்து கனடா, அவுஸ்திரேலியா என புலம்பெயர்ந்த தேசமெங்கிலும் ஈழமுரசு கிளைகள் பரப்பி காத்திரமாகவே புரிந்தது.

பொருளாதார நெருக்கடி ஒருபுறம், இலத்திரனியல் ஊடகங்களின் அதிகரித்த வருகை, சமூக வலைத்தளங்களின் செய்திப் பரிமாற்ற வேகம் என உலகளவில் அச்சு ஊடகங்களுக்கு எழுந்த அச்சுறுத்தல்களை ஈழமுரசும் எதிர்கொண்டது. இணையத்தளங்களின் வருகையால் எத்தனையோ அச்சு ஊடகங்கள் நிரந்தரமாகவே நின்று போயின. எனினும் அவற்றையும் கடந்தும் ஈழமுரசு நின்று நிலைத்தது.

2009 முள்ளிவாய்க்கால் பேரழிவின் முடிவில், தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் மௌனத்தின் பின்னர் ஈழமுரசு சந்தித்த பேராபத்துக்கள் மிக அதிகம். 2009ன் நடுப்பகுதியில் தமிழீழத் தேசியத் தலைவரின் இருப்பை மறுதலித்து வந்த செய்தியை வெளியிடுமாறு கொடுக்கப்பட்ட அழுத்தத்தால், அதற்குப் பணிந்துபோக மறுத்ததால் எழுந்த நெருக்கடியில், மாற்றுவழி ஏதுமின்றி ஈழமுரசு இதழை முதற் தடவையாக இடைநிறுத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. ஈழமுரசு இதழை வெளிக்கொணர்ந்த பூபாளம் நிறுவனமும் அத்துடன் இழுத்து மூடப்பட்டது.

எல்லாம் முடிந்துவிட்டதோ? என்று புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் விரக்த்தியுற்று நின்றவேளை, உண்மை நிலை எதுவென அறிந்துகொள்ள முடியாமல் அவர்கள் துடிதுடித்தவேளை, ஓரிரு மாதங்களில் ஈழமுரசு 'ஊடக இல்லத்தின்' வாசலின் ஊடாக மீண்டும் மீண்டெழுந்து வந்தது. 'உண்மையின் முன்னால் நடுநிலைமை இல்லை' என்ற அதே உறுதியுடனேயே அது வெளிவந்தது.

ஈழமுரசின் மீள் வருகை புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால், பொய்யை உண்மையாக்க முயன்றவர்களுக்கு இது பேரதிர்ச்சியைத் தந்தது. எந்தவித சமரசமுமின்றி விடுதலைப் போராட்டத்தின் அழிவிற்கு துணைபோனவர்களையும், துரோகம் புரிந்தவர்களையும் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது.

2009 மே மாதத்திற்குப் பின்னர், மழைக்கு வெளிவரும் புற்றீசல்கள் போன்று, மழைக்கு முளைத்த காளான்கள் போன்று, புதிது புதிதாக கிளம்பிவந்த பொறுப்பாளர்களையும், கட்டமைப்புக்களையும் ஈழமுரசு உள்வாங்கவும் ஏற்றுக்கொள்ளவும் மறுத்ததால் சந்தித்த ஆபத்துக்களும், நெருக்கடிகளும் மிக அதிகம்.

ஒரு கட்டத்தில் இது ஈழமுரசின் பொறுப்பாளர் மீது படுகொலை முயற்சி மேற்கொள்ளும் வரைக்கும் சென்றது. இதனால், பல ஆண்டுகளாக இயங்கிவந்த அலுவலகத்தையும் இழந்து, ஈழமுரசு மீண்டும் இரண்டாவது தடவையாக இடைநிறுத்தப்படவேண்டிய நிலைக்குத் தள்ளியது.

பிரெஞ்சுக் காவல்துறையின் துரித நடவடிக்கையும், நீதிமன்றத்தின் துரித விசாரணையும் குற்றவாளிகளை அடையாளம் காண உதவியபோதும், ஈழமுரசு மீண்டும் மீண்டெழுந்து வருவதில் பாரிய சாவல்களைச் சந்தித்தது. மீண்டும் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிப்பதுபோன்ற நிலைமை இது.

ஆனாலும், ஈழமுரசு சோர்ந்து போய்விடவில்லை. இன்னும் புதிய வீச்சுடன் அது மூசியெழுந்து வந்தது.

இந்திய இராணுவத்துடன் 1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் போர் ஏற்பட்டபோது, யாழ்ப்பாணத்தில் இருந்த ஈழமுரசு அலுவலகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அலுவலகத்தை இழந்தபோதும், பத்திரிகையை கைவிடாது பல்வேறு இடங்களிலும் மாறி மாறித் தலைமறைவாக இருந்து அதனை வெளிக்கொண்டுவந்தார்கள். மக்களுக்கு உண்மைகளை எடுத்துச்சொன்னார்கள்.

இன்று பிரான்சில் இருந்து வெளிவரும் இந்த ஈழமுரசும் அவ்வாறான ஒரு நடமாடும் நிலையில் இருந்துகொண்டுதான் கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த இதழை தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வந்து கொண்டிருக்கின்றது.


கடந்த பத்து ஆண்டுகளாக இந்த ஈழமுரசை நிறுத்துவதற்காக விளம்பரதாரர்களின் விளம்பரங்களைத் தடுத்து பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்த முனைந்தார்கள். உயிரச்சுறுத்தல்களை ஏற்படுத்த விளைந்தார்கள். ஈழமுரசுக்கு ஆதரவு வழங்குபவர்களை தடுப்பதற்கு முனைந்தார்கள். இன்னும் இப்படி எத்தனையோ...

ஆனாலும் அவற்றைக் கடந்தும் ஈழமுரசு பயணத்தைத் தொடர்ந்தது. அப்போது மீண்டும் காத்திருந்தது இன்னொரு ஆபத்து. இம்முறை இது புதிய வடிவில்..! வெளியில் இருந்து வரும் ஆபத்துக்களை மட்டுமே எதிர்பார்த்துக் காத்திருந்தபோது, உள்ளுக்குள்ளேயே புற்றுநோயாக வளர்ந்துகொண்டிருந்த துரோகத் தனத்தை கண்டுகொள்ளமுடியவில்லை. இறுதி நேரத்தில் எனினும் கண்டுணர்ந்துகொண்டதால் அப்பாரிய சதிக்குள் இருந்தும் ஈழமுரசு மீண்டெழுந்துகொண்டது.

விடுதலைப் புலிகளுக்கு பின்னரான கடந்த பத்து ஆண்டுகளை ஈழமுரசு கடந்து வந்திருப்பதென்பது சாதாரணமல்ல. ஈழமுரசைப் பொறுத்தவரை, ஈழமுரசுக்கும் இதுவொரு 'நெருப்பாற்று நீச்சலில் பத்தாண்டுகளே.'

இத்துடன் இவை முடிந்துவிடப் போவதில்லை. இன்னும் இன்னும் இவை தொடரவே செய்யும். ஆனாலும் இவற்றையும் மீறி, உயிரிழந்த பின்னரும் உயிர்த்தெழுந்துவரும் பீனிக்ஸ் பறவைபோல், தலைவனையும், மாவீரர்களையும், தமிழீழ விடுதலையையும் நேசிக்கும் ஈழமுரசு சாம்பல் மேட்டிலிருந்தும் இலக்கை அடையும்வரை மீண்டும் மீண்டும் தீப்பிழம்பாக எழுந்துவரும்.

# ஒரு தீ தன்னைத்தானே தீமூட்டிக்கொண்டது



ஒரு சகாப்தம்
தன்னைத் தானே
கறைப்படுத்திக் கொண்டது
மனித நேயத்தின்
சிகரத்தைத் தொலைத்ததால்.

சமாதனக் கரு சுமந்து
போர் முகம் சென்ற புறா
ஆழ்கடல் நடுவே
அஸ்தமித்துப் போனதாம்.

காந்தியின் கைத்தடி
மீண்டும் ஒருமுறை
தவறிப்போனதால்
ஒரு தீ
தன்னைத்தானே
தீ மூட்டிக்கொண்டது.

சிதைந்த உடலும்
பிளந்த கபாலமும்
எலும்பும் சதையுமாய்
சிந்திய இரத்தமும்
ஒப்பாரி ஓலமுமாய்
எங்கள் வாழ்வை மிதித்து
மண்ணை மிதித்து நகர்ந்த
அசோகச் சக்கரம்
மீண்டும் ஒருமுறை...


கிட்டு அண்ணா!
இந்தப் பெயருக்குத்தான்
எத்தனை முகம்கள்
கொதிக்கும் நெருப்பாய்
உருகும் பனியாய்
சுழலும் புயலாய்
வருடும் தென்றலாய்
இன்னும் இன்னும்...



விடுதலைப் புலிகளின்
மூத்த தளபதியே!
நீங்கள் எரிந்த
கடலலைகள்
நாளை கரைவந்து
சேர்கையில்
உங்களின் மூச்சை
சுவாசித்துக்கொண்டு
எங்களின் தேசம்
எழுந்து நிமிர்ந்து நிற்கும்.

– கப்டன் கஜன்

நன்றி : எரிமலை (மார்ச் 1993)



## கசிப்பை ஒழிக்க எத்தனை திண்டாட்டம்! குழந்தையுடன் தாய் வீதியில் போராட்டம்

ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் யாரும் கசிப்புக் காய்ச்சுவதில்லை. அதனையும் மீறிக் காய்ச்சியவர்கள் தமிழீழக் காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். ஆனால், இப்போது நிலைமை தமிழர் தாயகத்தில் தலைகீழாக மாறிப்போய் விட்டது. போதை வஷ்துக்களில் இருந்து கசிப்பு வரை அங்கு சர்வசாதாரணமாகிவிட்டது. வீட்டுக்கு ஒருவரென்றாலும் போதையில் தள்ளாடாமல் இருப்பதைக் காண்பது அரிதிலும் அரிதென்றாகிவிட்டது.

இந்தநிலையில்தான் கிளிநொச்சி கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் காந்திக்கிராமத்தில் அதிகரித்துள்ள



கசிப்பை ஒழிக்காது விடின் தான் குழந்தையுடன் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக முப்பது வயது பெண் ஒருவர் 9 மாதக் குழந்தையுடன் வீதியில் தனி நபராக போராட்டத்தில் ஈடுப்பட்டார். காந்தி கிராமத்தில் கசிப்பு பாவனை அதிகரித்துள்ளது எனவும், இதனால் தன்னைப் போன்ற பெண்கள் நிம்மதியாக வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ள இப்பெண், பெண்களுக்கான பாதுகாப்பான சூழல் காணப்படவில்லை, கசிப்பு பாவனையாளர்களால் அச்சமான நிலைமையே ஏற்பட்டுள்ளது. குடும்பத்தில் நிம்மதியில்லை, பாடசாலை பிள்ளைகள் நிம்மதியாக படிக்க முடியாதுள்ளது. குறிப்பாக பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது. வீடுகளின் வாசல்கள் வரை கசிப்பு விற்பனை வந்துவிட்டது. எப்பொழுதும் மிகவும் மோசமான வார்த்தைப் பிரயோகங்கள், இப்படி சொல்ல முடியாத அளவுக்கு கசிப்பு பாவனையால் அவலம் ஏற்பட்டுள்ளது. எனவே இனியும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையிலேயே நான் எனது குழந்தையுடன் இம்முடிவுக்கு வந்துள்ளேன். இனியும் என்னால் இந்த அவலத்தை அனுபவித்துக்கொண்டு வாழ முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். எமது கிராமத்தின் கசிப்பு விடயம் தொடர்பில் கிராம அலுவலர், மற்றும் காவல்துறையினருக்கும் அறிவித்தும் அவர்களால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொங்கலுக்கு சிறீலங்கா செல்லும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்!

எதிர்வரும் ஜனவரி மாதம் 14, 15ம் திகதிகளில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் (Sergei Lavrov) சிறீலங்காவிற்கும் இந்தியாவுக்கும் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மரியா ஸகரோவா தெரிவித்துள்ளார்.



ஈரான் மற்றும் சீனாவுடன் இந்தியப் பெருங்கடல் மற்றும் ஓமான் வளைகுடாவில் கூட்டு கடற்படைப் பயிற்சியை 2019 டிசம்பரில் நடத்திய பின்னர், ரஷ்யா தனது வெளியுறவுத்துறை அமைச்சரை சிறீலங்காவிற்கு அனுப்பி வைக்கிறது. அவர் மறுநாள் இந்தியாவின் புதுடில்லிக்குச் செல்வார்.

இந்தப் பயணத்தின்போது அவர், இனப்படுகொலையாளியும் சிறீலங்கா ஜனாதிபதியுமான கோத்தபாய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடல் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது ரஷ்யாவிற்கும் சிறீலங்காவிற்கும் இடையிலான தற்போதைய உறவுகள், அரசியல் உரையாடலை ஊக்குவிப்பதற்கான வாய்ப்புகள், வர்த்தக–பொருளாதார, மனிதாபிமான மற்றும் பிற துறைகளில் ஒத்துழைப்பை வளர்ப்பது, அத்துடன் இருதரப்பு ஒப்பந்தம் மற்றும் சட்ட அடிப்படையை விரிவாக்குவது குறித்து கவனம் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, இந்திய தலைநகரில் நடைபெறவிருக்கும் ரைசினா உரையாடல் மாநாட்டில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சரும் பங்கேற்கத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சீனாவுக்கு புறப்படும் கோத்தா! மோடி தொலைபேசி உரையாடல்




தமிழினப் படுகொலையாளியும் சிறீலங்கா ஜனாதிபதியுமான கோத்தபாய ராஜபக்ச இம் மாதம் சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். பெரும்பாலும் அடுத்த வாரம் அளவில் அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து, அவர் மேற்கொள்ளும் இரண்டாவது பயணமாக இது அமைந்துள்ளது.

கடந்த மாதம் சீனத் தூதுவர் மூலம் சீனாவுக்கு வருமாறு அந் நாட்டு ஜனாதிபதி ஜின்பிங் விடுத்த அழைப்புக்கு இணங்கவே கோத்தபாய இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். இந்தப் பயணத்தின் போது இரு நாட்டு தலைவர்களுக்கிடையிலும் பரஸ்பட விடயங்கள், முதலீட்டு நடவடிக்கைகள், சுற்றுலா மற்றும் இருதரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தும் விடயங்கள் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் சிறீலங்கா ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அது மாத்திரமில்லது ஹம்பாந்தோட்ட துறைமுகம் உட்பட இலங்கையில் சீனா மேற்கொண்டுள்ள முதலீட்டு விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

இதுஇவ்வாறிருக்க, கோத்தபாய ராஜபக்ச மற்றும் மகிந்த ராஜபக்சவுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி உரையாடலொன்றை மேற்கொண்டுள்ளார். கடந்த முதலாம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடி கோத்தாவிற்கு புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதுடன், கருத்துக்களைப் பரிமாறியதாகவும், பின்னர் சிறீலங்காவின் பிரதமரான மகிந்த ராஜபக்சவுடன் உரையாடியதாகவும் கூறப்படுகின்றது. இதன்போது, நரேந்திர மோடி அயல் நாடுகளிற்கு முன்னுரிமை என்ற இந்தியாவின் கொள்கையையும் இருவரிடமும் வலியுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதன்போது, 2020ல் இரு நாடுகளும் தங்கள் மத்தியிலான நட்புறவை மேலும் விரிவுபடுத்தும் என கோத்தாபய ராஜபக்ச மோடியிடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார். 9ம், 10ம் திகதிகளில் இவர் இந்தியாவுக்கு பயணம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர் அமைச்சராகப் பதவியேற்றதன் பின்னர் செல்லும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தன்னெழுச்சி தைப்பொங்கலும் பண்பாட்டுப் பெருவிழாவும்

தமிழ் சமூகத்தின் தொன்மையான கலாச்சார பாரம்பரியங்களைப் பேணும் வகையில் வடகிழக்கு மாகாணங்களை சேர்ந்த இளைஞர்கள், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் என சமூகத்தில் உள்ள அத்தனை இளைஞர்களும் தாமாக முன்வந்து தைப்பொங்கல் நிகழ்வையும் பண்பாட்டு பெருவிழாவையும் யாழ் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் 19ம் திகதி அன்று நடத்தவுள்ளனர்.

காலத்துக்கு காலம் நமது பண்பாட்டு கலாசார விழுமியங்கள் அழிந்த வண்ணமே உள்ளன. இவற்றைப் பேணிப் பாதுகாக்கும் முகமாகவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள இளைஞர்களின் உறவை மென் மேலும் பலப்படுத்தவும் தமிழ் சமூகத்தில் பல்வேறு பிரிவுகளாக பிரிந்து இருக்கின்ற பல குழுக்களை ஒன்றிணைக்கவும் தன்னெழுச்சியாக முன்வந்த இளைஞர்கள் இப் பொங்கல் விழாவையும் பண்பாட்டுப் பெருவிழாவையும் திட்டமிட்டுள்ளார்கள்.

தாமாக முன் வந்த இளைஞர்கள் 'தமிழ் இளையோர் மக்கள் இயக்கம்' என்ற பெயரில் நடாத்தும் தைப்பொங்கல் விழாவிற்கு தேவையான அனைத்தையும் 'ஒருபிடி அரிசியில் உரிமைப் பொங்கல்' என்னும் தொனிப்பொருளில் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

## பொங்கலுக்கு விக்கினேஸ்வரன் தலைமையில் புதிய கூட்டணி



தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் வடமாகாண சபை முதலமைச்சருமான சி.வி. விக்கினேஸ்வரன் தலைமையில் புதிய அரசியல் கூட்டணி தைப்பொங்கலுக்கு முன்னர் அமைக்கப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), என்.சிறிகாந்தா தலைமையிலான தமிழ் தேசியக் கட்சி ஆகியமூன்றுகட்சிகளும் ஒன்றிணைந்தே இந்த கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. மூன்று கட்சிகளும் இணைந்து விக்கினேஸ்வரன் தலைமையில் கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுவிட்டு ஏனைய கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளை அதில் இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. சி.வி. விக்கினேஸ்வரன் இந்தியா சென்று வந்ததன் பின்னர், இந்த ஒப்பந்தத்தில் மூன்று கட்சிகளும் கைச்சாத்திட்டு கூட்டணி அமைக்கவுள்ளதாக தெரியவருகிறது.

'தாயகத்தில் இருந்து'
**காந்தரூபன்**

# கோத்தபாயவின் வெறித்தனங்களை சர்வதேசத்தின் காதுகளுக்கு கொண்டு செல்லும் பொறுப்பு யார் கையில்?



இலங்கைத்தீவு சிங்கள மக்களுக்கு மாத்திரமே உரிய நாடு என்பதையும் தமிழர்கள் விரும்பினால் இங்கு வாழ முடியும் என்பதையும் சிங்களக் கடும்போக்குவாதியும் தமிழின இனப்படுகொலைக் குற்றவாளியும் ஆகிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மீண்டும் ஒரு தடவை தெளிவாக உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற தேர்தலில் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் அதிகப்படியான வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ச, கடந்த 03 ஆம் திகதி தனது தலைமையில் புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே இலங்கைத் தீவில் சிங்கள மக்களுக்கான தனித்த உரிமை பற்றிய அறிவிப்பை மீள வலியுறுத்தினார்.

இலங்கைத் தீவில் ஒற்றையாட்சியை எப்போதும் பாதுகாப்பார் எனக் கூறிய கோத்தபாய, பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்க மாட்டார் எனவும் கூறியிருக்கின்றார்.

தேர்தல் வெற்றிக்கு பின்னர், ஏலவே நாடாளுமன்ற அமர்வைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் இருந்த போதிலும், அதைப் பிற்போட்டுவந்தார் கோத்தபாய. இதுவரை ஆட்சி செய்த ஜனாதிபதிகள் அத்தனை பேருக்குள்ளும் தன்னை முற்போக்குவாதியாகக் காட்டிக்கொள்வதற்கு கோத்தபாய விரும்புகின்றார். சிறீலங்கா நாடாளுமன்ற சம்பிரதாயங்கள், பொது வெளியில் செயற்படும் சம்பிரதாயங்களைக்கூட அவர் மாற்றியமைத்திருக்கின்றார். போர்க்-குற்றங்களில் இருந்து விடுபட்டு தன்னைப் புனிதவானாகக் காட்டிக்கொள்ள அவர் விளைகின்றார்.

சிறீலங்கா ஜனாதிபதியாகக் கோத்தபாய பதவியேற்றதில் இருந்து நாடாளுமன்றில் அக்கிராசன உரை ஆற்றும் வரையான காலத்தில் எந்தவொரு இடத்திலும் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எந்தவொரு வார்த்தைகளையும் வெளிப்படுத்தவில்லை. நாடாளுமன்றில் கன்னியுரையான அக்கிராசன உரையிலும் தமிழ் மக்கள் தொடர்பாக அவர் எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தவில்லை.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவுடன் முதல் வெளிநாட்டு அரசுமுறைப் பயணமாக இந்தியாவிற்குச் சென்ற கோத்தபாயவை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து உரையாடினார். அப்போது, தமிழ் மக்களின் இனப் பிரச்சினை விடயத்தில் கருத்துக்களை முன்வைத்த மோடி, 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அவசியத்தையும் எடுத்துரைத்திருந்தார்.

ஆனால், மோடிக்கு நேரடியாக - முகத்துக்கு முன்னால் - பதிலிறுப்பதைத் தவிர்த்துக்கொண்ட கோத்தபாய, சந்திப்பை முடித்துக்கொண்டு, இந்தியாவில் இருந்து திரும்புவதற்கு முன்னர், இந்தியாவில் வைத்தே மோடியின் கருத்தை நிராகரித்திருந்தார். 13 ஆவது திருத்தச் சட்டத்தின் சில சரத்துக்கள் தற்போதும் சிறீலங்காவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது எனக் கூறிய அவர், குறித்த திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது எனத் திட்டவட்டமாக அறிவித்தார்.

பிராந்திய வல்லரசின் வேண்டுகோளை, அதுவும் அந்த வல்லரசுக்கும் சிறீலங்காவிற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட வலுவான ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்ட ஒரு சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாது என கோத்தபாய அறிவித்தமை குறித்து இந்தியா இதுவரை எந்தவித வெளிப்பாட்டையும் காட்டவில்லை.

நீடித்து, நீறுபூத்த நெருப்பாக எரிந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக்காணுமாறு இந்தியா மட்டுமன்றி பன்னாடுகளும் சிறீலங்காவின் புதிய ஆட்சிபீடத்திடம் கோரிக்கை விடுத்துவருகின்றன. ஆனால், சிங்கள ஆட்சியாளர்களால் அத்தனை கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டே வருகின்றன. இதுவரை இருந்துவந்த ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் விடயத்தில் கருத்தியல் ரீதியாகவேனும் வெளிப்பாடுகளை மேற்கொண்ட போதிலும், கோத்தபாய ராஜபக்ச தமது கடும்போக்கு மனப்பதிவை மட்டும் வெளிக்காட்டுகின்றார்.

சிறீலங்காவின் தற்போதைய ஆட்சி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கடும் விசனத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது. ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் நாடாளுமன்ற அக்கிராசன உரை தொடர்பாகவும் கூட்டமைப்பு ஏமாற்றத்தை வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை முன்னைய மகிந்த ராஜபக்ச ஆட்சியில் மறைமுகமாக அரசை எதிர்ப்பது போல நடித்துக்கொண்டு அந்த அரசின் சலுகைகளை அனுபவித்தனர். இதனால் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டது. மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் நேரடியாகவே அரசை ஆதரித்து, அரசின் அதிகூடிய சலுகைகளை அனுபவித்தனர். ஆனால், தற்போது கோத்தபாய ராஜபக்சவால் கூட்டமைப்பினர் நிராகரிக்கப்பட்டிருக்கின்றனர். இதனாலேயே அவர்கள் கவலை, ஏமாற்றம் எனக் கூறித் திரிகின்றனர்.

இன அழிப்பு இடம்பெற்ற நாடொன்றில், கடும்போக்குவாதிகளின் அரசாங்கத்தினது செயற்பாடுகள் அந்த நாட்டின் மீது சர்வதேசத் தலையீட்டை அதிகரிக்க உதவும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. தற்போது சிறீலங்கா மீது சர்வதேசத் தலையீட்டை உள்ளீர்ப்பதற்கான காலம் கனிந்துள்ளது. தமிழ்த் தரப்பு இந்தச் சூழ்நிலையைச் சரியாகப் பயன்படுத்தப்போகின்றதா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கான நெருக்கடிகள் அதிகரித்தவண்ணம் உள்ளன. பாதுகாப்பு நெருக்கடிகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. ஈ.பி.டி.பி உள்ளிட்ட அரச ஒட்டுக்குழுக்கள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. ஈ.பி.டி.பியை விட்டு விலத்திவைக்கப்பட்ட கமலேந்திரன், திரிலோகநாதன் உள்ளிட்ட கொலைகாரர்கள் மீண்டும் கட்சியில் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வாளர்கள் மீண்டும் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர். தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற தமிழ்த் தேசிய எழுச்சியை அடக்குவதிலும், போராட்டங்களை முடக்குவதிலும் கோத்தபாய அரசுக்கு இவர்கள் தீவிர பங்களிப்பை வழங்கிவருகின்றனர். வீதிகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வழிமறிப்புக்கள், திடீர் சோதனைகள் நடைபெற்றுவருகின்றன. முக்கிய சந்திகளில் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அரசின் உத்தியோகபூர்வ வர்த்தமானிப் பத்திரிகை அறிக்கை மூலம் நாட்டின் பாதுகாப்பு முப்படையினரிடம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறீலங்காவில் ஜனநாயக ஆட்சி என்பது குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. 20 வருடங்களாக சிறீலங்கா இராணுவத்தில் பணியாற்றிய கோத்தபாய ராஜபக்ச ஆட்சிப்பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து படையினருக்கான சலுகைகளும் அதிகாரங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆக, இலங்கைத் தீவில் தற்போது இராணுவ ஆட்சியே நடைபெற்றுவருகின்றது என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

**இந்த விடயத்தை சர்வதேசத்தின் காதுகளுக்கு கொண்டுசெல்லும் பொறுப்பை எடுக்கப்போவது யார்?**
**இந்த விடயத்தில் புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழர் கட்டமைப்புக்களின் பொறுப்பு என்ன?**
**தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளின் பொறுப்பு என்ன?**
**தாயகத்தில் உள்ளவர்களையும் புலம்பெயர் தேசத்தவர்களையும் ஒருங்கிணைக்கப்போவது யார்?**
**தாயகம், தேசியம் சுயநிர்ணய உரிமைக்காக தொடர்ந்து உறுதியோடு குரல்கொடுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வகிபாகம் என்ன? இந்தக் கேள்விகள் தமிழ் மக்களிடம் எழுந்திருக்கின்றன.**

தொடர்ச்சி 38ம் பக்கம்

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## யாழில் கிணற்றில் அழுகிய நிலையில் சிசுவின் சடலம்!

புங்குடுதீவு 11ம் வட்டாரம் பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து அழுகிய நிலையில் ஆண் சிசுவின் சடலம் ஒன்று கடந்த 4ம் திகதி மீட்கப்பட்டுள்ளது. குழந்தை பிறந்து 2 நாள்கள் இருக்கும் என்று கூறப்படுகின்றது. மீட்கப்பட்ட சடலத்தில் இருந்து தொப்புள் கொடியும் காணப்படுகிறது. கொலை செய்யப்பட்டு யூரியா பையில் சுற்றப்பட்ட நிலையில் சிசு கிணற்றில் போடப்பட்டுள்ளது. எனினும் யூரியா



பையுடன் வேறு வேறாக பிரிந்த நிலையில் சடலம் காணப்பட்டது.

அந்தப் பகுதிக்கு அருகில் உள்ள பற்றைக் காட்டுக்குள் சென்ற ஒருவர் துர்நாற்றம் வீசுவதை கண்டு கிணற்றை எட்டிப் பார்த்து தகவல் வழங்கியுள்ளார். சிசுவின் சடலம் தொடர்பில் புங்குடுதீவு 11ம் வட்டாரப் பகுதிக்கு பொறுப்பான மருத்துவ மாது மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் உதவியுடன் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிசுவின் தாயார் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சிறீலங்காக் காவல் துறையினர் தெரிவிக்கின்றனர்.

## வடக்கு, கிழக்கிற்கு பெண் ஆளுநர்கள்

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக திருமதி பி.எஸ்.எம் சாள்ஸ் கடந்த 30ம் திகதி இனப்படுகொலையாளியும் சிறீலங்கா ஜனாதிபதியுமான கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். இதன்படி வடக்கிற்கும், கிழக்கிற்கும் இரு பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கிற்கு தமிழ்ப் பெண் ஒருவரை நியமித்த அதேவேளை கிழக்கிற்கு தமிழ் கொஞ்சம் கூடத் தெரியாத சிங்களப் பெண்ணை கோத்தபாய நியமித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## படுகொலை செய்யப்பட்ட 5 தமிழ் மாணவர்களின் நினைவேந்தல்

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட 5 தமிழ் மாணவர்களின் 14ம் ஆண்டு நினைவேந்தல் கடந்த 2ம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது. திருகோணமலை கடற்கரையில் காந்தி சதுக்கத்திற்கு அண்மையில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி திருகோணமலை கடற்கரையில் ஐந்து தமிழ் மாணவர்கள் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் க.பொ.த உயர் தரப் பரீட்சையை எழுதிவிட்டு பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த நிலையிலேயே படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

# செய்திகளும் எழும் கேள்விகளும்



திருமகள்

**செய்தி:-** தேசிய கீதத்தை இரண்டு மொழிகளில் பாடினால் நாட்டில் இரண்டு இனங்கள் இருப்பது போன்ற தோற்றப்பாடு ஏற்பட்டுவிடும் என்று சிறீலங்கா அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** அப்படி என்றால் வங்காள மொழியில் மட்டும் தேசிய கீதம் பாடப்படும் இந்தியாவில் வங்காளிகள் மட்டும் தான் வசிக்கின்றார்களா?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** தமிழ் மொழியில் சிறீலங்காவின் தேசிய கீதம் பாடப்படுவதற்கு அனுமதி வழங்கப்படாது விட்டால், தேசிய கீதத்தைத் தமிழர்கள் பாடாமலேயே விட்டு விடுவார்கள் என்று எம்.ஏ.சுமந்திரன் எச்சரித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** சிறீலங்காவின் தேசிய கீதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பின் வரிகளில் ஏதாவது ஒன்று சுமந்திரனுக்கு ஞாபகத்தில் உள்ளதா?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** ரணிலின் ஆட்சியில் வழங்கப்பட்ட சொகுசு பங்களாவை விட்டு தானாகவே வெளியேற இரா.சம்பந்தன் முன்வர வேண்டும்



என்று ஆளும் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

**எழும்கேள்வி:-** குறித்த பங்களாவை வயோதிபர் மடமாகக் கருதி நிரந்திரமாகச் சம்பந்தர் தங்கி விடுவார் என்று சிறீலங்கா அரசாங்கம் அஞ்சுகின்றதோ?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** இந்தியப் படைகளின் காலத்தில் காணால்போன தனது தம்பியை இப்பொழுதும் தான் தேடுவதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** சூளைமேட்டுப் படுகொலை வழக்கில் இவரைத் தேடும் தமிழக காவல்துறைக்கு தகவல் தெரிவித்தால் உதவி செய்ய மாட்டார்களா?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** தனது இறுதிக் காலத்தில் தமிழரசுக் கட்சியைத் தந்தை செல்வா கைவிட்டு விட்டார். அவரது கல்லறையில் உதயசூரியன் சின்னம் தான் பொறிக்கப்பட்டுள்ளது என்று எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** ஆனந்தசங்கரி ஐயாவுடன் புளியம்பொக்கணைக்கு சென்று உடும்புக்கறி தின்பதற்கு எம்.கே.சிவாஜிலிங்கம் ஆசைப் படுகின்றாரோ?

♦ ♦ ♦ ♦ ♦


**செய்தி:-** ஆங்கிலப் புத்தாண்டு, தைப் புத்தாண்டு, சித்திரைப் புத்தாண்டு என்று மூன்று தடவைகள் தமிழர்கள் புத்தாண்டு கொண்டாடுகிறார்கள்.

**எழும்கேள்வி:-** ஓராண்டில் மூன்று ஆண்டுகளைத் தமிழர்கள் இழக்கின்றார்களோ?

# இது சிறீலங்காவின் நிலை 2020ம் ஆண்டில் 4.8 மில்லியன் டொலர் கடனை மீளச் செலுத்த வேண்டும்

உலகெங்கும் கடன்களை வாங்கி, மேலும் மேலும் கடன்களை வாங்கிக்கொண்டிருக்கும் சிறீலங்கா கடன்களுக்குள் மூழ்கிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில் இந்த ஆண்டு மட்டும் 4.8 மில்லியன் டொலர்கள் கடனை மீளச்செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா மத்திய வங்கி ஆளுநராக இனப்படுகொலையாளியும் சிறீலங்கா ஜனாதிபதியுமான கோத்தபாய ராஜபக்சவினால் அண்மையில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் டபிள்யூ.டி லக்ஸ்மன் இது குறித்துத் தெரிவித்துள்ளதாவது, நாடு பாரிய நெருக்கடிக்குள் உள்ளது. ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி கடந்த காலங்களில்




3 வீதத்திற்கும் குறைந்த தன்மையையே காட்டுகின்றது. எவ்வாறு இருப்பினும் 2020ம் ஆண்டில் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 4 தொடக்கம் 4.5 வீதமாக வளர்ச்சி காணும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனவரி மாதத்தில் ஜனாதிபதியினால் அரசாங்க கொள்கை அறிக்கையொன்று வெளியிடப்படவுள்ள காரணத்தினால் 6 வீத வளர்ச்சி அல்லது 6.5 வீத வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும் என அரசாங்கம் கூறுவதாகவும் அது எந்தளவு சாத்தியம் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். 2020ம் ஆண்டுக்கான சர்வதேச கடனாக 4.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட வேண்டும். எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இதனை செலுத்த வேண்டும். ஆகவே இதனை கையாளும் மாற்று நடவடிக்கைகள் குறித்தும் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். சர்வதேச நிதி பெறுகை, உற்பத்தி திறன்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். மாற்று நடவடிக்கை எதனை கையாள்வது என்பது குறித்து அரசாங்கம் தீர்மானம் ஒன்றினை முன்னெடுக்க வேண்டும். இந்த ஆண்டில் அரச நிதி விரையம் அதிகமாக இருந்துள்ளது. இதுவும் நெருக்கடிகளுக்கு காரணமாக அமையும் என்று அவர் கூறியுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, வயதுபோன முதியவரான பேராசிரியர் டபிள்யூ.டி லக்ஸ்மன் சிறீலங்கா மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டதற்கு சிறீலங்காவின் முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர கண்டனம் வெளியிட்டுள்ளார். பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன் ஒரு பல்கலைக்கழக கல்வியியலாளராக இருக்கலாம். ஆனால் சுமார் எண்பது வயதை அண்மித்த ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்க வேண்டுமா என்று மங்கள சமரவீர கேள்வி எழுப்பியிருக்கிறார்.

## தேர்தலை நடத்த 700 கோடி ரூபாய்!

இம்முறை பொதுத் தேர்தலை நடத்த 650 கோடி தொடக்கம் 700 கோடி ரூபாய்கள் தேவைப்படும் எனவும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பே இந்த செலவுகளுக்கு காரணம் எனவும் சிறீலங்கா தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார். அத்துடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைக்கும் நோக்கத்தில் இருக்கின்றார் என்பது அறிய முடிகின்றது. அப்படியென்றால் மார்ச் மாதம் முதலாம் திகதி கலைத்தாலும் அன்றில் இருந்து ஒன்றரை மாத காலத்துக்குள் தேர்தல் பிரசார காலம் முன்னெடுக்கப்படும். இந்த கால கட்டத்தில் தேர்தல் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும், ஜனாதிபதி தேர்தலை போல் அல்லாது பொதுத் தேர்தலில் செய்ய முடியாது. ஆகவே இந்த விடயத்தில் கடினத்தன்மை இருக்கும். 2019ம் ஆண்டுக்கான தேர்தல் பெயர் பட்டியல் உருவாக்கப்பட வேண்டும். 18 வயதை தாண்டிய வாக்காளர்கள் பெயர் பட்டியல் வழமையாக பெப்ரவரி மாதத்தில் தான் முன்னெடுக்கப்படும். மார்ச் மாதம் முதலாம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் ஏப்ரல் மாதம் 23ம் திகதி தேர்தலை நடத்த முடியும் என அவர் கூறினார்.



சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
THE TRAVEL COMPANY
Tél: 01 34 29 08 51 / Mob: 06 58 75 05 09
thetravelcompanyparis@gmail.com

# மேற்குலகம் தமிழர்களைக் கைவிடுகின்றதா, கைவிடுகின்றதா? 5

கலாநிதி
ர.சிறீஸ்கந்தராஜா

## பன்முகப்படுத்தப்பட வேண்டிய ஈழத்தமிழர்களின் வெளியுறவுக் கொள்கை

இதுவரை காலமும் இல்லாத அளவிற்கு ஈழத்தமிழர்களுக்கான கதவுகளை திறக்க வைக்கக்கூடிய ஆண்டாக 2020ஆம் ஆண்டு முகிழ்த்துள்ளது.

ஒருபுறத்தில் ஈழத்தீவில் கோத்தபாய ராஜபக்சவின் பதவியேற்புடன் தலைதூக்கத் தொடங்கியிருக்கும் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதம்.

மறுபுறத்தில் ஈழத்தீவு மீதான தனது பிடியைப் பொருண்மியத் தளத்தில் இறுக்கத் தொடங்கியிருக்கும் சீனா. இன்னொரு புறத்தில் மீண்டும் உலக வல்லாதிக்க சக்தியாக உருவெடுக்கும் கனவில் தனது பார்வையை இந்து சமுத்திரத்தையும், ஈழத்தீவையும் நோக்கித் திருப்பியிருக்கும் ரசியா. இதனால் தனது உலக வல்லாதிக்க நிலை சீர்குலைந்து விடும் என்ற அங்கலாய்ப்பில் வியூகம் வகுக்கும் அமெரிக்கா. எடுப்பார் கைப்பிள்ளை போல் அமெரிக்காவின் பாதுகாப்பு வியூகங்களுக்கு ஏற்ப தமது வெளியுறவுக் கொள்கைகளை நெரிக்கும் ஏனைய மேற்குலக நாடுகள். இவையெல்லாவற்றிற்கும் இடையில் நிகழும் போட்டியில் தனது வல்லரசுக் கனவையும், பிராந்திய ஆதிக்கத்தையும் பேண முற்படும் இந்தியப் பேரரசு.

இவ்வாறு கண்கொத்திப் பாம்புகள் போன்று ஈழத்தீவை மையப்படுத்தித் தமது வியூகங்களை பிராந்திய - உலக வல்லரசுகள் வகுப்பதானது ஈழத்தமிழர்களுக்கான வாய்ப்புக்களை உள்ளடக்கிய ஆண்டாக 2020ஆம் ஆண்டை முகிழ்க்க வைத்துள்ளது என்றே எதிர்வுகூற வைக்கின்றது.

அதேநேரத்தில் இவ்வாண்டைத் தமது அரசியல் வேணவாவை முன்னோக்கி நகர்த்துவதற்கான திறவுகோலாக ஈழத்தமிழர்கள் மாற்றியமைப்பது என்பது நாம் வகுக்கப் போகும் வெளியுறவுக் கொள்கையிலேயே தங்கியுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

ஈழத்தமிழர்களைப் போன்று தொடர்ச்சியாக இன அடக்குமுறைக்கும், இன வழிப்பிற்கும் ஆளாகும் ரொகிங்கியா, பாலஸ்தீனம் ஆகிய தேசங்களுக்கு கடந்து போன 2019 ஆம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டு.

முதலாவதாக ரொகிங்கியர்கள் தமக்கென்றொரு தனிநாட்டைக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் தமது எல்லைக்குள் ரொகிங்கியர்களை அடித்து விரட்டிப் பன்னாட்டுக் குற்றங்களில் மியன்மார் (பர்மா) ஈடுபடுவதாக வங்காளதேசம் (பங்களாதேஸ்) கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இக் குற்றங்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் நியாயாதிக்கம் தமக்கு இருப்பதாகக் கடந்த 06.09.2019 அன்று பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து மியன்மாருக்கு எதிராகக் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்னோடியாக பூர்வாங்க விசாரணைகளைத் தொடங்குவதற்கு 14.11.2019 அன்று தமது வழக்குத் தொடுநருக்கு பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் அனுமதியளித்தது.

ஏக காலத்தில் ஐ.நா. மன்றின் உப அமைப்பான பன்னாட்டு நீதிமன்றத்தில் (கவனிக்கவும்: பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் அல்ல) ரொகிங்கியர்களின் சார்பில் கம்பியா வழக்குத் தாக்கல் செய்து, அது 15.12.2019 அன்று நீதிமன்றால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்விரு நிகழ்வுகளும் கட்டவிழ்ந்த சமகாலத்தில் பாலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேலால் இழைக்கப்பட்டதாகச் சுமத்தப்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகளைத் தொடங்கப் போவதாக 20.12.2019 அன்று பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் அறிவித்தது.

இதில் ஈழத்தமிழர்கள் கவனிக்க வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று இஸ்ரேலும் சரி, மியன்மாரும் சரி பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் அல்ல. இவ்விரு நாடுகளுமே பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் உருவாக்கத்திற்கு வழிசமைத்த ரோம் சாசனத்தில் கையொப்பமிடவில்லை. இவ்வாறான நாடுகளை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்துவதாயின் பொதுவாக ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். இவ்வாறான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முட்டுக்கட்டையாக அமெரிக்காவும், சீனாவும் இருக்கும் என்பதால் அதற்கான முயற்சிகளை எவருமே எடுக்கத் தலைப்படவில்லை.

ஆயினும் ரோம் சாசனத்தில் உள்ள சட்ட நுட்பங்களை நுணுகி ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் மியன்மாருக்கு எதிராக வங்காளதேசத்தின் உதவியுடன் ரொகிங்கியர்களும், ரோம் சாசனத்தில் தாம் கையொப்பமிட்டிருப்பதை வாய்ப்பாகப் பயன்படுத்திப் பாலஸ்தீன அதிகார சபையும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் வாசல்படியைக் கடந்து தமக்கான அனைத்துலக நீதியைக் கேட்பதற்குத் தலைப்பட்டிருக்கின்றன.

மறுபுறத்தில் ஐ.நா மன்றின் உப அமைப்பான பன்னாட்டு நீதிமன்றத்தில் அரசுகள் மட்டும் தான் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். ரோம் சாசனம் உருவாக்கிய பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தைப் போன்று அல்லாது அரசுகளுக்கு இடையிலான பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு என்று உருவாக்கப்பட்ட அனைத்துலக நீதிப் பொறிமுறை தான் பன்னாட்டு நீதிமன்றம். இங்கும் சட்ட நுட்பங்களை நுணுகி ஆராய்ந்து கம்பியாவின் உதவியுடன் மியன்மாருக்கு எதிராக ரொகிங்கியர்கள் களமிறங்கியுள்ளனர்.





**இதில் ஈழத்தமிழர்கள் கவனிக்க வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று இஸ்ரேலும் சரி, மியன்மாரும் சரி பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் அல்ல. இவ்விரு நாடுகளுமே பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் உருவாக்கத்திற்கு வழிசமைத்த ரோம் சாசனத்தில் கையொப்பமிடமில்லை.**

இவ்விரு நகர்வுகளையும் முன்னுதாரணமாகக் கொண்டு இவ்வாண்டில் சிறீலங்காவிற்கு எதிரான அனைத்துலக சட்டப் போர்க்களத்தைத் திறக்க வேண்டியவர்களாக புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர்கள் இருக்கின்றார்கள்.

ஆம், தமிழின அழிப்புப் போரின் ஊடாகக் கடந்த நான்கரை தசாப்தங்களில் பத்து இலட்சத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர்களைத் தமது சொந்த மண்ணை விட்டு சிறீலங்கா அரசு விரட்டியடித்திருக்கின்றது.

இவ்வாறு தமது நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்ட அல்லது வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஈழத்தமிழர்கள், அதிலும் ரோம் சாசனம் கைச்சாத்திடப்பட்ட 2002 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழீழ தாயகத்தை விட்டுக் குடிபெயர்க்கப்பட்ட ஈழத்தமிழர்கள், வங்காளதேசத்திடம் ரொகிங்கியர்கள் உதவி பெற்றது போன்று தாம் அகதித் தஞ்சம் பெற்றுள்ள நாடொன்றின் (ரோம் சாசனத்தில் கைச்சாத்திட்டுள்ள நாடாக அது இருக்க வேண்டும்) உதவியைப் பெற்றால் சிறீலங்காவைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்திற்குள் இழுத்துச் செல்ல முடியும்.

சமநேரத்தில் கம்பியாவிடம் ரொகிங்கியர்கள் உதவி பெற்றது போன்று தாம் வாழும் இன்னொரு நாட்டின் உதவியுடன் பன்னாட்டு நீதிமன்றத்தில் சிறீலங்காவை நிறுத்தும் நடவடிக்கைகளை ஈழத்தமிழர்கள் எடுக்கலாம்.

தொடர்ச்சி 26ம் பக்கம்

# ரிஷாத் பதியுதீனுக்கு 300 வருடச் சிறை!

முன்னைய அரசாங்கத்தைப்போல் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிடின் ஜனாதிபதி கோத்தபாய தலைமையிலான அரசும் அதிகாரத்தை பறிகொடுக்க வேண்டிவரும் என சிங்கள ராவய அமைப்பு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அந்த அமைப்பின் தலைவர் அக்மிமன தயாரத்ன தேரர் ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில், தீவிரவாதத்தை வளர்ப்பதற்கு ஆதரவளித்த காவல்துறை அதிகாரிகள் இன்னமும் அதிகாரத்தில் இருக்கின்றார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தவறிழைத்தவர்கள் இன்னமும் சிறையில் இருக்கின்றார்கள். எனினும் தவறை செய்ய உத்தரவிட்டவர்கள் இன்னும் வெளியில் இருக்கின்றார்கள். இவை இரண்டுமே தவறுதான். ஆகவே உயிர்த்த



ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்திய, இப்ராஹிம் என்பவரின் மகன்களுக்கு கூடுதலான அளவு செப்பினை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ரிஷாத் கைது செய்யப்படவேண்டும். ரிஷாத் பதியுதீன் சுதந்திரமாக நடமாடக்கூடிய ஒரு நபர் அல்ல, இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததும் அவர் சிறையில் அடைக்கப்படுவார் என எதிர்பார்த்தோம். எனினும் அது நடைபெறவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவிய அவர் ஏன் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர் கைது செய்யப்படும் பட்சத்தில், அவருக்கு 300 வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படுவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது என்றார்.

இதேவேளை, ரிஷாத் பதியுதீனை கைது செய்து சட்டநடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்காலத்தில் மேலும்பல சஹ்ரான்கள் உருவாவதை தடுக்கமுடியாமல் போய்விடும் என சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். புதிதாக தெரிவாகியுள்ள அரசாங்கத்தில் தாம் இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதினுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கும்வரை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதை நிறுத்தமாட்டேன் என்றும் அவர் கூறினார். நாங்கள் அரசாங்கத்திற்குள் இருந்து குற்றவாளிகளுக்கு சரியான தண்டனை வழங்கப்படுமா என்பதை மக்களைப் போன்று கூர்ந்து அவதானித்துக்கொண்டே இருக்கின்றோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# இனப் படுகொலையாளிக்கு மேலும் பதவிகள்!



சிறீலங்காவின் இராணுவத் தளபதியாக இறுதிக்கட்டப் போரில் பாரிய இன அழிப்பில் ஈடுபட்ட இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதற்கு அமெரிக்கா, ஐ.நா. உட்பட பலதரப்பும் கடும் கண்டனங்கள் வெளியிட்டிருந்த நிலையில் தற்போது அவருக்கு மேலும் சில பதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இனப்படுகொலை புரிவதற்கான வழிநடத்தலை மேற்கொண்டவரும் தற்போதைய சிறீலங்கா ஜனாதிபதியுமான கோத்தபாய ராஜபக்ச இந்த பதவி அதிகரிப்பை வழங்கியுள்ளார். இராணுவத் தளபதி என்ற கடமைகளுக்கு மேலதிகமாக, பாதுகாப்பு அதிகாரிகளின் பதில் பிரதானியாக சவேந்திர சில்வா கோத்தபாயவினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன குறித்த பதவியில் இருந்து விலகியதை அடுத்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி முதல் இவர் தனது பதவிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டப வளாகத்தினுள் உள்ள பாதுகாப்பு அலுவலக வளாகத்தினுள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா பதில் பாதுகாப்பு தலைமை பிரதானியாக தனது புதிய பதவியை பொறுப்பேற்றார். இந்த நிகழ்வு முப்படையினரால் கௌரவ அணிவகுப்பு மரியாதைகளுடன் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இராணுவ தொண்டர் படையணியின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் குணவர்தன, மேற்கு பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த முதலிகே, உபகரன மாஸ்டர் ஜெனரல் எம்.எ.எ டி .நாக, போர்க்கருவி பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சந்திரசேகர, இராணுவ செயலாளர் நாயகம் பி.ஜே. கமகே மற்றும் முப்படை அதிகாரிகள் பங்கேற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு உரையாற்றிய இனப்படுகொலையாளி சவேந்திர சில்வா, ஜனாதிபதி கோத்தபாய எதிர்பார்க்கும் விதத்தில் பாதுகாப்பு படைகளை கொண்டு நடத்துவோம் என உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, பல்வேறு ஆட்கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய சிறீலங்காப் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி அட்மிரல் ரவீந்திர வீஜேகுணரத்ன அதிகாரப் பூர்வமாக தனது பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். 2017ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22ம் திகதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவரது பதவிக்காலம் கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவடைந்த நிலையில், மீண்டும் அவரது பதவிக்காலம் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது. அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன 39 ஆண்டுகளாக பாதுகாப்புப் பணியாற்றி ஏராளமாக தமிழினப் படுகொலைக்கு காரணமாக இருந்துள்ளார். அத்துடன், சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தில் மிக நீண்ட காலம் பணியாற்றிய சிரேஷ்ட அதிகாரி என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.

# முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டித்தவர்கள் மீது விசாரணை

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது தொடர்பாக அந்த நினைவு தினத்தை முன்னின்று ஏற்பாடு செய்தவர்கள், பங்களித்தவர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் தொடர்ச்சியாக சிறீலங்காவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு வருகின்றனர்.




கடந்த வாரம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சிறீலங்கா பயங்கரவாத தடுப்புப் பிரிவிற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

தமிழினப் படுகொலை வாரமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வருடா வருடம் முன்னெடுத்து வந்தமை தொடர்பாக குற்றத் தடுப்பு பிரிவினரால் இவர் கடுமையாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

கோத்தபாயவின் ஆட்சிக் காலத்தில் இனிவரும் காலங்களில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம், மாவீரர் நினைவுதினம், தியாகி திலீபன் நினைவு தினங்கள் போன்றவை நினைவு கொள்வதைத் தடுக்க தற்போதே விசாரணைகளும் அச்சுறுத்தல்களும் தொடங்கப்பட்டுவிட்டதாக தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழர்களைக் கடத்தியவர் கோத்தாவின் ஆட்சியில் விடுதலை!

தமிழர்கள் உள்ளிட்ட 11 இளைஞர்கள் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் பிரதான சந்தேக நபரான நேவி சம்பத் எனும் சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையின் முன்னாள் புலனாய்வாளரான லெப்டினன் கொமாண்டர் ஹெட்டியாராச்சி முதியன்சீலகே சந்தன பிரசாத் ஹெட்டி ஆராச்சிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த முதலாம் திகதி பிணையளித்துள்ளது.



வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற நிலையில் தேடப்பட்டு வந்த நேவி சம்பத், 2018 ஓகஸ்ட் 13ம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். மலேசியாவுக்கு சட்ட விரோதமாக தப்பிச் சென்று மீண்டும் நாட்டுக்குள் வந்து தனது அடையாளங்களை மாற்றி தொம்பே பகுதியில் தென்னந் தோப்பொன்றின் பாதுகாப்பு அதிகாரியாக, பொல்வத்த கால்லகே அஷோக்க எனும் பெயரில் வலம் வந்தபோதே கொழும்பு லோட்டஸ் வீதியில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சமூக கொள்ளை விசாரணை அறையின் அப்போதைய பொறுப்பதிகாரி காவல்துறைப் பரிசோதகர் நிஷாந்த சில்வா (அண்மையில் சுவிஸ் தப்பிச் சென்றவர்) தலைமையிலான குழுவினரே அவரை கைது செய்திருந்தனர். இவரைக் கைது செய்த நிஷாந்த சில்வாவை இப்போது கோத்தபாய ஆட்சியாளர்கள் கைது செய்யத் துடித்துவருவதும், அவர் தப்பிச்செல்லக் காரணமானதாக சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் ஒருவர் கடத்தப்பட்டு சித்திரவதை புரியப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டதும் பின்னர் அப்பெண் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆபிரிக்காவுக்கான விசேட தூதுவராக தமிழர்!

## தமிழர்களுக்கான ஆதரவைத் தகர்க்க புதிய வழி

ஆபிரிக்காவுக்கான விசேட தூதுவராக வேலுப்பிள்ளை கணநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமன பத்திரத்தை கணநாதனுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ச கடந்த 3ம் திகதி அலரி மாளிகையில் வைத்து கையளித்தார். வேலுப்பிள்ளை கணநாதன் உகண்டாவில் சிறீலங்காவின் கௌரவ தூதுவராக கடமையாற்றும் அதே வேளை அவர் உகண்டாவுக்கான சிறீலங்காவின் முன்னாள் உயர்



ஸ்தானிகர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பிரபல தொழிலதிபரான கணநாதன், உகண்டாவை வதிவிடமாக கொண்டுள்ளார். இவர் பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரி மற்றும் புனித ஜோசப்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆபிரிக்காவின் பிரதான கட்சிகள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில், அந்த ஆதரவை தகர்ப்பதற்காக தற்போது தமிழர் ஒருவரை சிறீலங்கா ஆபிரிக்காவிற்கான விசேட தூதுவராக நியமித்திருப்பதாக கருதப்படுகின்றது.

முன்னர் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சராக லக்ஷ்மன் கதிர்காமரை நியமித்து தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பரப்புரைகளை மேற்கொள்ள வைத்தது தெரிந்ததே.

# இலக்குவைத்து தாக்கப்படும் ஊடகவியலாளர் வீடுகள்!


இனப்படுகொலையாளி கோத்தபாய பதவியேற்றதன் பின்னர் சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள் இலக்குவைத்து தாக்கப்பட்டு வருகின்றனர். அதேவேளை, ஊடகவியலாளர்களின் வீடுகளுக்கு திருடர்கள் போல் நுழைந்து அவர்களின் கணினிகள், நிழற்படக் கருவிகள், செல்பேசிகள் என்பனவும் திருடப்பட்டு வருகின்றன.

யாழ்.மானிப்பாய் பகுதியில் ஊடகவியலாளர் ஒருவரின் வீடு தாக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இதுவொரு வன்முறைச் சம்பவம் போன்று காண்பிப்பதற்காக மேலும் அருகிலுள்ள இன்னொரு வீட்டிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. யாழில் இருந்து வெளிவரும் வலம்புரி பத்திரிகையின் ஊடகவியலாளரான இ.ராஜேஸ்கரனின் வீட்டு வேலி, கேற் என்பவற்றையும் சேதமாக்கிவிட்டு இவர்கள் தப்பி சென்றுள்ளனர்.

குறித்த வீட்டிற்கு அருகில் இருந்த பாழடைந்த கட்டடம் ஒன்றினுள் சந்தேகத்திற்கு இடமான கும்பல் வந்து செல்வதாகவும், அவர்கள் போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் என அடையாளம் காணப்பட்டமையால் அந்த கும்பலை அங்கிருந்து அகற்றும் நோக்குடன் வீட்டு உரிமையாளருடன் அருகில் வசிப்பவர்களுமாக இணைந்து அந்த கட்டடத்தை இடித்தழித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த கும்பலே இந்த வன்முறை சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம் எனக்கூறப்படுகின்றபோதும், ஊடகவியலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அச்சுறுத்தலாகவே தமிழ் ஊடகவியலாளர்களால் பார்க்கப்படுகின்றது.

இச்சம்பவத்திற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் வாழும் மூத்த அரசியல் ஆய்வாளர் ஒருவர் கோத்தா படையணியின் கண்காணிப்பு துன்புறுத்தல்களை எதிர்கொண்டுள்ளார். இனப்படுகொலை குறித்து கடந்த காலங்களில் பல்வேறு தகவல்களை வெளியிட்டுவந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளர் மற்றும் மூத்த வழக்கறிஞர் எஸ்.ஏ.ஜோதிலிங்கம் இல்லத்திற்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கொள்ளையர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்களை விட்டுவிட்டு



அவர் பயன்படுத்திய இரண்டு செல்பேசிகளையே எடுத்துச் சென்றுள்ளனர்.

தங்களை வன்முறைக் கும்பல் கொள்ளையர்கள் போன்று காண்பிப்பதற்கு அறைகளுக்குள் இருந்த அலமாரியின் முன் கதவு மற்றும் கதவுகள் அடித்து நொருக்கிவிட்டுச் சென்றுள்ளனர். கொள்ளையிடப் போனவர்கள் அங்கிருந்த பணம் அல்லது பிற மதிப்புமிக்க பொருட்களை திருடாததால் இந்த சம்பவம் சாதாரண திருட்டு அல்ல என்பது உறுதியாகியுள்ளது.

ஏனெனில், இத்திருட்டுச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னதாக சிவில் உடையில் அவரது வீட்டிற்குச் சென்ற இரண்டு சிறீலங்காக் காவல்துறையினர், அவரது வீட்டில் வசிப்பதாகக் கூறும் ஒரு நபர் எங்கிருக்கிறார்கள் என்று விசாரித்துள்ளனர். ஆனால், ஜோதிலிங்கம் அந்த நபரை தனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார். இந்நிலையில் அன்று இரவு இந்தக் கொள்ளைப் பாணியிலான சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவர் தனியாக வசித்துவருவதால் அவரது நண்பர்கள் இந்த விடயம் குறித்து அச்சம் கொண்டுள்ளதாக யாழ்குடாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கண்காணிப்பு, துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மீண்டும் உருவெடுக்கத் தொடங்கியுள்ளதாக தமிழ் ஊடகவியலாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.




### வெளிநாடு செல்வோர் - வெளிநாட்டில் இருந்து வருவோர்
## கோத்தாவின் கழுகுப் பார்வைக்குள் தப்பமுடியாதாம்!

இலங்கையிலிருந்து இனி யாரும் தப்பித்து வெளிநாடு ஓடமுடியாது. மேலும் இலங்கைக்கு உள்நுழைபவர்கள் அனைவரையும் கண்காணிக்க கோத்தபாய அரசு புதிய வருடத்தில் புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

கோத்தபாய ராஜபக்சவினால் உருவாக்கப்படவுள்ள, தேசிய தரவு மையத்தின் ஊடாக வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வோர், திரும்பி வருவோரைக் கண்காணிக்க முடியும் என சிறீலங்கா இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார். தேசிய தரவு மையம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது தொடர்ந்தும் பேசிய அவர், தேசிய தரவு மையம் மூலமாக வெளிநாடு செல்பவர்களின் இரண்டாவது பயண இலக்கை இந்த அமைப்பு மூலம் கண்காணிக்க முடியும். அத்துடன் நாட்டின் சட்ட திட்டங்களை மீறி தப்பி ஓடுபவர்களை கண்காணிக்கவும் இது உறுதுணையாக அமையும். அந்தவகையில் எந்தவொரு குடிமகனின் இறப்பும் மூன்று மாதங்களுக்குள்



இந்த தரவு மையத்தில் பதியப்பட வேண்டும். தேவை ஏற்படின் இவ்விடயம் தொடர்பாக எதிர்காலத்தில் தரவு பாதுகாப்புச் சட்டங்கள் இயற்றப்படும். தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், குடிவரவு மற்றும் குடியகல்வு ஆவணங்கள், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு மற்றும் ஏனைய அனைத்து தனிப்பட்ட தரவுகளும் தேசிய தரவு மையத்தின் கீழ் கொண்டு வரப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

## ஊடகவியலாளரை நடுஇரவில் கைது செய்ய முயற்சி!

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரும் சுயாதீன ஊடகவியலாளருமாகிய செல்வக்குமார் நிலாந்தனின் வீட்டிற்கு அவரை கைதுசெய்ய இரவில் சென்ற சிறீலங்காக் காவல்துறையினர் அவர் இல்லாததால் குடும்பத்தினரை அச்சுறுத்தி சென்றுள்ளனர். கடந்த 2ம் திகதி இரவு 9.10 மணியளவில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரும் சுதந்திர ஊடகவியலாளருமாகிய செல்வக்குமார் நிலாந்தன் வீட்டிற்கு சிவில் உடையில் சென்ற காவல்துறையினர் அவரை கைதுசெய்ய முயற்சித்துள்ளனர். ஊடகவியலாளர் வீட்டில் இல்லாத காரணத்தால் வீட்டாரை அச்சுறுத்திய தோடு, ஊடகவியலாளர் செல்வக்குமார் நிலாந்தனை மறுநாள் காலை 9 மணிக்கு ஏறாவூர் காவல் நிலையத்திற்கு வருமாறு குடும்பத்தாரை அச்சுறுத்தி சென்றுள்ளனர்.

இரவு வேளையில் சிவில் உடையில்




காவல்துறையினர் சென்றதால் ஊடகவியலாளரின் குடும்பத்தினர் மிகுந்த அச்சத்திலும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஊடகவியலாளர் நிலாந்தனை ஏன் கைது செய்ய முயற்சி செய்கின்றனர் என்பது குறித்து எந்த தகவலையும் குடும்பத்தினரிடம் கூற மறுத்துள்ள நிலையில் அவரது குடும்பத்தினர் மிகுந்த அச்சத்தில் உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

காவல்துறையினரால் ஊடகவியலாளருக்கு அழைப்பு கடிதமோ அல்லது நீதிமன்ற அழைப்பாணையோ வழங்கப்படாத நிலையில் எதன் அடிப்படையில் ஊடகவியலாளரை கைது செய்ய முயற்சி செய்து வருகின்றனர் என்பது தனக்கு தெரியாது என ஊடகவியலாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டாரா இல்லையா என்பது குறித்த மேலதிக செய்திகள் எமக்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

## வெட்டுக் காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, மலையாளபுரம் புது ஐயன்குளத்தின் அணைக்கட்டின் கீழ் பகுதியில் பலத்த வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கடந்த 30ம் திகதி இரவு 11.30 மணிக்கு குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான முனியாண்டி விக்கினேஸ்வரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இனப்படுகொலையாளி கோத்தபாய சிறீலங்காவின் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் படுகொலை மரணங்கள் அதிகரிக்கத் தொடங்கியிருப்பது தமிழ் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கோத்தாவுக்கு ஒத்துழைப்பு வழங்க கூட்டமைப்புத் தயாராம்!

இனப்படுகொலையாளியும் சிறீலங்கா ஜனாதிபதியுமான கோத்தபாயவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளதாக கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். முடக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மேற்கொள்ள வேண்டும் என்றும், குறித்த அரசியலமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதற்கு தமது பூரண ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும் சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளை பார்க்கின்றபோது அரசியல் தீர்வுக்கான வாய்ப்பு வெகுவாக குறைந்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இவரது கருத்து இவ்வாறிருக்க, அரச தலைவர் வெளியிட்டுள்ள தனது கொள்கை அறிக்கையில் பெரும்பான்மைத்துவ ஆட்சி என்று குறிப்பிட்டிருக்கின்றார். இது இன்னுமொரு பெரும் நெருக்கடியினை எமக்குத் தந்திருக்கின்றது. இதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில், கடந்த 4ம் திகதி இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் 70ம் ஆண்டு நிறைவு விழாவில் கருத்துரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இந்த ஆட்சியினால் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்துக்களும் ஜனநாயகத்திற்கு ஏற்படப்போகும் ஆபத்துக்களும் நிறையவே இருக்கின்றன. எமது இனத்தை அழிக்கின்ற, நிலங்களை ஆக்கிரமிக்கின்ற, எமது மொழி உரிமைகளை முடக்குகின்ற செயற்பாடுகள் தற்போது அதிகம் முனைப்புப் பெற்று வருகின்றன. இராணுவ அதிகாரிகள் எல்லாம் தற்போது சிவில் நிர்வாகத்தில் இந்த அரசாங்கத்தால் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு தமிழ் மக்களின் சுவாசத்தினை நிறுத்திவிடக்கூடியவகையில் அரச தலைவரின் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெறுகின்றது. எனவே நாம் எமது இனமும், நிலமும் விடுதலை பெறும்வரையில் ஜனநாயக ரீதியாக தொடர்ந்தும் போராடுவோம் என்றார்.

நிலைமை இவ்வாறிருக்க, இந்த உரைக்கு முதல்நாள் இன்னொரு முரண்பாடான நிகழ்வு நடந்தேறியது. சிறீலங்கா நாடாளுமன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சுவாரஸ்யமாக கலந்துரையாடியுள்ளார்.




கோத்தபாயவின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து சபை ஒரு மணி வரை ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் சபாநாயகரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்து உபசாரத்தின் போதே இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும், மாவை சேனாதிராஜாவும் அருகில் நின்றிருந்தனர்.

## அரசு மீது ஜே.வி.பி சாடல்

கொழும்பு ஷெங்ரில்லா விடுதிக்கு அருகாமையில் உள்ள மூன்று ஏக்கர் அரச நிலத்தை 43 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சிங்கப்பூர் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்க சிறீலங்கா அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாவும் எந்தவித விலைமனுக் கோரலும் இல்லாது அமைச்சரயில் தனிப்பட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜே.பி.பி. குற்றம் சுமத்தியுள்ளது. மத்தள விமான நிலையத்தையும் சர்வதேச நிறுவனமொன்றுக்கு வழங்கவும் அரசாங்கம் தீர்மானம் எடுக்கின்றதாவும் ஜே.வி.பி. கூறுகின்றது.

## இனியபாரதியின் விளக்கமறியல் நீடிப்பு

சிறீலங்காவின் இனப்படுகொலை இராணுவத்துடன் இணைந்து இயங்கிய கருணா குழுவைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் குமாரசாமி புஸ்பகுமாரின் விளக்கமறியல் உத்தரவு தொடர்ந்தும் 9ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அம்பாறை திருக்கோவில், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் 2006ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை 7 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலேயே இனியபாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சிலரை ஆட்கடத்தலில் ஈடுபடுத்தியமை, அதற்கு உதவி ஒத்தாசை புரிந்தமை தொடர்பில் இனியபாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## இலங்கையில் 30 இலட்சம் நாய்கள்

இலங்கையில் உள்ள நாய்களின் எண்ணிக்கை சுமார் 30 இலட்சம் என்று அண்மையில் இடம்பெற்ற ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இரத்தினபுரியில் விசர் நாய்க்கடி தடுப்பு செயற்திட்டம் ஒன்றில் உரையாற்றிய பொது சுகாதார மற்றும் மிருக வைத்திய



சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எல்.டி. கித்சிறி நாய்களின் தொகை அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், வருடாந்தம் சுமார் 61 ஆயிரம் பெண் நாய்கள் மலடாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். 2019ல் இந்த நடவடிக்கைகளுக்காக செலவான தொகை 10 கோடி ரூபாய் என்றும் கூறினார். இவ்வருடம் நாய் கடிக்காக 2 இலட்சத்து 9 ஆயிரம் பேர் சிகிச்சைப் பெற்றுள்ளதாகவும், அதற்கான செலவு 32 கோடி ரூபாய் என்றும் கூறிய டொக்டர் கித்சிறி, நாட்டில் வருடாந்தம் 26 பேரில் ஒருவர் விசர் நாய்கடியினால் மரணமடைகிறார் என்றும் கூறினார். நாய்களின் தொகை மேல் மாகாணத்திலே மிகவும் உயர்வாகவும், கிழக்கு மாகாணத்திலே மிகவும் குறைவாகவும் இருப்பதாக அவர் கூறினார்.









# ஓர் இனப்படுகொலையாளியின் மரணம்....

எனினும் முன்னதாக 1980ம் ஆண்டுகளில் இருந்தே மத்திய கிழக்கு போர்க் களங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்தார். லெபனான், சிரியாவில் இவரது தலைமையில் ஈரான் ஆதரவு படைகள் செயல்பட்டு வருகின்றன. ஈரான் - அமெரிக்கா இடையேயான உறவு மோசமடைந்ததற்கு காரணமே இவர்தான் என அமெரிக்கா குற்றம்சாட்டுகிறது. இதனால், குத்ஸ் படையை தீவிரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்தது.

2011ல் சிரியாவின் ஜனாதிபதி பசீர் அல் ஆசாத் உள்நாட்டு மோதலில் தோல்வியடையும் நிலையேற்பட்ட வேளை சுலைமானியின் படையணிகளே அவரை பலப்படுத்தின. ஐ.எஸ். அமைப்பை ஆயுதக்குழுக்கள் தோற்கடிப்பதற்கும் அவை உதவின. இந்த வெற்றிகள் காரணமாக மத்திய கிழக்கில் ஈரானின் செல்வாக்கு அதிகரிப்பதற்கு அவர் காரணமாகயிருந்தார். ஈரானின் செல்வாக்கு மத்திய கிழக்கில் அதிகரிப்பதை கட்டுப்படுத்த முடியாமல் அமெரிக்காவும் சவுதி அரேபியாவும் இஸ்ரேலும் திணறுகின்றன. 1998ல் கமேனி சுலைமானியை விசேட படைப்பிரிவின் தளபதியாக நியமித்தார், எனினும் இந்தப் பதவியை பயன்படுத்தி அவர் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புடனும், சிரிய அரசாங்கத்துடனும், ஈராக்கில் உள்ள சியா ஆயுதக் குழுக்களுடனும் உறவை வலுப்படுத்தினார். கடந்த சில வருடங்களாக சுலைமானி ஈராக், சிரியாவில் உள்ள தீவிரவாதத் தலைவர்களின் அங்கீகாரத்தை அதிகமாக பெற்றவராக மாறிவந்தார். போர்க்களங்களில் அவர் காணப்படும் படங்கள் ஊடகங்களில் அதிகளவிற்கு வெளியாகின. சுலைமானி நினைத்தால் ஈரானிலும், ஈராக்கிலும் சிரியாவிலும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஈராக்கில் புதிய ஆட்சி அமைவதற்கான அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையில் சுலைமானி நேரடியாக ஈடுபட்டவர்.

2019ல் கமேனி ஈரான் இராணுவத்திற்கான உயர் விருதை சுலைமானிக்கு வழங்கியவேளை ஈரான் இராணுவத்திற்குள் சுலைமானிக்கு உள்ள செல்வாக்கு புலனாகியது. 1979ல் இஸ்லாமிய குடியரசு வழங்கப்பட்ட பின்னர் இராணுவ அதிகாரியொருவருக்கு அந்த பதக்கம் வழங்கப்பட்டமை அதுவே முதல்தடவை. ஈரானின் விசேட படையணியின் இரகசிய நடவடிக்கைகளிற்கும் புலனாய்வு நடவடிக்கைகளிற்கும் பொறுப்பாக விளங்கிய சுலைமானி அமெரிக்க ஜனாதிபதியை எள்ளிநகையாடி, பகிரங்க சவாலும் விடுத்தார். டிரம்பை சூதாட்டக்காரனான, முட்டாளாக வர்ணித்த சுலைமானி, நாங்கள் உங்களிற்கு அருகிலிருக்கின்றோம் என நினைக்காத பகுதியில் நாங்கள் உங்களிற்கு அருகில் இருக்கின்றோம் எனக் கூறியிருந்துடன், நீங்கள் யுத்தத்தை ஆரம்பிப்பீர்கள். ஆனால் அதனை நாங்கள்தான் முடித்துவைப்போம் எனவும் தெரிவித்திருந்தார்.

டிரம்பிற்கு இது, இவர் மீதான கடும் சினத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும், ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களை கொன்ற இரத்தக்கறை படிந்த கரங்களை கொண்டவர் என சுலைமானியை அமெரிக்கா குறிவைத்தது.

இவர் ஏற்கனவே கொல்லப்பட்டதாக பலமுறை வதந்திகள் வந்துள்ளன. 2006ல் ஈரானில் நடந்த விமான விபத்திலும், 2012ல் டமாஸ்கசில் நடந்த குண்டு வெடிப்பிலும் சுலைமானி கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. 2015ம் ஆண்டிலும் சிரியாவின் உள்நாட்டு போரில் சுலைமானி படுகாயமடைந்து இறந்ததாக தகவல் பரவின. ஆனால், இம்முறைதான் அவர் பலியானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கின் மிகுந்த சக்திவாய்ந்தவராகக் கருதப்படும் ஓர் அதிகாரமிக்க நபரை அமெரிக்க படை தாக்குதல் நடத்தி கொன்றுள்ளதால், இந்த விவகாரம் சர்வதேச அளவில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என சர்வதேச நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். டொனால்ட் டிரம்பின் நடவடிக்கையால் அமெரிக்காவிலும் ஒரு பகுதியினர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். இதற்கிடையே, ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதை தடுக்கும் பொருட்டு அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அதிகாரத்தை (Power) குறைக்கும் வகையில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றவும் திட்டமிட்டுள்ளது.

தொடர்ச்சி 25ம் பக்கம்

# பழிவாங்கும் சபதங்கள்!

» குவாசிம் சுலைமானியின் படுகொலைக்கு பழிவாங்குவதற்காக ஈரானின் அதி உயர் தேசிய பாதுகாப்பு பேரவை 13 வழிமுறைகள் குறித்து ஆராய்ந்துள்ளதாக ஈரானின் அதி உயர் தேசிய பாதுகாப்பு பேரவையின் செயலாளர் அலிசம்கானி தெரிவித்துள்ளார். சொலைமானியின் கொலைக்கான பழிவாங்கலில் ஈடுபடும் போது நாங்கள் தனியொரு வழிமுறையை பின்பற்றமாட்டோம் என அவர் தெரிவித்துள்ளார். தலைவர்கள் 13 வழிமுறைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர், அதில் ஒன்றிற்கு அவர்கள் அனுமதியளித்தால் கூட அது அமெரிக்காவிற்கு ஒரு வரலாற்று கொடுங்கனவாக விளங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்க படையினர் எங்கள் பிராந்தியத்திலிருந்து தாமாகவும் நேராகவும் வெளியே மறுத்தால் நாங்கள் அவர்களை செங்குத்தாக கொண்டுசெல்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

» என் அப்பாவை கொன்றுவிட்டதால் எல்லாம் முடியவில்லை, அமெரிக்காவை ஈரான் மோசமாக தாக்கும் என சுலைமானியின் மகள் செய்னப் சுலைமானி எச்சரித்துள்



ளார். தந்தையின் இறுதி ஊர்வலம் முடிந்த பின் பேசிய செய்னப் சுலைமானி, என் அப்பாவை கொன்றுவிட்டார்கள். அவருக்கு எவ்வளவு மக்கள் ஆதரவு இருந்தது என்று இந்தக் கூட்டத்தைப் பார்த்தால் உங்களுக்கு தெரியும். வெறிபிடித்த டிரம்ப்தான் இப்படி செய்தது. எல்லாம் முடிந்துவிட்டது. என் அப்பாவை கொன்றால் கதை முடிந்தது என்று அவர் நினைக்கிறார். ஆனால் டிரம்ப் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். எதுவும் முடியவில்லை. இதுதான் தொடக்கம். அமெரிக்கா மீது ஈரான் மிக கடுமையான தாக்குதல் நடத்தும். டிரம்பை இதற்காக பழி வாங்காமல் ஈரான் விடாது. ஈரானின் முழு பலத்தை அமெரிக்கா தெரிந்து கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை. அமெரிக்கக் குடும்பங்கள் வருத்தப்படும். ஈராக்கில் இருக்கும் தங்கள் குடும்பத்தை சேர்ந்த அமெரிக்க இராணுவத்தினரை அவர்கள் இனி பார்க்க முடியாது. அவர்களின் குடும்பம், இராணுவத்தினரின் மரணத்தை மட்டும்தான் பார்க்க போகிறது என்று செய்னப் சுலைமானி எச்சரித்துள்ளார்.

» சுலைமானி காட்டிய பாதையில் நாங்கள் தொடர்ந்து பயணிப்போம் என்று கூறியுள்ள, சுலைமானியின் இடத்திற்கு பதிலாகப் பதவியேற்ற மேஜர் ஜெனரல் இஸ்மாயில் கனி, அமெரிக்காவைப் பழி வாங்குவது உறுதி. அமெரிக்காவை இந்தப் பிராந்தியத்தில்



இருந்து அகற்றுவதே எங்கள் இலக்கு. அமெரிக்காவின் தாக்குதலுக்கு பழிவாங்க கடவுள் உறுதி அளித்துள்ளார். பழிவாங்கும் முக்கிய நபர் கடவுள்தான். அமெரிக்காவை நிச்சயம் பழிவாங்குவோம் என்று எச்சரித்துள்ளார். கொல்லப்பட்ட இறுதி நிகழ்வு இடம் பெற்றவேளை அவரது பிரேதப்பெட்டியின் மேல் விழுந்து கதறியழுத கானி சொலைமானி வீரமரணமடையச் செய்யப்பட்டமைக்கான பழிவாங்கல் இடம்பெறும் என்பது இறைவனிற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி என தெரிவித்துள்ளார்.

» அமெரிக்காவின் வெள்ளை மாளிகை மீது எங்களால் தாக்குதல் நடத்த முடியும். அதற்கான சக்தி எங்களிடம் உள்ளது, சரியான நேரத்துக்காக காத்திருக்கிறோம். மிக மோசமான விளைவுகளை அமெரிக்கா சந்திக்க போகிறது. இதை நாங்கள் சும்மா விடப்போவதில்லை. இதற்கு மிக கடுமையான பதிலடி கொடுப்போம். நாங்கள் பழிக்கு பழி வாங்குவது நிச்சயம். போர் அறிவிக்கப்பட்டால் அது அமெரிக்காவுக்கு தான் தோல்வியாக அமையும் என்று ஈரான் அதிபர் ஹசன் ரௌஹானி எச்சரித்துள்ளார்.

» உலகம் முழுக்க அமெரிக்காவிற்கு 800க்கும் மேற்பட்ட இராணுவ தளவாடங்கள் இருக்கிறது. அமெரிக்காவின் இராணுவ தளவாடங்களைத்தான் நாங்கள் தாங்க போகிறோம். பல நாடுகளின் உங்களுக்கு ஃசேப் ஹவுஸ் எனப்படும் பாதுகாப்பு வீடுகள், தூதரகங்கள் உள்ளது. இதில் பல இலட்சம் அமெரிக்கர்கள் இருக்கிறார்கள். இந்த நாடுகளில் பல நாடுகள் எங்கள் நட்பு நாடுகள். அவர்களிடம் நாங்கள் பேசுவோம்.

இதில் எங்காவது ஓர் இடத்தில் நாங்கள் தாக்குதல் நடத்துவோம். எங்கு தாக்குதல் நடத்துவோம் என்று உங்களால் கணிக்க முடியாது. உங்களால் எல்லா இடங்களையும் கண்காணிக்க முடியாது. அனைத்தையும் பாதுகாக்க முடியாது. எங்கள் போர் முறை வித்தியாசமாக இருக்கும். அமெரிக்கர்களை கொல்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அது நடந்தே தீரும். ஈரானுக்கு உலகம் முழுக்க தொடர்பு இருக்கிறது. சீக்கிரம் நீங்கள் மிக மோசமான எதிர்ப்புகளை சந்திப்பீர்கள். ஈரான் எப்படி பழிவாங்கும் என்று காத்திருந்து பாருங்கள் என்று ஈரானின் முன்னாள் இராணுவ தளபதியும் தற்போதைய பாதுகாப்பு ஆலோசகருமான மேஜர் ஜெனரல் ஹொசைன் டெஹ்ஹான் தெரிவித்துள்ளார்.

» சுலைமானியின் கொலைக்கு டிரம்பினை கொலைசெய்வது போதுமான பழிவாங்கல் நடவடிக்கையாக அமையாது என ஈரானின் புரட்சிகர காவலர் படைப்பிரிவின்



வான்வெளி தளபதி அமீர் அலி ஹஜிஜடேஹ் தெரிவித்துள்ளார். சொலைமானியின் இறுதி ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர், டிரம்பினை கொலை செய்வது கூட போதுமான பழிதீர்க்கும் நடவடிக்கையாக அமையாது. அமெரிக்க இலக்குகள் மீது ஏவுகணை தாக்குதல்களை மேற்கொள்வதோ அல்லது படையினர் மீது தாக்குதலை மேற்கொள்வதோ டிரம்பினை கொலை செய்வதோ இந்த மாவீரனின் குருதிக்கு இணையாகாது என அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவை பிராந்தியத்திலிருந்து அகற்றுவதே சொலைமானியின் மரணத்திற்கான பொருத்தமான பழிதீர்க்கும் நடவடிக்கையாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

» ஈரான் படைப் பிரிவின் முன்னாள் தலைவர் மோசீன் ரெசாய் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், இஸ்ரேலில் உள்ள டெல் அவிவ், ஹைஃபா ஆகிய பகுதிகள் தரைமட்டமாக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 80 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பக்தாத் நகரின் மேற்கு பகுதியில் இருக்கும் அல் ஆசாத் மற்றும் இர்பில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் அடுத்தடுத்து 9 முறை ஏவுகணைகளை வீசி கடந்த 8ம் திகதி புதன்கிழமை தாக்குதல் நடத்தியது.

இதில் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த 80 பேர் கொல்லப்பட்டதாகவும், 200 பேருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இஸ்லாமிய புரட்சிப் பாதுகாப்புப் படை கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க பயங்கரவாதிகள் 80 பேர் கொல்லப்பட்டனர் என அறிவித்துள்ள ஈரான், மேலும் அந்நாட்டின் உலங்குவானூர்திகள், ட்ரோன்கள் உள்ளிட்ட பல இராணுவ தளவாடங்களும் அழிக்கப்பட்டுள்ளதாக தெஹ்ரானை மையமாகக் கொண்டு இயங்கும் தஸ்னிம் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தங்கள் நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அந்நாட்டுக்கு தொடர்புடைய 104 இடங்களின் மீது குறிவைக்கப்பட்டுள்ளதாகவும், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் ஈரான் எச்சரித்துள்ளது.


இதற்கிடையே, ஈரான் தலைநகரில் இருந்து 170 பேருடன் புறப்பட்ட உக்ரைனின் போயிங் 737-800 வகை விமானம் புதன்கிழமை விபத்துக்குள்ளானது. ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள ஹோமினி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சற்று நேரத்தில் பரந்த் மற்றும் 'ரியார் எனுமிடத்தில் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், விமானத்தில் பயணம் செய்த 170 பேரும் இந்த விபத்தில் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. முன்னதாக இந்த விமானத்தில் 180 பேர் பயணம் செய்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்த தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு தற்போது விபத்து ஏற்பட்ட இடத்தில் விசாரணை நடத்தி வருகிறது என ஈரான் விமானப் போக்குவரத்துத்துறை செய்தித்தொடர்பாளர் ரெசா ஜஃபர்சாத் தெரிவித்தார்.

1990-களில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த போயிங் 737-800 வகை விமானம், போயிங் 737 மேக்ஸ் வகையை விட பழமையானது. கடந்த காலங்களில் அதிக விபத்தினை ஏற்படுத்தியதும், மிகப்பெரிய இரு விபத்தினைத் தொடர்ந்து சுமார் 10 மாதங்களாக இந்த வகை விமானங்கள் இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

# உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது






இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் பிள்ளையள்!

'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்று அந்தக் காலத்தில் பவணந்தி முனிவர் சொன்னாலும் தான் சொன்னார், அதைச் சிரமேல் எடுத்துப்போன வருசத்து துர்விடயங்களை எல்லாம் மறந்து இனி வரப் போகிற நல்ல விடயங்களைப் பற்றிப் புது வருசத்தில் எங்கடை ஆட்கள் சிந்திக்கிறது நல்லது தான் பாருங்கோ.

ஆனால், அதுக்காக வெளிநாடு வந்ததும், பழசை எல்லாம் மறந்து போய் புதுமை என்ற பெயரில் கூத்தடிக்கிறது இருக்குதெல்லோ, உதை விட வேறை ஒரு கேடு கெட்ட காரியம் இருக்கவே முடியாது பிள்ளையள்.

விசயம் இது தான் பிள்ளையள்.

யுத்தம் நடந்த காலத்தில் வன்னியில் எங்கடை புலிப் பிள்ளையளுக்குப் பக்கபலமாக இருந்த என்ரை வயது எழுத்தாளர் ஒருத்தர் இஞ்சை ஸ்காபுறோ பக்கம் தான் இருக்கிறார். அவர் தான் எழுதின நாடகம் ஒன்றை யுத்தத்தின் இறுதி நாட்களில் தவற விட்டிட்டார். அதைத் தேடிக் கடந்த பத்து வருசமாக மனுசன் ஊர் ஊராக அலைந்து திரியுது. ஆனால் ஒருத்தரிட்டையும் அந்த நாடகப் பிரதி இருக்கிறதாக தெரியவில்லை.

போன கிழமை கிறஸ்துமஸ் கொண்டாட்டத்துக்கு சுவிசில் உள்ள என்ரை மருமகனிட்டை போன இடத்தில் அங்கை முன்னாள் போராளிப் புகைப்படப் பிடிப்பாளர் ஒருத்தர் வந்திருந்தவர். அவரிட்டை சாடையாக நான் சங்கதியைச் சொல்ல, தான் முயற்சி செய்து பார்க்கிறேன் என்று ஆள் உடனேயே சொன்னவர். ஆள் சொன்ன தோரணையில் எனக்கு ஆரம்பத்திலேயே பெரிசாக நம்பிக்கை இருக்கவில்லை. சரி, மயிரைக் கட்டி மலையை இழுத்தன், வந்தால் மலை, போனால் மயிர் என்ற கதையாக ஒரு கிழமை கழிச்சு ஆளுக்கு நான் போன் எடுத்துப் பார்த்தேன். ஆள் ஆசுப்பத்திரியில் கிடக்கிறார் என்று அவரின்ரை சிநேகிதன் சொன்னார்.

எனக்கு உடனேயே சந்தேகம் வந்திட்டுத்து. வெள்ளை வானில் கடத்தப்பட்ட ஆட்களை மொனராகலையில் உள்ள குளத்தில் இருக்கிற முதலைகளுக்கு கோத்தபாய தீனியாகக் கொடுத்தவர் என்று செய்தியாளர் மாநாட்டில் சொன்னதுக்காகத் தன்னை சிறையில் அடைக்கப் போகிறாங்கள் என்று பயந்து லங்கா மருத்துவமனையில் ராஜித சேனாரட்ண போய்ப் படுத்துக் கிடந்த மாதிரித் தான் இவரும் நடிக்கிறாரோ என்று நான் முதலில் ஐயப்பட்டனான். பிறகு தான் கேள்விப்பட்டேன் அவர் தனக்கு நிரந்தர விசா கிடைச்ச சந்தோசமான செய்தியைப் புது வருசத்து அன்றைக்கு தண்ணிப் பார்ட்டி வைச்சுக் கொண்டாடி, அதில் கால்தடக்கி விழுந்து காயப்பட்டு ஆசுப்பத்திரியில் படுத்துக் கிடக்கிறாராம் என்று.

இதைக் கேட்டதும் எனக்கு மண்டை கிறுகிறுத்துப் போச்சுது பிள்ளையள். எவ்வளவு ஒழுக்கம், கட்டுப்பாட்டோடை எங்கடை தம்பி பிரபாகரன் கட்டி வளர்த்த இயக்கம் பாருங்கோ. இட்டதெல்லாம் பயிராகுமா? என்று அந்தக் காலத்தில் எங்கடை அப்பு, ஆச்சிமார் சொன்னாலும், தம்பி பிரபாகரன் கட்டி வளர்த்த இயக்கத்தில் இருந்து வந்தவையள் என்ற வகையில் தம்பியின்ரை மரியாதையையும், மாவீரர்களின் தியாகங்களையும் பேணிப் பாதுகாக்கிற மாதிரி எல்லோரும் நடக்கிறது முக்கியம் பிள்ளையள்.

அதை விட்டுப் போட்டு ஒரு நாளைக்கு ஒரு பெண்சாதி என்ற கதையாக கிருஸ்ண லீலை செய்து கொண்டிருக்கிற துரோகி கருணாவைப் போல் ஒரு சில முன்னாள் போராளிகள் ஒழுக்கம் கெட்டு நடந்தால், பாதிக்கப்படப் போகிறது எங்கடை தேச சுதந்திர இயக்கம் தானே?

எதிரியின்ரை பிடியில் இருந்து தப்பி வந்த எத்தினையோ போராளிகள் இன்றைக்கு வெளிநாட்டில் அதே ஒழுக்கத்தோடு, அதே கட்டுப்பாட்டோடு, தம்பி பிரபாகரனின்ரையும், மாவீரர்களின்ரையும் மரியாதையைக் காப்பாத்துகிற மாதிரி நடக்கீனம். இன்றைக்குப் பத்து வருசமாக ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுத்தாலும் போராளிகளுக்குரிய பண்போடு, பக்குவத்தோடு தான் இந்த முன்னாள் போராளிகள் எல்லாம் நடக்கினம்.

**தம்பி பிரபாகரன் கட்டி வளர்த்த இயக்கத்தில் இருந்து வந்தவையள் என்ற வகையில் தம்பியின்ரை மரியாதையையும், மாவீரர்களின் தியாகங்களையும் பேணிப் பாதுகாக்கிற மாதிரி எல்லோரும் நடக்கிறது முக்கியம் பிள்ளையள்...!**

ஆனால் இந்த முன்னாள் போராளிகளுக்கு எல்லாம் இழுக்கைத் தேடித் தருகிற மாதிரி ஒரு சில கோடரிக் காம்புகள் நடந்து கொள்கிறதை நினைச்சால், எனக்கு நெஞ்சே வெடிச்சு விடும் போல் இருக்குது.

ஊசியைக் காந்தம் இழுக்கும், உத்தமனைச் சிநேகம் இழுக்கும் என்கிற மாதிரி வெளிநாடு வந்ததும் பள்ளிக்கூடத்துச் சிநேகிதங்களும், வேலையிடத்து நண்பர்களும் பிழையான வழியில் வழிநடத்துவதற்கு காத்திருப்பீனம் தான். ஆனால் அதுக்காகத் தம்பி பிரபாகரனும், மாவீரர்களும் சொல்லித் தந்த ஒழுக்க நெறியைக் கைவிடலாமோ?

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று அந்தக் காலத்தில் வள்ளுவர் என்ற சும்மா விளையாட்டுக்கே சொன்னவர்?

இதுக்குள்ளை 'ஏன் தம்பி இயக்கத்தின்ரை மானத்தைக் கப்பல் ஏற்றுகிற மாதிரி நடக்கிறாய்?' என்று அந்த முன்னாள் போராளிப் புகைப்படப் பிடிப்பாளரிட்டை நான் கேட்டதுக்கு அவர் சொன்னார், 'ஐயா, நாங்கள் போராளிகளாக இருக்கும் போது எங்கடை ஆசைகளை எல்லாம் அடக்கி வைச்சுத் தான் போராடினம். இப்ப எங்கடை ஆசைகளை பார்டி வைச்சு நாங்கள் வெளிப்படுத்துகிறதில் உங்களுக்கு என்ன பிரச்சினை?'

ஆசைகளை வெளிப்படுத்துகிறதில் பிழை இல்லை பிள்ளையள். ஆனால் எல்லாத்துக்கும் ஓர் அளவு வேண்டும் பாருங்கோ. சரி, வெளிநாட்டில் இருக்கிற எல்லோரையும் போல் கிறிஸ்மசுக்கும், புத்தாண்டுக்கும் குடும்பமாக, நண்பர்களோடு சேர்ந்து சந்தோசமாகப் பொழுதைக் கழிக்கிறது தப்பில்லை. சரி, இப்ப இயக்கத்தில் இல்லை தானே என்று மதுபானம் அருந்துகிறது கூட தப்பில்லை. அதுக்காக இயக்கத்தின்ரை பெயரைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குகிற மாதிரி மதுபோதையில் கூத்தடிக்கிறது என்பது எந்த விதத்தில் நியாயம்? 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்று சும்மாவோ தமிழில் ஒரு பழமொழி எழுதி வைச்சவையள்?

இதுக்குள்ளை அவர் எனக்குச் சொல்கிறார், 'நாட்டுக்காக நான் என்ரை கால் ஒன்றை இழந்திருக்கிறேன். நீங்கள் எதையாவது இழந்திருக்கிறியளோ? இல்லை தானே? எனவே நீங்கள் எனக்கு அறிவுரை சொல்லத் தேவையில்லை. நாட்டுக்காக நான் செய்த தியாகத்தோடு ஒப்பிடேக்குள்ளை நான் விசா பார்டி வைச்சதில் எந்தத் தப்புமில்லை.'

இதுக்குப் பிறகு நான் என்ன செய்யிறது? 'உப்பைத் தின்றவன் தண்ணி குடிப்பான், தப்புச் செய்தவன் தண்டனை கொள்வான்' என்று அந்த நாளில் என்ரை அப்பு சொன்னதை மனதுக்குள் நினைச்சுப் போட்டு வந்திட்டன்.

ஆனாலும் ஒன்று சொல்கிறேன் பிள்ளையள். இப்பிடியே தப்புச் செய்கிறவையள் எல்லோரும், கடந்த காலங்களில் தேச விடுதலைக்காகத் தாங்கள் செய்த அர்ப்பணிப்புக்களுக்கும், தாங்கள் இழந்தவைகளுக்கும் கணக்கு எழுத வெளிக்கிட்டால் எங்கடை தேசம் ஒரு நாளும் தாங்காது.

எங்கடை தேச விடுதலைக்காக முப்பதுனாயிரம் மாவீரர்மார் தங்கடை உயிரைக் குடுத்துப் போட்டு அமைதியாக மீளாத் துயில் கொள்ளுகீனம். சில பேர் ஐம்பதுனாயிரம் மாவீரர்கள் என்றும் கணக்குச் சொல்லுகீனம்.

எத்தனையோ ஆயிரமாயிரம் தாய், தகப்பன்மார் தங்கடை பிள்ளைகளை மாவீரர்களாகக் குடுத்துப் போட்டு சத்தம் சந்தடி இல்லாமல் இருக்கீனம்.

தொடர்ச்சி 38ம் பக்கம்



இவை கடிக்காது! காது அடைக்க நொய்ய்ய்... என்று ரீங்காரம் மட்டுமே இடும்.

# கொசுத் தொல்லைகள்



“ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கம் கையாளும் மாற்றமானது எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத விதத்தில் அமைந்துள்ளது. இதுவரை காலமாக தமிழ் மக்கள் உணர்ந்துவந்த அடக்குமுறை மேலும் பல மடையும் வகையில் அரசாங்கம் செயற்படுகின்றது. தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடவேண்டாம் என அரசாங்கம் கூறுவதானது மீண்டும் இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்த அரசாங்கமே வித்திடுவதாக அமையும்.”

***- இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா.***



“ஐக்கியத்திற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால், சம்பந்தன் சுமந்திரன் போன்றோர் பேசச் கூடிய ஐக்கியம் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கவை அல்ல. திம்பு காலத்தில் இருந்தே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஐக்கியத்திற்காக இணைந்து செயற்பட்டு வந்திருக்கிறது. திம்பு காலத்தில் இருந்து இன்றுவரை பல்வேறுபட்ட ஐக்கியங்கள் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகுவதற்கு நாங்கள் காரணகர்த்தாக்காளவும் இருந்திருக்கிறோம். ஆகவே நாங்கள் ஐக்கியத்திற்கு எதிரானவர்கள் கிடையாது என்பதை தெளிவாக கூறிக்கொள்கிறோம்.”

***- ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.***

“2015ம் ஆண்டு நல்லிணக்க அரசாங்கம் ஒன்று கொண்டுவரப்பட்டதன் பின்னர் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் பல தசாப்தங்களின் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நானும் எமது கட்சியின் தலைவர் சம்பந்தனும் கலந்துகொண்டிருந்தோம். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. நல்லிணக்க சமிக்ஞைகள் பல இருந்தன. தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டது.

தமிழில் தேசிய கீதம் பாட வேண்டாம் எனக் கூறுவது ஒரு நாட்டுக்குள்ளே இருக்கின்ற தேசிய இனங்களுக்கு இடையே ஒப்புறவு, நல்லிணக்கம் என்பவற்றை முற்று முழுதாக முறியடிக்கும் செயற்பாட்டினை அரசாங்கம் செய்து வருகின்றது என்பதையே வெளிக்காட்டுகின்றது. ஒரு நாட்டுக்குள்ளே இருக்கின்ற தேசிய இனங்களுக்கு இடையே ஒப்புறவு, நல்லிணக்கம் என்பவற்றை முற்றுமுழுதாக முறியடிக்கும் செயற்பாட்டினை அரசாங்கம் செய்து வருகின்றது என்பதனை நாம் அரசுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றோம்.”

***த.தே.கூ. ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், யாழ். ஊடகங்களுக்குக் கருத்துக்களை வெளியிடும் போது...***



*(அது யாழில், இது வவுனியாவில்)*

“நாங்கள் தேசிய கீதத்தினை பாட விட வேண்டும் என்று கேட்கவில்லை. எங்களை விட்டால் போதுமென்றே கேட்கின்றோம். அதனையே அரசாங்கத்திற்கும் சொல்ல விரும்புகின்றோம். சர்வதேசத்தில் இலங்கையும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கின்ற நாடு என்று கருத வேண்டும் என விரும்பினால் 70 வருட காலமாக இத்தனை தசாப்தங்களாக தொடர்ச்சியாக எங்கள் மக்கள் கொடுக்கின்ற ஜனநாயக தீர்ப்புக்கு மதிப்பளித்தே ஆக வேண்டும். அது செய்யப்பட்டால் தான் இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாகலாம். முன்னேற்றம் அடையும். அத்துடன் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து விடுபட முடியும். அது செய்யப்படாத வரையில் நாங்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டே இருப்போம். உங்களையும் உய்யவிட மாட்டோம்.”

***- த.தே.கூ. ஊடக பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், வவுனியாவில் இலங்கை தமிழரசுக்கட்சியின் 70வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில்...***



“தமிழ் மக்களுக்கு விரோதமான பல்வேறு செயற்பாடுகளை புதிய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்து. இன்றைய ஆட்சியாளர்கள் அதிகாரத்திற்கு வந்தால் இதுபோன்ற சம்பவங்கள் நடக்குமென்பது பலராலும் எதிர்பார்க்கப்பட்ட விடயமாக இருக்கலாம். ஆனால் அத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதே போல கடந்த ஆட்சிகளிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கின்றோம். இந்த நிலைமைகள் இனியும் தொடர்வதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஆகையினால் இப்படிப்பட்ட விடயங்களிலாவது தமிழர் தரப்பு ஒருமித்து செயலாற்ற வேண்டியது அவசியம்.”

***- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்த வெளியிடும் போது...***



# வேற்றுக்கிரகவாசிகள்

## சோழியன் குடுமி சும்மா ஆடாது...

*‘குதிரை ஓடியபிறகு லாயத்தை மூடிய கதை’யாக, மக்களை அணி திரட்டும் பணியில் கூட்டமைப்பு களமிறங்கப்போகின்றதாம். ‘எமது இனத்திற்கு விரோதமாக இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளிற்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதற்கு தமது கட்சியின் இளைஞர்கள், தொண்டர்கள் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தயாராக வேண்டும்’ என தமிழரசு கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அறைகூவல் விடுத்திருக்கின்றார். தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் மற்றும் மகளிர் அணியின் ஏற்பாட்டில் கட்சியின் 70ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு*



*கடந்த வாரம் இடம்பெற்றது. அங்குதான் புற்றுக்குள் இருந்து வெளியே வந்து சீறும் பாம்பாகச் சீறியிருக்கின்றார் மாவையர்.*

*இனமழிந்த கடந்த பத்து வருடங்களாக சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுக்கு சாமரம் வீசிக்கொண்டிருந்துவிட்டு, இப்போது மக்களை அணிதிரட்டி ஏதோ வெட்டிக் கிழிக்கப்போவதாக மாவையர் திருவாய் மலர்ந்தருளியிருப்பது, தமிழர்களுக்கு நல்லது நடக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்திலல்ல, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலையும் வெற்றிபெற்று அரியாசனத்திலை அமரவேண்டும் என்ற அதீத எதிர்பார்ப்புத்தான்.*

**அதுசரி, சோழியன் குடுமி சும்மா ஒன்றும் ஆடாது.**

## கத்துக்குட்டியின் வரலாற்றுத் திரிப்பு

*தமிழர்கள் வாழ்ந்த தேசம் தமிழீழம். அந்தத் தேசத்தை மீட்பதற்குத்தான் தமிழ் மக்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துப் போராடினார்கள். அளப்பரிய தியாகத்தை செய்திருக்கின்றார்கள். ஆனால், சிங்களவர்களுடைய நாட்டில் தமிழீழம் கேட்பதுபோன்று அரசியல் கத்துக்குட்டி எம்.ஏ. சுமந்திரன் கூறியிருக்கின்றார். இலங்கை தமிழரசுக்கட்சியின் 70வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதுதான்*



*அவர் இதனைச் சொல்லியிருக்கின்றார். அவர் சொன்னதை நீங்கள் ஒருக்கா வடிவாகக் கேளுங்கோ... “நீங்கள் எங்களையும் உங்கள் தேசத்தில் உள்வாங்கி எமக்கும் உரிய உரிமைகளை வழங்கி வாழ விருப்பமில்லை என்று சொன்ன காரணத்தினாலே எங்களை தனியே போகவிடுங்கள் என்ற தீர்மானத்தினை வட்டுக்கோட்டையில் நாங்கள் நிறைவேற்றினோம்” என்று சொல்லியிருக்கின்றார்.*

*தமிழினத்தின் வரலாறு தெரியாத ஒருத்தரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நுழைக்கும் போதே, எதிர்காலத்தில் தமிழர்களை நாசமாக்கவே நுழைக்கப்பட்டார் என்பது அனைவருக்கும் புரிந்திருந்தது. கொடுத்த வேலையை சுமதந்திரன் கனகச்சிதமாகவே செய்துகொண்டிருக்கின்றார்.*

**அதுசரி, கொடுத்த காசுக்கு கூவத்தானே வேணும்.**

## வரலாறு, போராட்டம், கொள்கை தெரியாத கூட்ட(மைப்பு)ம்

*இலங்கைத் தீவில் தமிழினம் ஒரு தேசிய இனம் என்பதில் விடுதலைப் புலிகள் மிக உறுதியாகவே இருந்தார்கள். ‘தமிழ் மக்கள் சிறுபான்மை இனமல்ல’ என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளார்கள். விடுதலைப் புலிகளின் இந்தக் கோட்பாடுகள் தெரியாமல் வேற்றுக்கிரகத்தில் இருந்துவந்தவர்களைப்போல், தமிழ் மக்களை சிறுபான்மை*



*இனமாக்குவதில் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைந்திருக்கின்றது. கடந்த வாரம் கைதடி வினாயகர் முன்பள்ளி பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ .சரவணபவன் தமிழ் மக்களை சிறுபான்மை இனம் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*தமிழர்களின் வரலாறு, போராட்டம், கொள்கை எதுவும் தெரியாத இவர்கள் எல்லாம் எப்படித் தான் கூட்டமைப்பிற்குள் நுழைந்தார்களோ..?*

*“எங்களுடைய முழு உரிமையை பறிக்கும் செயல் இந்த தேசிய கீதப் பிரச்சனை, ஒரு தேசிய இனம் தான் இருக்கின்றது. அதற்கு கட்டுப்படுங்கள் என்று சொல்கிறார்கள், அப்போ நாங்கள் வந்தேறு குடிகள், அடிமைகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். சிறுபான்மையினம் தாங்களே ஒரு தேசியகீதத்தை உருவாக்கி படிக்கட்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ தெரியாது” என்று சரவணபவன் ஆதங்கப்பட்டிருக்கின்றார்.*

**அதுசரி, வேலியே பயிரை மேயும்போது, மாட்டுக்கடித்து என்ன பயன்?**

*–நாற்சந்தி நயினார்*


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
Y.P.Thas JEWELLERY
சுப ஆரம்பங்களின் ஆரம்பம்!
9, Rue Perdonnet - 75010 Paris
Tél.: 09 81 62 12 81 Port.: 06 42 17 32 69


JAFFNA BOUCHERIE
அனைத்து இறைச்சி வகைகளையும் தரமானதாகப் பெற்றுக்கொள்ள...
70 Rue Louis Blanc, 75010 Paris
Tel: 01.40.35.39.79
M°: La Chapele Gare du Nord


SUTHAGINY SASU
மளிகைப் பொருட்கள்
மரக்கறி வகைகள்
குளிர்பானங்கள்
Drancy RERக்கு அருகாமையில்
11, Rue Morin, 93700 Drancy
Tél: 09 51 24 37 70


Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65


பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34


பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
எமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள்!
தொடர்பு கொள்ள SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr


லா சப்பலில் சாரதி பயிற்சிநிலையம்
3i Conduite
CODE DE LA ROUTE பயிற்சி வகுப்புகள்
CONDUITE பயிற்சி வகுப்புகள்
CONDUITE EXAM அனுமதி பெற்றுத்தரப்படும்
57 RUE LOUIS BLANC - 75010 PARIS
SRUTHI STUDIO வின் உள்புறம்
Tél : 06 51 38 87 33


Rapid Emballages
உங்கள் உணவகம், இல்லம் மற்றும் மண்டப நிகழ்வுகளுக்கான உபயோகப் பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள...
1 Bis rue du chemin vert,
93800 Epinay sur Seine
Tel : 0158340422 / 0616812200


Sport சாரதி பயிற்சி நிலையம்
Sport Auto Ecole - 4, rue de Jules Ferry, 95400 Villiers Le Bel
Tél.: 01.74.93.70.40 / 06.13.38.85.50


மாங்கல்யம் நகை மாடம்
புதிய நகைச் சீட்டு ஆரம்பம்
01.01.2020க்கு முன் உங்கள்பதிவுகளைச் செய்து சீட்டு அட்டையைப் பெற்றுக் கொள்ளுங்கள்!
122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com


KMS Bijouterie
உங்கள் எண்ணம் போல் நகைத் தெரிவுகளுக்கு...
199 Rue du Faubourg. St.denis - 75010 Paris
Tél : 01 40 05 94 87
Email - kmsbijouterie@free.fr Metro - Gare de L 'est / Gare du Nord


ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152


Ocean Indien
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60


அனைத்து செல்பேசித் தேவைகளுக்கும் லாச்சப்பலில்.....
PHONE 2000
www.phone2000.eu
2, rue Perdonnet, 75010 Paris Tél.: 01 40 05 03 43
117, rue d'avron, 75020 Paris Tél.: 01 43 67 70 50
87, rue des Pyrénées, 75020 Paris Tél.: 01 40 09 13 15


S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!
La Chapelle ou Gare du Nord
199 Rue de Fbg St.Denis, 75010 Paris Tél: 01 58 20 17 33
13 Rue Cail, 75010 Paris Tél: 01 46 07 43 42

ஒரு கதை

## நாக்கு எதையும் செய்யும் !

குரு ஒருவருக்கு பேரழகியான ஒரு மகள் இருந்தாள், அதனால் அவளை திருமணம் முடிக்க பலர் போட்டி போட்டனர். அவர் தன் மகளை மணம் முடிக்க போட்டி போட்டவர்களிடம் 'நான் இரண்டு கேள்விகள் கேட்பேன். அதற்கு சரியான பதில் சொல்பவருக்கே எனது மகள்' என்று சொன்னார்.

மறுநாள் போட்டியாளர்கள் அனைவரும் குரு வீட்டில் கூடி இருந்தனர். குரு அவர்களைப் பார்த்து 'உலகிலே இனிமையான ஒரு பொருளை கொண்டு வாருங்கள்' என்று சொன்னார். மறுநாள் எல்லோரும் ஆளுக்கொரு பொருளை கொண்டு வந்தனர்.

ஒருவன் தேனைக் கொண்டுவந்தான். இன்னொருவன் கரும்பைக் கொண்டு வந்தான். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு இனிமையான பொருளைக் கொண்டு வந்திருந்தனர். வரிசையில் கடைசியாக குருவின் ஒரு ஏழை சிஷ்யனும் நின்றிருந்தான்.

குரு அவனைப் பார்த்து 'நீயுமா..?' என்று ஆச்சரியமாக கேட்டார். சீடன் 'நான் உங்கள் மகளைக் காதலிக்கிறேன்' என்று சொன்னான். குரு 'நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்?' என்று கேட்டார்.

சீடன் தான் கொண்டு வந்திருந்த சிறிய பெட்டியை திறந்து காட்டினான்.

அதனுள் ஓர் ஆட்டின் நாக்கு இருந்தது. குரு அதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

குரு 'என்ன இது எதற்காக இதை கொண்டு வந்தாய்?' என்று கேட்டார்,

சீடன் 'குருவே நீங்கள் உலகிலேயே இனிமையான பொருளை கொண்டுவர சொன்னீர்கள். நாவை விட உலகில் சிறந்த பொருள் வேறு ஏது? மனிதனுடைய நாவை கொண்டு வர முடியவில்லை. அதனால் தான் குறிஈடாக ஆட்டின் நாவை கொண்டு வந்தேன். நாவில் இருந்து தான் இனிமையான சொற்கள் வருகின்றன. அதை சோகத்தில் இருப்பவன் கேட்டால் சந்தோசம் அடைகிறான். நோயாளி கேட்டால் குணம் அடைகிறான்' என்றான். குரு 'இதில் நீ வெற்றி அடைந்தாய். வாழ்த்துக்கள்' என்று சொன்னார்

சீடன் அடுத்த கேள்வி என்ன என்று கேட்டான்.

குரு 'உலகிலேயே கசப்பான ஒரு பொருளை கொண்டு வா' என்று சொன்னார். மறுநாள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கசப்பான பொருளை கொண்டு வந்தனர். ஒருத்தன் வேப்பங்காயை கொண்டு வந்தான், இன்னொருவன் எட்டிக்காயை கொண்டு வந்தான். கடைசியாக சீடன் வந்தான். அவன் கையில் அதே பெட்டி.




அவன் அதை திறந்து காட்டினான். அதே ஆட்டின் நாக்கு.

குரு 'என்ன விளையாடுகிறாயா? இனிமையான பொருளை கேட்டேன் நாவை கொண்டு வந்தாய். கசப்பான பொருளை கேட்டதற்கும் நாவை கொண்டு வந்து இருக்கிறாயே! என்ன அர்த்தம்?' என்று கோபமாக கேட்டார்.

சீடன் 'தீய சொற்களை பேசும் நாவை போல கசப்பான பொருள் உலகில் உண்டா? அதில் இருந்து வரும் சொற்களைக் கேட்டால் மகிழ்ச்சியாய் இருப்பவனும் துயரம் கொள்கிறான். நட்பாக இருப்பவனும் பகையாக மாறுகிறான். எனவே நாவு தான் உலகிலேயே கசப்பான பொருள்' என்று சொன்னான். சீடனின் அறிவைக் கண்டு வியந்த குரு தான் மகளை அவனுக்கே மணம் முடித்துக் கொடுத்தார். நாவு ஓர் அற்புத பொருள். சொர்க்கத்தின் திறவுகோலும் அது தான். நரகத்தின் வாசல்படியும் அது தான்.

ஒரு குறள்



அறத்துப்பால் – வாய்மை

**புறந்தூய்மை நீரா னமையும்**
**அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்.**

**நீரில் குளிப்பதால் உடலின் அழுக்கு மட்டுமே நீங்கும். மனம் அழுக்குப்படாமல் தூய்மையுடன் விளங்கிட, சொல்லிலும் செயலிலும் வாய்மை வேண்டும்.**

ஒரு விதை

## விடுதலைப் போராட்ட வரலாற்றில் தளபதி கிட்டு ஓர் அத்தியாயம்



'கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு'

இது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தளபதி கிட்டுவைப் பற்றி கூறியதாகும்.

உலகின் சரித்திரம் காலத்திற்கு காலம் உருவாகும் சாதனையாளர்களின் சரித்திரமாகவே அமைகின்றது. அவ்வாறே ஒரு நாட்டின் வரலாறாக இருந்தாலென்ன, ஓர் இனத்தின் வரலாறாக இருந்தாலென்ன, ஓர் போராட்டத்தின் வரலாறாக இருந்தாலென்ன, அதில் சாதனையாளர்கள் சரித்திரத்தில் இடம்பெறுபவர்களாக இருக்கின்றார்கள்.

இந்தவகையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில், தமிழீழத்தின் வரலாற்றில் ஏன் தமிழினத்தின் வரலாற்றிலேயே இடம்பெறக்கூடிய அளவிற்கு சாதனைகள் பல புரிந்தவர் கேணல் கிட்டு.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவர் முத்திரை பதிக்காத துறையே இல்லையென்பது மட்டுமல்ல போராட்டம் ஈட்டியுள்ள, ஈட்டிவரும் வெற்றிகள், சாதனைகள் என்பவற்றை ஆரம்பித்து வைத்தவர் கேணல் கிட்டு என்றே கூறமுடியும்.

தொடர்ச்சி 36ம் பக்கம்

ஒரு தகவல்

## சர்வதேச தேநீர் தினம் அறிவிப்பு



இத்தாலியில்உள்ள மிலான் நகரில் 2015ம் ஆண்டு உணவு மற்றும் விவசாய அமைப்பின் அரசுகளுக்கு இடையேயான குழுக் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில், சர்வதேச தேநீர் தினம் என ஒரு நாளை அறிவித்து கடைப்பிடிக்க வகை செய்ய வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுத்திருந்தது. இதை ஐ.நா. சபை ஏற்றுக்கொண்டு விட்டது. ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 21ம் திகதியன்று சர்வதேச தேநீர் தினம் கடைப்பிடிக்கப்படும் என ஐ.நா. பொதுச்சபை அறிவித்துள்ளது. இது குறித்து ஐ.நா. பொதுச்சபை விடுத்த அறிவிக்கையில், சர்வதேச தேநீர் தினத்தைக் கடைப்பிடிப்பது தேயிலையின் நிலையான உற்பத்தி, தேயிலை பயன்பாடுக்கு ஆதரவான நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கான கூட்டு நடவடிக்கையை ஊக்குவிக்கும், வளர்க்கும் பசி மற்றும் வறுமையை எதிர்த்துபோராடுவதில் அதன் முக்கியத்துவத்தைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும். எனவே மே 21ம் திகதி சர்வதேச தேநீர் தினமாக கடைப்பிடிக்க முடிவு செய்யப்படுகிறது என கூறப்பட்டுள்ளது.

ஒரு பொன்மொழி

**மிக நல்ல புத்தகங்களை முதலிலேயே படித்து விடுங்கள். இல்லையெனில் அவற்றைப் படிக்க உங்களுக்கு வாய்ப்பு கிடைக்காமலேயே போய்விடும்.**

- கோரா

ஒரு பழமொழி

**கொலைக்கு அஞ்சாதவன்;**
**பழிக்கு அஞ்சுவானா?**

ஒரு வரலாறு

## விரல்களை கண்களாக மாற்றிய வித்தகர்



ஒரு காலத்தில் பார்வையற்ற மனிதருக்கு கல்வி என்பது எட்டாக் கனியாக இருந்தது. அந்த முறையை மாற்றி விரல்களை கண்களாக மாற்றி, அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றியவர் லூயி பிரெய்லி (Louis Brille) . அவர் பிறந்த தினமான ஜன.4ம் திகதியைத்தான், சர்வதேச பிரெய்லி தினம் (விழிப்புலனற்றோர் தினம் international brille day) என கொண்டாடுகிறோம். பிரான்ஸ் தலைநகர் பரிசில் 1809, ஜன.4ம் திகதி பிறந்தவர் லூயிஸ் பிரெய்லி. இவரது தந்தை குதிரை லாடம், சேணம் தயாரிக்கும் பட்டறை வைத்திருந்தார். குழந்தையாக இருந்தபோது, ஒரு நாள் தந்தையின் பணிமனையில் ஊசியை வைத்து விளையாடினார் லூயிஸ். அப்போது ஊசி கண்ணில் குத்தி காயம் ஏற்பட்டது. காயத்திற்கு முறையான சிகிச்சை பெறாததால் அந்தக் கண்ணில் பார்வை பறிபோனது. பின்னர் ஏற்பட்ட கண் நோயால் அவருடைய இன்னொரு கண்ணிலும் பார்வையை இழந்தார். 8 வயது முழுமை அடைவதற்குள் இரண்டு கண்களிலும் முழுவதும் பார்வை பறிபோனது.

பார்வை பறிபோனதும் வாழ்க்கையே முடிந்து விட்டது என அவர் நினைக்கவில்லை. பிரான்சின் பிரபல பாதிரியாரான வேலண்டெய்ன் இவருக்கு பார்வையாக விளங்கினார். அவருடைய உதவியால் தனது 10வது வயதில் ரோயல் இன்ஸ்டிடியூட் போர் பிளைண்ட் யுத் என்ற பார்வையற்றோருக்கான கல்வி நிறுவனத்தில் லூயிஸ் சேர்ந்தார்.

அப்போது பார்வை இல்லாதவர்களுக்கான உலகின் ஒரே பள்ளி இதுதான். அங்கு எழுத்துகளை விரலால் தொட்டு உணர்வதற்கு ஏற்ப அவற்றை மேடாக்கிப் புத்தகங்கள் தயாரித்து மாணவர்களுக்கு கல்வி புகட்டப்பட்டு வந்தது. மொழிகள், இலக்கணம், இசை, கணிதம், கைத்தொழில் பயிற்சி அனைத்தும் இந்த முறையிலேயே கற்பிக்கப்பட்டன.

தொடர்ச்சி 36ம் பக்கம்

## நீர் இன்று அமையாது உலகு

*புவியை வெப்பமாக்கி*
*தண்ணீரை*
*நாசப்படுத்தி*
*போத்தல் தண்ணீரில்*
*மனிதன்*
*வாழ்ந்துவிடுவான்.*
*ஏனைய உயிரினங்கள்*
*எங்கு செல்லும்*
*போத்தல்*
*தண்ணீருக்காக?*




இனிய
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
Tilda
GENUINE GOODNESS
GRAND
EXTRA LONG BASMATI RICE
10kge
Tilda
GENUINE GOODNESS
PURE
ORIGINAL
BASMATI
GLUTEN FREE
20kg
Tilda
GENUINE GOODNESS
GOLDEN SELLA
Tilda
GENUINE GOODNESS
BROWN BASMATI RICE
WHOLEGRAIN
TILDA.COM
@TildaBasmati
@TildaRice
@TildaRice

சோழகரிகாலன்

# புலனாய்வுத் துறைகளின் கண்களில் மண்ணைத்தூவி... ஒரு பொருளாதாரக் குற்றவாளியின் தப்பியோட்டம்!




ஜப்பானின் புலனாய்வுத்துறையும், நீதித்துறையும் பெரும் அதிர்ச்சிக்கும் கோபத்திற்கும் உள்ளாகியுள்ளன. புது வருடம் பிறப்பதற்கான கொண்டாட்டத் தயாரிப்பில் ஜப்பான் மூழ்கியிருக்க, பொருளாதாரக் குற்றவாளியாக, ஜப்பானினால் கைது செய்யப்பட்டிருந்த, நிஸான் (NISSAN) மற்றும் ரெனாா (RENAULT) வாகன நிறுவனங்களின் முன்னாள் நிர்வாக இயக்குநர் கார்லோஸ் கோஸ்ன் (Carlos Ghosn) மாயமாக மறைந்திருந்துள்ளார்.

எந்நேரமும் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த, ஜப்பானின் மிக முக்கிய குற்வாளியான கோஸ்ன், கண்காணிப்பு ஒளிப்பதிவுகளிலோ, நீதித்துறை, காவற்துறை, மற்றும் புலனாய்வாளர்களின் கண்களில் சிக்காது, மாயமாகி உள்ளார். கடந்த இரண்டரை வருடங்களாக, இவர் காவலில் இருந்த வீடு, ஜப்பானின் எல்லைக்காவற்படையினரால், 24 மணிநேரமும் கண்காணிக்கப்பட்டு வந்த நிலையிலேயே, இவர் தப்பிச் சென்றிருப்பது, பெரும் அதிர்வலைகளை உண்டாக்கி உள்ளது.

பெரும் பொருளாதார மோசடிகளைச் செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டில், கோஸ்ன் 2018ஆம் ஆண்டின் நவம்பர் இறுதிப்பகுதியில், கைது செய்யப்பட்டு, ஜப்பானின் சிறையில் 18 மாதங்கள் அடைக்கப்பட்டார். அதன் பின்னர், ஒன்பது மில்லியன் டொலர் பிணையில், ஒரு வாடகை வீட்டில், வீட்டுக் காவலில் இருக்க, ஜப்பானின் நீதிமன்றம் ஒப்புதல் அளித்திருந்தது.



2019 நத்தார் வாரங்களில், கோஸ்னின் விசாரணைகளை 2020 ஜனவரியில் ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களை, ஜப்பானின் நீதித்துறை கலந்தாலோசிக்க ஆரம்பித்தது. கோஸ்ன் ஜப்பானிற்கு வந்தபோது பிரெஞ்சுக் கடவுச் சீட்டுடனே வந்திருந்தார் என்றும், இந்தக் கடவுச் சீட்டு, ஜப்பானின் நீதித்துறையினரால் கையகப்படுத்தப்பட்டது என்றும் ஜப்பான் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இவ்வளவு பெரும் ஆயத்தங்களுடன் இயங்கிய ஜப்பான் அரசு, தன் தீவிர கண்காணிப்பின் போதே கோஸ்னைக் கோட்டை விட்டுள்ளது.

புதுவருடக் கொண்டாட்டமானது ஜப்பானில் மிகவும் முக்கியமான விடுமுறைதினமும் கொண்டாட்டமுமாகும். அரச நிறுவனங்கள், மற்றும் பெரும்பாலான நிர்வாகங்கள் அனைத்திற்கும், ஒரு வார விடுமுறை விடுவது வழக்கம். தன் மீதான விசாரணைகள் ஆம்பிக்கப்பட்டால் தனக்கான தண்டனை உறுதிப்படுத்தப்படும் என்ற நிலையில் தப்பிச் செல்லும் திட்டத்தை கோஸ்ன் தீட்டியுள்ளார்.

இவர் தங்கியிருந்த நீதிமன்றம் அருகிலுள்ள டோக்கியோ விட்டில், இவரிற்கான அனைத்துத் தொலைத்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டே இருந்தது. இவரிற்கான, டோக்கியோவில் இருக்கும் சட்டத்தரணி வீட்டிற்குச் செல்வதற்கு மட்டுமே இவரிற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அங்கு மட்டுமே இவர் இணையத்தை உபயோகிக்கும் அனுமதி இருந்துள்ளது. ஆனால் இவரின் தலைமறைவிற்கும் தனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்றும், தான் பேரதிர்ச்சியில் உள்ளதாகவும் இவரிற்கான டோக்கியோவிற்கான சட்டத்தரணி தெரிவித்துள்ளார். அவரின் மூன்று கடவுச் சீட்டுக்களும் அரசாங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுத் தன்னிடம் வழங்கப்பட்டதாகவும், அந்த ஆவணங்கள் அனைத்தும் இன்னமும் தன்னடமே உள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவை அனைத்தையும் மீறி, கோஸ்ன், தனக்கான லெபனானில் உள்ள சட்டத்தரணியோடு தொடர்பை உண்டாக்கிப் பெரும் திட்டத்தைத் தீட்டியுள்ளார்.

கோஸ்ன் ஜப்பானில் இருந்து தலைமறைவாகிய இரண்டு நாட்களிற்குள், தனது தாய் நாடான லெபனானில் தறையிறங்கி உள்ளார் எனத் தெரியவந்துள்ளது. 2018 இல் இவர் ஜப்பானில் கைது செய்யப்பட்ட உடனேயே, தங்களது நாட்டின் கதாநாயகனை, ஜப்பான், நீதிக்குப் புறம்பாகக் கைது செய்திருப்பதாகக் கண்டித்திருந்தது. லெபனானின் மக்களும் இவரை ஒரு பிரமாண்டப் பரிமாணத்துடனே பார்த்து வந்துள்ளனர்.

**இவர் தப்பிச் சென்ற விதம், பெரும் திகில் திரைப்படங்களைவிட விறுவிறுப்பு மிகுந்ததாகவே உள்ளது. இவர் தப்பிச் சென்ற விதத்தை உலகின் பொதுப் பங்குச்சந்தைப் பத்திரிகையான Wall Street Journal ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளது.**

லெபனான் அரசாங்கம், தங்களிடம் தஞ்சமடைந்த கோஸ்னை வரவேற்றுள்ளது. லெபனானிற்கும் ஜப்பானிற்கும் எந்தவிதமான கைதிப் பரிமாற்ற ஒப்பந்தங்களும் இல்லாமையினால் ஜப்பான் பெரும் சிக்கலிற்கு உள்ளாகியது. லெபனான் அரசாங்கம், ஜப்பானின் எந்தக் கோரிக்கைக்கும் செவி சாய்க்காது என்பது ஜப்பானிற்குத் தெளிவாகவே புரிந்துள்ளது.

இவர் தப்பிச் சென்ற விதம், பெரும் திகில் திரைப்படங்களைவிட விறுவிறுப்பு மிகுந்ததாகவே உள்ளது. இவர் தப்பிச் சென்ற விதத்தை உலகின் பொதுப் பங்குச்சந்தைப் பத்திரிகையான Wall Street Journal ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளது. ஒரு பெரும் இசைக்கருவி வைக்கக் கூடிய, ஒரு பெரும் பெட்டியினுள், சுவாசிப்பதற்கான துளைகள் இடப்பட்டு, அதனுள் ஒளிந்திருந்தே கண்காணிப்பாளர்களின் கண்களில் மண்ணைத்தூவி கோஸ்ன் வெளியேறி உள்ளார். அதன் பின்னர் ஜப்பானின் ஒசாக்கா விமான நிலையத்தில் இருந்து, பிரத்தியேக விமானத்தில் துருக்கி நோக்கிச் சென்றுள்ளார். துருக்கியிலிருந்து ஒழுங்கு செய்யப்பட்ட வேறொரு தனியார் விமானத்தின் மூலம் லெபனானின் தலைநகரமான பெய்ரூட்டை வந்தடைந்துள்ளார்.

இதேநேரம், துருக்கி, இரண்டு தனியார் விமான சேவையின் வெளிநாட்டு விமானிகளைக் கைது செய்துள்ளது. ஆனால் இந்த விமானிகள் செலுத்திய விமானம், துருக்கியின் MNG நிறுவனத்திற்கு சொந்தமானது. இந்தக் கைதினைக் கண்டித்துள்ள இந்த நிறுவனம், தங்கள் சேவையிடம் இரண்டு சரக்கு விமானங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டதாகவும், இந்த இரண்டு விமானங்களைப் பதிவு செய்தவர்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் தொடர்பில்லாதவர்கள் என்றும், தங்கள் பதிவுகள் எதிலும் கார்லோஸ் கோஸ்னின் பெயர் இல்லையென்றும் வாதிட்டுள்ளனர்.

கோஸ்ன் தப்பிய விதத்தை ஜப்பான அரசு ஏற்க மறுத்தாலும், அவர்களிடம் வேறு எந்தவிதமான விளக்கங்களும் இல்லை. இவரின் மூன்று கடவுச் சீட்டுக்களும் தங்களிடமே உள்ளதாகத் தெரிவித்துள்ள



ஜப்பானிடம், அந்தக் கடவுச்சீட்டுகளிற்குரிய நபர் இல்லை என்பதுதான் விநோதம்.

ஜப்பான் அரசு தங்களிடம் உள்ள ஆதாரங்களை வைத்து இந்த முடிச்சுகளை அவிழ்க்க பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது. இதில் வேறு அரசாங்கங்களின் உதவியும் கிடைத்திருக்கும் என்றும், பெரும் நிறுவனங்களின் உதவியுடன் மட்டுமே தான் இது நடந்திருக்கும் என்றும், கோஸ்ன் இற்கு வழங்கிய பிணையைத் தாம் உடனடியாக இரத்துச் செய்வதாகவும், முன்னாள் அமைச்சரும், கோஸ்னின் வழக்கினைக் கையாண்ட வருமான மசகிஸா சாட்டோ குற்றம் சாட்டி உள்ளார். இவர் தப்பிய விதத்தினை ஆராய அமெரிக்க நிறுவனம் ஒன்றின் உதவியையும் ஜப்பான் நாடி உள்ளது.

தொடர்ச்சி 25ம் பக்கம்

# தாயக – புலம்பெயர் கலைஞர் எமக்கான அடையாளங்க



**வட தமிழீழம் யாழ்ப்பாணத்தில் இருந்து அண்மையில் இலங்கைத் தமிழ் பழைய மாணவர் ஒன்றியம் - பிரான்சின் ஏற்பாட்டில் வருடாந்த கலை நிகழ்வில் கலந்துகொள் வதற்காக பிரான்சுக்கு வருகைதந்திருந்த பல் வாத்தியங்களை இசைக்கும் சாதனை படைத்த கலைஞன் செல்வன் தருமராஜா துவாரகன் அவர்கள் எமது ஈழமுரசு இதழுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் இது.**

***எமது பத்திரிகையின் வாயிலாக முதலில் உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுங்கள்?***

நான் தருமராஜா துவாரகன், யாழ்ப்பாணம் அரியாலையில் வசிக்கின்றேன். நான் எனது ஆரம்பக்கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியில் கற்று புலமைப் பரிசில் சித்தியடைந்து, தொடர்ந்து ஆங்கில மொழி மூலம் கற்று உயர்தரம் வரை கற்றேன். தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் மனித வள முகாமைத்துவப்பிரிவில் இறுதியாண்டு மாணவனாகக் கற்றுக்கொண்டிருக்கிறேன்.

***கலைத்துறையில் உங்களுக்கு எப்படி ஈடுபாடு வந்தது?***

எனது தந்தையார் ஒரு பாடகர். அவர் முறையாகச் சங்கீதம் கற்கவில்லை. ஒரு கேள்வி ஞானத்தில் தான் அவர் பாடகரானார். அதனால் பிள்ளைகள் முறையாக இசையைப் பயிலவேண்டும் என்று எனது ஐந்து வயதில் பள்ளிக்குச் செல்லும்போதே, மிருதங்கம் கற்பதற்கும் அனுப்பிவைத்தார். மிருதங்கத்தை 16 வருடங்கள் கற்று 2016 ஆம் ஆண்டு மிருதங்கத்தில் ஆசிரியர் தரத்தை நிறைவுசெய்து, ‘கலாவித்தகர்’ பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன். அதில் இருந்துதான் எனது இசைவாழ்க்கை ஆரம்பமானது. அதில் இருந்து ஒவ்வொரு வாத்தியக் கருவிகளையும் கற்று இன்று ‘வானவில்’ என்ற ஓர் இசைக்குழுவையும் நடாத்தி வருகின்றேன்.

***கலைத்துறை வளர்ச்சி இன்று தாயகத்தில் எவ்வாறு உள்ளது?***

தாயகத்தில் இன்று தென்னிந்திய சினிமாவில்தான் மூழ்கியுள்ளார்கள். அது மட்டுமல்லாமல் தாயகக் கலைஞர்களுக்கான மக்களின் ஆதரவு குறைவடைந்தே செல்கின்றது. எமது தாயகத்தில் உள்ள ஊடகங்களும் தென்னிந்தியக் கலைஞர்களுக்கே தமது ஆதரவையும் முக்கியத்துவத்தையும் கொடுத்து வருகின்றன. நாங்கள் இந்தக் கலைத்துறையில் முன்னேற்றம் அடைவதென்றால் எமது சொந்த முயற்சியைத்தான் கையாளவேண்டும். அத்தோடு, முகநூல் போன்ற சமூக இணைய வலைத்தளங்கள் ஊடாகத்தான் எமது திறமையை வெளியுலகிற்கு கொண்டுவரமுடிகின்றது. அதாவது தாயகத்தில் உள்ள ஊடகங்களின் ஆதரவு ஒப்பீட்டளவில் மிகக்குறைவாகவே உள்ளது என்றே சொல்லலாம். இந்தியத் தொலைக்காட்சியில் அல்லது வானொலியில் ஒரு கலைஞர் வந்து பாடினால், அவர் மறுநாளே உலகப் புகழ்பெற்ற கலைஞராக மாறிவிடுவார். அந்த நிலைமை தாயகத்தில் உள்ள கலைஞர்களுக்கு மிகவும் குறைவாக உள்ளமை மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயம்.

***இதுவரை நீங்கள் உங்கள் முயற்சியின் பயனாக உருவாக்கிய படைப்புக்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?***

நான் யாழ்.பரியோவான் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்தபோது, எமது பள்ளிக்கும் யாழ்.மத்தியகல்லூரிக்கும் இடையே வருடாந்தம் நடைபெறும் துடுப்பாட்டப் போட்டியான ‘வடக்கின் பெரும்போர்’ இனை முன்னிட்டு ஒரு பாடல் ஒன்றை உருவாக்கியிருந்தேன். அந்தப்பாடல் புலம்பெயர்வாழ் பரியோவான் கல்லூரி பழையமாணவர்கள் மத்தியிலும் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது. அதற்கு முன்னரும் எனது 14 வயதில் “யாழ்ப்பாண மண்ணடா கல்வியில் நாங்கள் சிங்கமடா...” என்ற ஒரு பாடலை உருவாக்கியிருந்தேன். அதனை வெளியிடவில்லை. பாடசாலை மட்டத்தில் நடைபெறும் கலை விழாக்களில் எனது பங்களிப்பு நிச்சயமாக இருக்கும். மேற்கத்தேய வாத்தியங்களாக இருந்தாலும் சரி கீழைத்தேய வாத்தியமாக இருந்தாலும் சரி எந்த நிகழ்ச்சியிலும் என்னுடைய பங்களிப்பை வழங்கி வந்திருக்கின்றேன். பாடசாலைதான் எனது கலை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியதாக இருக்கின்றது. அது மட்டுமல்லாது, பாடசாலைக் காலத்தில் தேசியமட்டத்தில் இரண்டு தடவை வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட அணியில் நான் ஒரு மிருதங்க வாத்தியக் கலைஞனாக இருந்திருக்கின்றேன்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தினால் நடாத்தப்படுகின்ற கலை நிகழ்வுகள் அனைத்திலும் இசைத்துறை சார்ந்து எனது பங்களிப்பு நிச்சயமாக இருக்கும். முதலாம் வருடத்தில் இருந்து இறுதி வருடம் வரை எனது நிகழ்வுகள் பல இடம்பெற்றுள்ளன.



***நீங்கள் பல் வாத்தியங்களை இசைப்பதில் திறமைபெற்றுள்ளதாக அறியமுடிகிறது. அதுபற்றி...?***

நான் 10 இசைக்கருவிகளை வாசிப்பேன், தண்ணுமை(மிருதங்கம்), சுரத்தட்டு (கீபோட்),ஒக்ரபாட், கடம், கஞ்சிரா, கிற்றார், ட்ரம்ஸ், தவில், உடுக்கு,



“எமது தாயகத்தில் உள்ள ஊடகங்களும் தென்னிந்தியக் கலைஞர்களுக்கே தமது ஆதரவையும் முக்கியத்துவத்தையும் கொடுத்து வருகின்றன. நாங்கள் இந்தக் கலைத்துறையில் முன்னேற்றம் அடைவதென்றால் எமது சொந்த முயற்சியைத்தான் கையாளவேண்டும்.”

# கள் இணையும்போது
# ள் பாதுகாக்கப்படும்!

சந்திப்பு: கந்தரதன்



> “என்போன்ற தாயகத்தில் உள்ள கலைஞர்களை இங்கே அழைத்து நிகழ்ச்சிகளைச்செய்வது வரவேற்கத்தக்க விடயம். எமது தாயகத்தில் பல திறமையான கலைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் ஊக்கப்படுத்துவதுடன், புலம்பெயர் கலைஞர்களுடன் இணைந்து செயற்படும்போது, எமக்கான அடையாளங்களைப் பாதுகாக்கமுடியும் என்று நான் நம்புகின்றேன்.”

மோசிங் போன்ற வாத்தியங்களை வாசிப்பேன். கொழும்பிலுள்ள தொலைக்காட்சி ஒன்று நடாத்திய பல்துறை சார்ந்த போட்டி நிகழ்ச்சியில் ஓர் இசைக் கலைஞனாக ஒரே மேடையில் 10 வாத்தியக்கருவிகளையும் வாசித்துக்காட்டியிருந்தேன். 5 ஆயிரம் பேர் பங்குபற்றிய போட்டியில் ஒரு தமிழனாக 12 ஆம் இடம்வரை முன்னேறியிருந்தேன். அத்துடன் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மிருதங்கம், கீபோட் போட்டியில் முதலிடத்தைப்பெற்றிருந்தேன். 2018 ஆம் ஆண்டு ‘கலைமாமணி’ விருதையும் பெற்றுக் கொண்டேன்.

**இன்று வரை உங்களின் கலைப் பயணத்தில் மறக்கமுடியாத தருணம் என்று எதனைக் கூறுவீர்கள்?**

மறக்கமுடியாதது என்று சொன்னால் நிறைய இருக்கின்றது. எனது அடுத்த கட்ட வளர்ச்சி என்று பார்க்கும்போது, வெளிநாட்டுப் பயணங்களைத்தான் குறிப்பிடுவேன். இந்தியக் கலைஞர்களைத்தான் புலம்பெயர் நாடுகளுக்கு நிகழ்வுகளுக்கு அழைப்பார்கள். ஆனால், தாயகத்தில் இருந்து என்போன்ற கலைஞர்களை அழைப்பது என்பது பெரிய விடயம். தொழில் நுட்ப வசதிகள் இல்லாத நிலையிலும், ஊடக ஆதரவு இல்லாத நிலையிலும் எங்களை இனங்கண்டு எம்மை புலம்பெயர் நாடுகளுக்கு அழைத்து இசை நிகழ்வை நடாத்துவது என்பதை பெரிய விடயமாக நான் கருதுகிறேன். முதன்முதலாக 2018 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டிற்குச் சென்று இசை நிகழ்ச்சியை வழங்கியிருந்தேன். அங்கே புலம்பெயர் மக்கள் மத்தியில் பெரிய வரவேற்புக்கிடைத்திருந்தது. அதனை எனது இசைவாழ்க்கையில் முக்கிய மைல்கல்லாகப் பார்க்கிறேன். 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அவுஸ்திரேலியா நாட்டுக்கும், ஒக்ரோபர் மாதம் நோர்வே நாட்டுக்கும் தற்போது பிரான்சு நாட்டுக்கும் இசைநிகழ்ச்சியை வழங்க வந்துள்ளேன். இவ்வாறு புலம்பெயர் மக்கள் மத்தியில் இசை நிகழ்வை வழங்க வருவதென்பதை, எனது அடுத்த கட்ட நகர்வாகவே நான் கருதுகின்றேன்.

**பிரான்சில் போக்குவரத்து பணிப் புறக்கணிப்புக்கு மத்தியில் நிகழ்வில் கலந்துகொண்டபோது எவ்வாறு இருந்தது?**

பிரான்சில் இலங்கைத் தமிழ் பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரண்டு நிகழ்விற்காக தாயகத்தில் இருந்து என்னையும் ஏனைய கலைஞர்களையும் அழைத்திருந்தனர். இங்கு வந்தபோது, பிரான்சில் போக்குவரத்துப் பிரச்சினை இருந்தபோதிலும், 600 இற்கு மேற்பட்டோர் நிகழ்வில் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கியிருந்தார்கள். அது மிகவும் சந்தோசமாக இருந்தது. இந்தியக் கலைஞர்கள் வந்தால்தான் மண்டபம் நிறையும் என்ற வார்த்தையைப் பொய்யாக்கிவிட்டார்கள். புலம்பெயர் நாடுகளிலும் இளம் கலைஞர்கள் வளர்ந்து வருவதையும் ஆவலோடு பார்க்கமுடிந்தது. அத்தோடு எமது வாத்தியக் கருவிகள் அழிந்துவிடாமல் புலம்பெயர்வாழ் இளைஞர்கள் பயின்றுவருவதும் பாராட்டுக்குரியது. தாயகத்திலும் சரி புலம்பெயர் தேசங்களிலும் சரி இந்தியக் கலைஞர்கள் தான் திறமையானவர்கள் என்ற மனநிலை இருந்துவருகின்றது. எமது தாயகத்தில் தான் உலகப் புகழ்பெற்ற திறமையான கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இதனை உணர்ந்துகொண்டு என்போன்ற தாயகத்தில் உள்ள கலைஞர்களை இங்கே அழைத்து நிகழ்ச்சிகளைச்செய்வது வரவேற்கத்தக்க விடயம். எமது தாயகத்தில் பல திறமையான கலைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் ஊக்கப்படுத்துவதுடன், புலம்பெயர் கலைஞர்களுடன் இணைந்து செயற்படும்போது, எமக்கான அடையாளங்களைப் பாதுகாக்கமுடியும் என்று நான் நம்புகின்றேன்.




**புலம்பெயர் மண்ணில் உள்ள வாழ்வியல் உங்கள் பார்வையில் எவ்வாறு உள்ளது?**

உண்மையிலேயே, தாயகத்தில் இருந்து பார்க்கும்போது, வெளிநாட்டில் நல்ல வசதியாக இருக்கின்றார்கள் என்ற மாயை, இங்கு வந்து பார்க்கின்றபோதுதான் தெரிகின்றது புலம்பெயர் வாழ் மக்கள் எவ்வளவோ குளிர், பனி போன்றவற்றிற்கு மத்தியில் கடினமான வாழ்வியலை வாழ்கின்றார்கள் என்று. வெளிநாட்டுக்குப் போனால் நன்றாக வாழலாம் என்பது இளைஞர்களின் மனக்கணக்கு. ஆனால், எங்கு சென்றாலும் கஸ்டப்பட்டுத்தான் வேலைசெய்யவேண்டும். இதற்கு புலம்பெயர்வாழ் மக்களில் ஒரு பகுதியினரும் காரணமாக உள்ளனர். அவர்கள் தாயகத்திற்கு சென்று மிக ஆடம்பரமான சில செயற்பாடுகளை செய்வதன் காரணமாக அங்குள்ள மக்கள் தவறான புரிதலை ஏற்படுத்துகின்றார்கள்.

அத்தோடு, வெளிநாட்டுப் பணத்தில் விலையுயர்ந்த உந்துருளிகளை வாங்கி இளைஞர்கள் வீதி நெறிகளை மீறி தமது உயிர்களை இழக்கும் துர்ப்பாக்கிய நிலையும் அதிகரித்துவருகின்றது. புலம்பெயர் நாடுகளில் வந்து பார்க்கும் போதுதான் தெரிகின்றது மக்களின் இயந்திரமயமான வாழ்க்கை முறைகளைப் பற்றி.

**தாயகத்தில் உள்ள உங்கள் வயதை ஒத்த இளைஞர்களுக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

இன்று யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் வன்முறைகள், கலாசார சீரழிவுகள் ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளன. இதில் 18, 19 வயதுடைய இளைஞர்களே இவ்வாறான சீர்கேடுகளுக்கு இட்டுச் செல்லப்படுகின்றார்கள். கல்வி அடைவு மட்டங்கள் கூட ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகத்தான் உள்ளது. காரணம் இசைத்துறை, விளையாட்டுத்துறைகளில் ஈடுபடாமல் இருப்பதும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. அதாவது, இவ்வாறான இசைத்துறை, விளையாட்டுத்துறை போன்றவற்றில் ஈடுபட்டால் கல்வி பாதிக்கப்படும் என்று பெரும்பாலான பெற்றோர் தமது பிள்ளைகளை பங்குபற்றவிடுவதில்லை. இதனால் மாணவர்கள் வேறு திசைக்கு கொண்டுசெல்லப்படுகின்றார்கள். எனவே, இவ்வாறான பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது அனுபவத்தின் வாயிலாக நான் சொல்வது என்னவென்றால், இசைத்துறை, விளையாட்டுத்துறை மாணவர்களின் மனநிலையை மாற்றி நேரான பாதையில் மாணவர்களை கொண்டுசெல்ல வழிவகுக்கின்றது என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.



எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
Mohan
Jewellery Mart
பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82 Mo: La Chapelle / Gare du Nord




பாரிஸ் லா சப்பலில்
25 ஆண்டுகளுக்கு மேலாக!
எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
மளிகைப் பொருட்கள் அனைத்தும்
ஒரே கூரையின் கீழ்...
Gopal and co
Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03




உளங்கனிந்த
தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்
BHARATH
Spécialités Sri-lankaises & Indiennes
RESTAURANT BHARATH
51 RUE LOUIS BLANC
75010 PARIS
TÉL : 01 42 09 35 84
CAFÉ BHARATH
67 RUE LOUIS BLANC
75010 PARIS
TÉL : 01 58 20 06 20
COFFEE BHARATH
13 RUE DES FRÈRES LUMIÈRE
92110 CLICHY
TÉL : 01 47 37 91 41
ஆப்பக்கடை
55 RUE LOUIS BLANC
75010 PARIS
TÉL : 01 42 05 50 50




எமது வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் இனிய தைப்பொங்கல் புதுவருட நல் வாழ்த்துக்கள்
Fond de Commerce
மற்றும் Mur Commerciaux
ஆகியவற்றிற்கு
கடன் உதவிகள் செய்து தரப்படும்
வீடு வாங்குவதற்கும்
அனைத்து விதமான
கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
திரு.சிவா:
0973255923 - 0665660305
Crédits - Solutions
2-4 rue de l'Orillon - 75011 Paris
email: creditssolutions@gmail.com

# "அனைத்து தமிழ்மக்களும் பலமாகுவோம். 2020இல் இன்னும் எம்மை வலுவாக்குவோம்."

அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய பிரான்சு வாழ் தமிழீழ மக்களுக்கு பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவும், அதன் அனைத்து உப கட்டமைப்புகளும் புரட்சிகர வணக்கத்தை முதற் கண் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு ஒரு சிக்கலான சூழ்நிலையை நாம் எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஓர் அரசியல் வெறுமைக்குள் திட்டமிட்டுத் தள்ளப்பட்டுள்ளோம். இந்த அரசியல் சூனியநிலை நீடித்தால் அது எமது இலட்சியப் போராட்டத்திற்கு பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம் என்பதை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் 2008 மாவீரர்நாள் கொள்கைப் பிரகடன உரையில் குறிப்பிட்டிருந்தார். தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனைக் கூற்றுக்கமைய, உன்னத உயிர்த்தியாகம் கொண்ட ஆயுதப்போராட்டம் 2009 அமைதியாக்கப்பட்டு ஒரு தசாப்தம் நிறைவுபெற்ற நிலையில், சிங்கள தேசத்தின் ஆட்சியாளர் தமிழ் மக்களினை புறந்தள்ளி பௌத்த மேலாதிக்கத்தை வெளிப்படையாகவே முன்னிலைப்படுத்துகின்ற நிலையில் ஈழத்தமிழ் மக்களும், தமிழ்நாட்டு மக்களும், உலகத்தமிழ் மக்களும் ஒரு நேர்கோட்டில் பயணிக்க வேண்டிய காலச்சூழமைவை உணர்த்தி நிற்கின்றது.

பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியால் தமிழர்களின் அரசியல் இறையாண்மை பறிக்கப்பட்டது மட்டுமல்லாது, இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் உயிர் இழப்புகள், மனிதப் பேரவலங்கள், தாயக நில வல்வளைப்புகள், புலம்பெயர்வுகள், சிங்களமயமாக்கம் எனத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதனை சர்வதேசம் நன்குணர்ந்துள்ளது. இதன் ஒரு வெளிப்பாடே பிரான்சு நாட்டின் அதிபர் டிசெம்பர் மாதம் 22 ஆம் நாள் ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான ''ஐவரிக் கோசு'' நாட்டில் சர்வதேசத்திற்கு ஆற்றிய உரை. "காலனித்துவம் என்பது மிகப்பெரிய தவறு. காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட நாடுகள் இதுவரை என்ன அரசியல் வரலாற்று மாற்றத்தை கண்டு விட்டன? என்ற கேள்வியும். "காலனித்துவம் என்பது குடியரசு விழுமியங்களைக் கேள்விக்குறியாக்கும் ஆழமான பிழை'' என பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். இந்தக் கூற்றானது காலனித்துவ ஆட்சியால் நாடிழந்து போய் நிற்கின்ற தமிழீழ மக்களாகிய எமக்கும் நல்தோர் செய்தியாகவேயுள்ளது. பிரித்தானிய தேர்தல் வெற்றியில் தமிழ் மக்களுக்காக பிரதமர் கூறிய விடயங்கள், பிரெஞ்சு அதிபர் கூறியுள்ள வார்த்தைகள், "விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு அல்ல தமது மக்களின் விடுதலைக்காக போரிட்ட அமைப்பே" என்ற சுவிசு நாட்டின் உயர் நீதி மன்றத் தீர்ப்பு, ஏற்கனவே இதே போன்ற தீர்ப்பை வழங்கிய ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான இத்தாலிய நாட்டின் தீர்ப்பு என அனைத்தும் தமிழ் மக்களாகிய எம்மை இன்னும் முனைப்புடனும் வீரியத்துடனும் 2020 இல் செயற்பட வைக்கும் என்பதில் ஐயமில்லை.

அதன் ஒரு களமாக எதிர்வரும் 2020 மார்ச் 15 மற்றும் மார்ச் 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல்கள், பிரான்சு வாழ் தமிழீழ மக்களுக்கு நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. இதனை நாம் எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்த வேண்டும்? 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் பிரெஞ்சுக்குடியுரிமை பெற்றவர்கள் வாக்களிக்கின்ற தகுதியைப் பெற்றிருக்கின்ற நிலையில் இதனை எமது இனத்துக்கான வலுவான சக்தியாக நம்பிக்கையுடன் பயன்படுத்த முடியும். இத்தேர்தல்களில் ஈழத்தமிழ் மக்கள் சார்பில் எமது அடுத்த தலைமுறையினர் பங்கெடுக்கவேண்டியவர்களாகவுள்ளனர் என்பதனை நாம் மட்டும் சொல்லவில்லை. இதுவரை காலமும் கட்சி பாகுபாடின்றி எமக்காகக் குரல் கொடுத்தவர்களும், கொடுத்துக் கொண்டிருப்பவர்களுமாகிய பிரெஞ்சு அரசியல்வாதிகளின் நிலைப்பாடுமாகும். பாரிசின் புறநகர் பகுதிகளில் பல்வேறு இடங்களில் எமது தமிழ் இளையவர்கள் தேர்தலில் பங்கெடுக்க தெரிவு செய்யப்பட்டும் உள்ளனர். இவர்கள் சிறுபராயம் முதல் உணர்வுள்ள தமிழ்ப் பெற்றோர்களாலும், தமிழ்வளர்க்கும் சங்கங்களினாலும், தமிழ்ச்சோலைகளாலும், உணர்வாளர்களாலும் தாய்மண் உணர்வுடனும் வாழ்விட மண்ணின், மக்களின், அரசியல், சமூக நலத்துடன் உருப்பெற்றவர்கள். இவர்கள் என்றும் பாதைமாறிப் பயணிக்கும், பணிந்து போகும் தன்மையைக் கடந்தவர்கள். எனவே இவர்களை தட்டிக்கொடுத்து அடுத்த அரசியல் தலைமுறையை உருவாக்க வேண்டியது ஒவ்வொரு தமிழர்களின் தார்மீகக் கடமையாகும். இந்தச் சர்வதேச அரசியலின் செயற்பாடானது கனடா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா, சுவிசு போன்ற நாடுகளில் உள்ளது போன்று பிரான்சிலும் அரசியல் ரீதியாக நாம் வலுப்பெற வேண்டும். எதிர்காலத்தில் அனைத்து வழிகளிலுமான எமக்கான தேவைகளை நிறைவேற்ற இது ஏதுவாக இருக்கும்.

எமது அரசியல் கட்டமைப்புகள் ஊடாகவும், சங்கங்கள் மூலமாகவும் இதர பொது அமைப்புகளூடாகவும் தமது அரசியற் பரப்புரைகளை விரைவாக முன்னெடுக்கவுள்ளோம். இதனைக் கவனத்திற் கொண்டு பிரான்சு வாழ் அனைத்து தமிழ்மக்களும் பலமாகுவோம். 2020ல் இன்னும் எம்மை வலுவாக்குவோம்.

*" தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்"*

*நன்றி - தமிழர் ஒருங்கிணைப்புக் குழு*

# சேர்ஜி பிராங்கோதமிழ்ச்சங்கத்தின் 23வது ஆண்டு விழா

சேர்ஜி பிராங்கோதமிழ்ச்சங்கத்தின் 23வது ஆண்டு விழா கடந்த 22.12.2019 அன்று நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக சேர்ஜி நகரபிதா Jean Paul Jeandon மங்கள விளக்கினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து தமிழ்ச்சோலை மாணவ மாணவிகளின் நடனம் சங்கீதம் நாடகம் வில்லுப்பாட்டு கவிதை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்தது.




# பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களின் நிதியுதவியில் தாயகத்தில் உலர் உணவுப் பொதிகள்!

பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களின் நிதியுதவியில் கடந்த 02.01.2020 வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஒலுமடு





புலுமச்சிநாதகுளம் அம்பகாமம் பிரதேசங்களில் வசிக்கின்ற 50 மாவீரர் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டது. .




# சோதியா கலைக்கல்லூரியின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா!









பிரான்சு சோதியா கலைக்கல்லூரியின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை பரிஸ் Max Dormoy பகுதியில் இடம்பெற்றது.

# எத்தனை வழிகளில் எச்சரித்தாலும் திருந்தாத கூட்டம் இருக்கத்தான் செய்யும்!

## யாழில் நடுத்தெருவில் நிற்கும் குடும்பம்!

இணைய வழி ஊடாக நடக்கும் ஏமாற்றுத் தனங்களை எத்தனை ஊடகங்கள் எழுதி எழுதிச் சொன்னாலும் ஏமாந்தே தீருவோம் என்று அடம் பிடித்து நிற்பவர்களை என்னென்று சொல்வது? கடந்த வாரம் யாழில் ஒரு குடும்பம் இவ்வாறு இணையவழிப் போலிகளை நம்பி ஏமாந்து நடுத் தெருவில் நிற்கின்றது.

பி.எம்.டபிள்யூ காருக்கும், ஸ்ரேலிங் பவுண்ஸ்க் கும் ஆசைப்பட்டு 31 இலட்ச ரூபாவை இழந்து திகைத்து நிற்கிறது குடும்பம். யாழில் நடைபெற்ற இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த குடும்பத்தின் குடும்பத் தலைவர் மன்னா கைக்கு வந்து விட்டது எனவும் அதனை பெற்றுக் கொள்ள கொழும்பு வெள்ளவத்தை பகுதிக்கு வருமாறும் கூறப்பட்டுள்ளது. அதனை நம்பி குறித்த குடும்பத்தினர் கொழும்பு சென்றுள்ளனர். அங்கு அவர்களை சந்தித்த மர்ம நபர் ஒருவர், கறுத்த பெட்டி (சூட்கேஸ்) ஒன்றினை கொடுத்து, பரிசுத்தொகையான ஸ்ரேலிங் பவுண்ஸ் பணமும், காரின் திறப்பும் உள்ளது எனவும் கூறி அந்த பெட் டியை கையளித்துள்ளார்.

பெட்டியை உடனே திறந்து பார்க்காதீர்கள். இந்த பரிசுத்தொகை தொடர்பில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு தெரிய வந்தால் இலங்கையில்



ரில் பணி நிமிர்த்தம் அங்கு தங்கி பணியாற்றி வரும் நிலையில் தாயும், மகளும் யாழில் வசித்து வருகின்றார்கள்.

அந்நிலையில் கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னர் மகளின் செல்பேசிக்கு, இலண்டனில் நடந்த சீட்டிழுப்பு ஒன்றில் உங்களுடைய செல் பேசி இலக்கத்திற்கு புதிய ரக பி.எம்.டபிள்யூ கார் ஒன்றும் ஸ்ரேலிங் பவுண்ஸ் பணமும் விழுந்துள்ள தாகவும் அது தொடர்பிலான மேலதிக தகவல் களை பெற்றுக்கொள்ள கீழுள்ள மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு குறுஞ்செய்தி வந்துள்ளது.

அதனை நம்பி குறித்த பெண் அந்த மின்னஞ் சலுடன் தொடர்பினை ஏற்படுத்தியபோது, சீட் டிழுப்பில் வெற்றி பெற்றுள்ளீர்கள் என கூறி சில போலி ஆவணங்கள், கார், காரின் திறப்பு படம் மற்றும் கட்டுக்கட்டாக ஸ்ரேலிங் பவுண்ஸ் உள்ள படங்களை மின்னஞ்சல் ஊடாக மர்ம கும்பல் ஒன்று அனுப்பியுள்ளது.

அதன் பின்னர் மர்ம கும்பலின் மின்னஞ்சலில் இருந்து முதல் கட்டமாக இலண்டனில் வரி கட்ட வேண்டும் என கோரி 92 ஆயிரம் ரூபாயை வங்கி யில் வைப்பிலிடுமாறு கோரியுள்ளனர். அதனை நம்பி இவர்கள் வங்கியில் பணத்தினை வைப்பி லிட்டுள்ளனர். அதனை அடுத்து ஒரு கிழமை இடைவெளியின் பின்னர், திணைக்களங்களுக்கு வரி கட்ட வேண்டும் உள்ளிட்ட சில காரணங் களை கூறி மின்னஞ்சல்களை அனுப்பி கட்டம் கட்டமாக 31 இலட்ச ரூபா பணத்தினை அந்த மர்ம கும்பல் பெற்றுள்ளது.

இறுதியாக கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் னர் உங்களுக்கான பணப் பரிசிலும், காரும் இலங் விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டி வரும் அத்துடன், வரியாக பெருந்தொகை கட்ட வேண்டி வரும். நீங்கள் வீடு செல்லுங்கள் இந்த பெட்டி யின் திறப்பை தபால் மூலம் அனுப்பி வைக் கிறேன் என கூறி குறித்த மர்ம நபர் அங்கிருந்து சென்றுள்ளார்.

அதன் பின்னர் வீடு திரும்பிய இவர்கள் சில தினங்கள் கடந்த நிலையிலும், திறப்பு வராத நிலை யில் மின்னஞ்சல் ஊடாக அந்த மர்ம நபர்களை தொடர்புகொள்ள மின்னஞ்சல்களை அனுப்பிய போது பதில்கள் வரவில்லை. தம்மை கொழும் புக்கு அழைத்த தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ள முயற்சித்த போது, குறித்த தொலைபேசி இலக்கம் செயலிழந்து காணப்பட்டது.

அதனை அடுத்து சந்தேகம் அடைந்தவர்கள் குறித்த பெட்டியை உடைத்து பார்த்தபோது, உடைந்த கண்ணாடி போத்தல்கள், பஞ்சு, நாணய தாள்கள் அளவில் வெட்டப்பட்ட கடதாசி துண் டுகள் என்பன காணப்பட்டுள்ளன. அதன்போதே அவர்கள் தாம் ஏமார்ந்ததை உணர்ந்துள்ளார்கள்.

குறித்த குடும்பத்தினர் சீட்டிழுப்பு பரிசினை நம்பி தம்மிடம் இருந்த சேமிப்பு பணம், நகைகள் என்பவற்றை இழந்துள்ளதுடன், ஊரில் வட்டிக்கு பெரும் தொகை பணத்தினையும் வாங்கியுள்ளனர்.


இது தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய சிறீலங்கா காவல்துறை அத்தியட்சகர் காரியால யத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் முறைப் பாடு செய்துள்ளனர். குறித்த மோசடி கும்பல் பல் வேறு வங்கி கணக்குகள் ஊடாகவே பணத்தினை ஏமாற்றி பெற்றுள்ளனர் எனவும், அது தொடர்பிலான விசாரணைகளை தாம் முன்னெடுத்து வருவதாக வும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

---

### தமிழர்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க

# ஐ.நா.வின் உதவியுடன் பொதுசன வாக்கெடுப்பு

**- வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு அறிவிப்பு -**




தமிழ் மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ள ஐக்கிய நாடுகள் சபை யின் உதவியுடன் பொதுசன வாக் கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு பெருமெடுப்பில் தயாராக வேண் டும் என வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஊடக அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாக கோத்த பாய ராஜபக்ச பதவியேற்ற பின் னர், நடத்தப்படவுள்ள 72வது சுதந்திர தினக் கொண்டாட்டத் தில் தேசிய கீதத்தை சிங்கள மொழி யில் மட்டுமே இசைக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக அறியக் கிடைக்கிறது. இந்த முடிவு தமிழ் மக்களுக்கு எத்தகைய மனக்கசப்பையும், நெருடலையும் தரவில்லை. மாறாக அளவற்ற மகிழ்ச்சியையே தருவதாகவும், இந்த முடிவுக்கு அமோக வரவேற்பு அளிப்பதாகவும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு அறிவித் துள்ளது.

தலைவர் கோ.ராஜ்குமார், செயலாளர் தி.நவராஜ், ஊடகப்பேச் சாளர் அ.ஈழம் சேகுவேரா ஆகியோர் உத்தியோகபூர்வமாக அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது.

இலங்கைக்குள் உலக சமுகங் களால் அங்கீகரிக்கப்பட்ட மூவ கைத் தேசிய இனங்கள் உண்டு. இனத்துவ அடையாளங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகை யில் இந்த மூவகைத் தேசிய இனக் குடிமக்களும், தங்களுக்கே உரித் தான வெவ்வேறானதும், தனித் துவமானதும் ஆன கலைகள், கலா சாரங்கள், உணவுப் பாரம்பரியம், உடைப் பாரம்பரியம், மொழிப் பண்பாடு, சமய அனுட்டானங் கள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள், வாழ் க்கை முறைகள், பூர்வீக நிலபுல- வழித் தொடர்புகள், வர்த்தக வாணிப மார்க்கங்கள், ஆட்சி முறைகள், கொடிகள், குறியீடுகள், மரபுரிமைகள் என்று பலவற்றை யும் கொண்டுள்ளனர்.

**தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மட்டுமே இசைக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக அறியக் கிடைக்கிறது. இந்த முடிவு தமிழ் மக்களுக்கு எத்தகைய மனக்கசப்பையும், நெருடலையும் தரவில்லை. மாறாக அளவற்ற மகிழ்ச்சியையே தருவதாகவும், இந்த முடிவுக்கு அமோக வரவேற்பு அளிப்பதாகவும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு அறிவித்துள்ளது.**

ஆகவே, தமிழ்த் தேசிய இனத்துக்கு என்றும் சங்க கால இலக் கியங்கள் உண்டு. போர்க்காலப் பாடல்கள் உண்டு. இதிகாசங்கள் உண்டு. காப்பியக் கதைகள் உண்டு. வெற்றியும் தோல்வியும், சூழ்ச்சி களும் துரோகங்களும் நிறைந்து கிடக்கும், எழுச்சியும் வீழ்ச்சியும் கொண்டிருக்கும் வரலாறுகளும் உண்டு. நாமும் நமக்கென்று ஓர் நலிவடையா கலைகளைக் கொண்டுள்ளோம். எங்கள் கதைகள் கற்பனைகள் இல்லை. எங்கள் கண்ணீர் ஒப்பனைகள் இல்லை. எங்கள் இரத்தம் கலப்படம் இல்லை. ஆதலால் எங்கள் வாழ்வை, எங்கள் வலிகளை, எங்கள் வரலாற்றை, எங்கள் மொழியில் நாமே பதிவாக்குவோம். பாடுவோம், ஆடுவோம், தலையில் தூக்கி வைத் துக் கொண்டாடுவோம். முடி சூடுவோம்.

எனவே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், அவரது அமைச் சரவை பரிவாரங்களும் விரும்புவதைப் போலவே, சிங்கள தேசிய இனக் குடிமக்கள் தங்களுக்கென்றே உரித்தான தேசிய கீதத்தை சிங்கள மொழியில் பாடித் தான் ஆக வேண்டும். அதில் வேற்றுத் தேசிய இனக் குடிமக்கள் அதிகாரம் செலுத்தவோ, அதை நிரா கரிக்கவோ முடியாது. அதுபோலவே, தமக்கு மட்டுமே உரித்தான கீதத்தை மற்றைய தேசிய இனக் குடிமக்களை பாடச் சொல்லி நிர்ப்பந்திக்கவோ, திணிக்கவோ முடியாது என்பதையும் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களுக்கு தலையில் குட்டிச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் எமக்கு புலப்படுத்தும் உண் மைகள் யாதெனில்,

தொடர்ச்சி 38ம் பக்கம்

# புலனாய்வுத் துறைகளின்....

இதேநேரம் லெபனான் அரசு, கோஸ்ன் பிரெஞ்சுக் கடவுச்சீட்டுடனே தங்களிடம் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளமை, டோக்கியோவை மேலும் கோபப்படுத்தியுள்ளது. லெபனான் தூதரகத்திடமும், பிரெஞ்சுத் தூதரகத்திடமும் இதற்கான விளக்கத்தினை டோக்கியோ கோரியிருந்தாலும், இரண்டு தூதரகங்களும் எந்தவிதமான விளக்கங்களையும் வழங்கத் தயாராக இல்லை. இது ஒரு பொருளாதாரக் குற்றவாளியைத் தப்பவைக்கும் சில நாடுகளின் இராஜதந்திர நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என டோக்கியோ விமர்சித்துள்ளது.

எந்த விதமான இணைய வசதிகளோ, அல்லது தொலைத்தொடர்புகளோ அற்ற நிலையில் கோஸ்ன் தப்பியிருப்பது பெரும் சாகசமாகவே உள்ளது.

தப்பிச் செல்வதற்கு ஒரு வாரம் முதல், அதாவது டிசம்பர் 24ம் திகதி, தனது மனைவியுடன் கோஸ்ன் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாகக் கதைத்துள்ளார். கோஸ்ன் தனது துணைவியாருடன் தொடர்பு கொள்வதைத் தடைசெய்யுமாறு, மசகிஸா சாட்டோ, நீதிமன்றத்தைக் கோரியிருந்தார். இந்தத் தொடர்பாடல், கார்லோஸ் கோஸ்ன் தப்பிச்செல்வதற்கான சதியை உருவாக்கிவிடும் அபாயத்தை ஏறப்படுத்திவிடும் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் நீதிமன்றம் இவர்களிற்கிடையிலான தொடர்பாடலை அனுமதித்திருந்தது. ஆனாலும் 2018 இல் கைது செய்யப்பட்டபோது ஒரு தடவை



யும், தப்பிப்பதற்கு ஒரு வாரம் முதலும் மட்டுமே இவர்கள் இருவரும் தொடர்பை ஏற்படுத்தி உள்ளனர்.

கோஸ்ன் இனைக் கண்காணித்தவர்கள், அடிக்கடி அவரின் மகள் டோக்கியோவிற்கு வந்து போவதையும், தந்தையுடன் தொடர்பிலிருப்பதையும் அவதானித்ததாகத் தெரிவித்துள்ளனர். இந்தத் தப்பியோட்டமானது நெடுநாளையத் திட்டமிடலுடன் இம்மி பிசகாமல் அரங்கேற்றப்பட்டுள்ளது.

ஜப்பானின் நீதியானது, ஒரு பணயக்கைதித் தத்துவத்துடன் கூடியது என்றும், மனித உரிமைகளைப் பெருமளவில் மீறியதென்றும், தன் தரப்பு வாதத்தை வழங்கும் சந்தர்ப்பத்தினைக்கூட குற்றம் சாட்டப்பட்வரிற்கு வழங்காத அராஜக நீதியென்றும், லெபனானில் உள்ள கோஸ்ன் இன் வழக்கறிஞர் குழாம் விமர்சித்துள்ளது.

இதே விமர்சனத்தையும், கண்டனத்தையுமே, சர்வதேச மன்னிப்புச் சபையும், ஜப்பானிய நீதித்துறை மீதும், சிறைத்துறை மீதும் வைத்துள்ளது. அடிப்படை மனித உரிமைகள் எதுவும் வழங்கப்படாத நீதி என்றும், தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது.

லெபனானில் தலைநகரில் மீண்டும் பணப்பலத்துடன் உள்ள கார்லோஸ் கோஸ்ன் இனைக் கைது செய்து தருமாறு, ஜப்பானின் நீதித்துறை இன்டர்போலிடம் சிவப்பறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இவரிற்குத் தாங்கள் வழங்கிய பிணையை இரத்துச் செய்வதுடன், சட்டவிரோத சக்திகளின் கூட்டுச் சதியின் மூலம் தப்பிச் சென்ற பொருளாதாரக் கைதி கார்லோஸ கோஸ்ன் என்றும் இன்டபோலிடம் வழங்கிய, தங்களது சிவப்பறிக்கையில் ஜப்பான் தெரிவித்துள்ளது.

இதே நேரம், பிரான்சின் பொருளாதாரம் மற்றும் நிதியமைச்சின் துணை அமைச்சர் Agnès Pannier-Runacher கோஸ்ன் தப்பிச் சென்றமையைத் தான் செய்திகளில் மட்டுமே அறிந்ததாகவும், என்ன நடந்திருக்கும் என்பதைத் தான் ஊகித்ததாகவும் தெரிவத்துள்ளார். அத்துடன் ஒரு பிரெஞ்சுப் பிரஜை நீதியில் இருந்து தப்ப முயல்வதைத் தான கண்டிப்பதாகவும், ஆனால் ஒரு பிரெஞ்சுப் பிரஜையாக, பிரெஞ்சுத் தூதரகத்தின் அனைத்து உதவிகளையும் பெறும் உரிமை கோஸ்னிற்கு உள்ளதென்றும் தெரிவித்துள்ளமை, பெரும் சந்தேகங்களை எழுப்பி உள்ளது.

ஜப்பானின் முக்கிய ஒசாக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு, துருக்கியினூடக பெய்ரூட்டை அடைவது என்பது, ஒரு முக்கிய நாட்டின் புலனாய்வுத் துறையின் துணையின்றிச் சாத்தியமாகாது என்பது ஆய்வாளர்கள் கருத்து.

ஜப்பான் குற்றம் சாட்டுவது போலவே, பிரான்சின் கரம் ஜப்பானில் இருந்து, லெபனான் வரை நீண்டிருக்குமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. சிலவேளை இது நிரந்தரக் கேள்விக்குறியாகவே இருந்து விடக்கூடிய சாத்தியமும் உள்ளது.

# ஓர் இனப்படுகொலை....

டிரம்ப்பின் தாக்குதல் முன்னெடுப்பைத் தடுக்கும் வகையில் அமெரிக்கா பிரநிதிநிதிகள் சபை மற்றும் செனட் சபையில் தீர்மானம் ஒன்றை கொண்டு வர இருக்கிறார்கள். அதன்படி அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையில், போரை தடுக்கும் வகையில் தீர்மானம் கொண்டு வர உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தற்போது டிரம்பிற்கு இராணுவத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் முழுமையாக இருக்கிறது. அதை குறைத்து, அவர் கொங்கிரஸ் அவையின் கட்டுப்பாடு இன்றி எதுவும் செய்ய முடியாது என்று சட்டம் கொண்டு வர இருக்கிறார்கள். அதாவது கொங்கிரஸ் அவை அனுமதிக்காமல் அவரால் இராணுவத்திற்கு ஆணைகளை பிறப்பிக்க முடியாது. இதற்கான தீர்மானத்தை விரைவாக தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

ஆனால், மத்திய கிழக்கிற்கு மேலும் படைகளை அனுப்பத் தயாராகிக் கொண்டிருக்கும் அமெரிக்க அதிபர், ஈரானின் வரலாற்றுச் சின்னங்களையும் தாக்கி அழிப்போம் என்று எச்சரித்துள்ளார். டிரம்பின் இந்த எச்சரிக்கைக்கு சர்வதேச ஒருமைப்பாட்டைப் பேணும் அமைப்பான யுனெஸ்கோ அமைப்பு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஈரானுக்கு பாடம் புகட்டவேண்டும் என்ற டிரம்பின் போர் வெறியும், சுலைமானிக்காக பழி வாங்க வேண்டும் என்ற ஈரானின் கொலை வெறியும் மத்திய கிழக்கில் பேரழிவை ஏற்படுத்தப்போகின்றது என்பது மறுப்பதற்கில்லை. அவ்வாறு போர் மூண்டால் அது ஏனைய நாடுகளுக்கும் பரவும் என்ற பேரச்சம் எழுந்துள்ளது. காரணம் ஈரானுக்கு எதிரான இந்தப் போரை தமக்கான வாய்ப்பாக ஐ.எஸ் போன்ற இஸ்லாமிய பாயங்கரவாத இயக்கங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, போர் வெடிப்பதற்கு முன்பாகவே, இந்தத் தாக்குதல் உலகை மூன்று அணியாகப் பிரிய வைத்துள்ளது. அமெரிக்காவின் செயலைப் பாராட்டும் நாடுகள், நடுநிலைமை வகிக்கும் நாடுகள், ஈரானுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ள நாடுகள்.

## மக்கள் பேரலை

சுலைமானிக்கு அஞ்சலி செலுத்த, ஒன்று திரண்ட ஊர்வலத்தை கண்டு உலகமே வியப்பில் ஆழ்ந்துள்ளது. உலகிலேயே யாருடைய இறுதிச்சடங்கிற்கும் இவ்வளவு கூட்டம் கூடியது கிடையாது என கூறப்படுகின்றது.

ஈராக்கில் இருந்து கொண்டுவரப்பட்ட சுலைமானியின் உடலுக்கு ஈரான் தலைநகர் டெஹ்ரானில் கடந்த 6ம் திகதி இறுதி வணக்க நிகழ்வுகள் நடந்தன. அங்குள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. சுலைமானியின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு இலட்சக்கணக்கான மக்கள் அந்த பகுதியில் குவிந்தனர். ஈரானில் இஸ்லாமிய குடியரசை நிறுவிய அயதுல்லா கொமேனி, 1989ம் ஆண்டு காலமானபோது கூட, அவருக்கு இத்தனை இலட்சம் மக்கள் கலந்துகொள்ளவில்லை என்பதும், இத்தகைய இறுதி மரியாதை நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் பெருமளவில் கறுப்பு நிற உடையில் வந்திருந்தனர். இதனால் டெஹ்ரான் நகரமே கறுப்பு நிறமாக மாறியது போல காட்சியளித்தது. மக்கள் தங்கள் கைகளில் கறுப்பு மற்றும் ஈரான் நாட்டு கொடிகளை ஏந்தியபடி அமெரிக்காவுக்கு எதிராக கோசங்களை எழுப்பி பேரணியாகச் சென்றனர். பல்கலைக்கழக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த சுலைமானி உடலுக்கு, ஈரானின் மூத்த மத தலைவர் அயதுல்லா அலி காமெனி தலைமையில் இறுதி சடங்குகள் நடந்தன. இதில் அதிபர் ஹசன் ருஹானி உள்பட முக்கிய தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். இறுதி சடங்கின் போது, அயதுல்லா அலி காமெனி கண்ணீர் விட்டுக் கதறி அழுதார். பின்னர் சுலைமானியின் உடல் பெரிய வாகனத்தில் வைக்கப்பட்டு, கொண்டு செல்லப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் சுமார் 20 இலட்சம் வரையான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்திற்கு நாலாபுறமும் மக்கள் பேரணியாக வந்துள்ளனர்.

இதேவேளை, இறுதி ஊர்வலத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 35 பேர் பலியாகியுள்ளதாகவும், 48 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. காசிம் சுலைமானின் சொந்த ஊரான கெர்மான் பகுதியில் இறுதி ஊர்வலம் வந்தபோது, கடுமையான கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர். காசிம் சுலைமானியின் இறுதி ஊர்வலம் முதல் முறையாகப் பல்வேறு நகரங்கள் வழியாக நடைபெற்றது.

இதில் ரஷ்யா ஈரானுக்கு ஆதரவாக தமது கருத்தைப் பதிவு செய்துள்ளது. ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில், சுலைமானியை கொன்றது முரட்டுத் துணிச்சலான காரியம். இதனால், அப்பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது. சுலைமானி தனது நாட்டின் நலனுக்காக முழு அர்ப்பணிப்புடன் சேவை செய்தவர். அவரது மறைவுக்காக ஈரான் மக்களுக்கு இரங்கல் தெரிவிக்கிறோம் என கூறப்பட்டுள்ளதன் ஊடாக ரஷ்யா ஈரானுக்கு ஆதரவான நாடு என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, பிரான்ஸ் நடுநிலைமை வகித்துள்ளது. இத்தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள பிரான்ஸ் அதிபர் இமானுவல் மக்ரோன், மிகுந்த அபாயகரமான உலகத்தில் நாம் உள்ளோம். உலகின் அனைத்து பகுதியிலும் அமைதியான சூழலை ஏற்படுத்த வேண்டும் அல்லது குறைந்தபட்சம் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். பிரான்ஸ் எந்த நாட்டுக்கு சார்பாக இருக்காது. அனைவருடனும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவோம், என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஈரான் - அமெரிக்கா மோதலால் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது. ஈரான் - அமெரிக்கா தலைவர்களின் வார்த்தை மோதலால் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பும் இந்த விடயத்தில் மிகவும் நிதானத்துடன் செயல்பட வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது. அமெரிக்கா தனது படையை மீண்டும் பயன்படுத்தி துஷ்பிரயோகத்தில் ஈடுபடக்கூடாது என்று வலியுறுத்தியுள்ள சீனா, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர், சமீபத்திய நாட்களில் அமெரிக்காவின் ஆபத்தான இராணுவ நடவடிக்கை சர்வதேச உறவுகளின் அடிப்படை விதிமுறைகளுக்கு எதிரானது என கூறியுள்ளார். மேலும் அமெரிக்கா தனது சக்தியை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாம் என்றும் மேலும் நிலைமை மோசமடைவதைத் தவிர்ப்பதற்கு கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கேட்டுக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பிரான்ஸ் அதிபர் இமானுவல் மக்ரோன், ஜேர்மனி சாஞ்சலர் ஏஞ்சலா மெர்கல், பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர். இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து தரப்பினரும் அமைதி காக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ள அவர்கள், அணுசக்தி ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள விதிமுறைகளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தையும் ஈரான் திரும்பப் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, ஈரான் - அமெரிக்கா இடையே காணப்படும் பதட்டநிலை தொடர்பாக நேட்டோ பிரிவு விவாதிக்க உள்ளதாக தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து, நேட்டோ தூதர்கள் பெல்ஜியம் தலைநகர் பிரஸ்சல்ஸ் நகரில் தலைமையகத்தில் ஆலோசனை நடத்தவுள்ளனர். ஈராக் பாதுகாப்பு படையினருக்கு நேட்டோ படையினர்தான் பயிற்சி அளித்து வருகின்றனர். நேட்டோ படைகள் ஈராக்கை விட்டு வெளியேறினால், பயிற்சி தொடர்வது சந்தேகம். உள்நாட்டில் உள்ள போராளிகள் ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் இணைவர். இதுகுறித்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மார்க் எஸ்பருடன், நேட்டோ செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பர்க்க தொலைபேசியில் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதற்கிடையே, அமெரிக்கா - ஈரான் இடையேயான பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், இரு நாடுகளும் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் உலக கத்தோலிக்க மதத் தலைவரான போப் ஃபிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

எல்லோரும் போரை நிறுத்துவதற்கு வழி தேடிக் கொண்டிருக்கையில் அமெரிக்க அதிபரும் - ஈரான் ஆட்சியாளர்களும் போருக்கான வழிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். போருக்கான வழி திறந்தால், உலகின் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி.

# மேற்குலகம் தமிழர்களைக்...

ஆனால் வெறுமனவே மேற்குலக நாடுகளை ஈழத்தமிழர்கள் நம்பியிருப்பார்களாயின் இது சாத்தியமாகப் போவதில்லை. ஏனென்றால் இன்று ஈழத்தீவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமும், சீனாவின் பக்கம் சாயும் சிறீலங்காவின் போக்கும் மேற்குலகிற்கு அதிருப்தியை ஏற்படுத்தினாலும், இன்னமும் அதனை ஓர் எதிரி நாடாக மேற்குலகம் கருதவில்லை. தவிர இன்றைய உலக ஒழுங்கில் இந்தியாவை மீறி ஈழப்பிரச்சினையில் அப்பட்டமாகத் தமிழர்களுக்கு ஆதரவாக மேற்குலகம் நடந்து கொள்ளாது.

சிறீலங்காவை சீனாவின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கும், தமது கட்டுக்குள் நிரந்தரமாக வைத்திருப்பதற்கும் மேற்குலகமும், இந்தியாவும் விரும்புகின்றன. அதற்கான துருப்புச் சீட்டாகவே ஈழப்பிரச்சினையை அவை கையிலெடுத்து நகர்கின்றன. அதேநேரத்தில் தமது பிடியை விட்டு ஈழத்தமிழர்கள் நழுவிச் செல்லக் கூடாது என்றும் அவை விரும்புகின்றன.

இம் மூலோபாயத்துடனேயே கடந்த 18.10.2019 தொடக்கம் 20.10.2019 வரையான மூன்று நாட்களும் சூரிச் மாநகரின் யூஎற்லிபேர்க் மலையுச்சியில் புலம்பெயர் ஈழத்தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான மாநாட்டை சுவிற்சர்லாந்து அரசாங்கம் நடத்தியிருந்தது. இம் மூன்று நாள் மாநாட்டின் பொழுது நடந்தேறிய காரசாரமான விவாதங்களும், வழங்கப்பட்ட ஆலோசனைகளும் இம் மூலோபாயத்தின் அடிப்படையிலானவை தான்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

சுவிஸ் மாநாடு ஆரம்பிப்பதற்கு முதல் நாள் இரவு நடைபெற்ற வரவேற்பு விருந்துபசாரத்தின் பொழுது, மாநாட்டின் நோக்கம் பற்றி நான் வினவியவேளையில், தமது அரசியல் நடவடிக்கைகளைச் சரியான முறையில் தமிழர்கள் முன்னெடுக்கவில்லை என்று தாங்கள் கருதுவதும் இம் மாநாட்டைத் தாம் ஏற்பாடு செய்ததன் ஒரு முக்கிய நோக்கம் என்று என்னிடம் சுவிஸ் வெளியுறவுத்துறை அமைச்சின் இராசதந்திரி மார்டின் ஸ்ரேசிங்கர் கூறியிருந்தார். இதனை இப் பத்தியின் முதலாவது தொடரில் நான் பதிவு செய்திருந்தமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கக் கூடும்.

சிறீலங்காவிற்கு எதிரான இனவழிப்பு விசாரணைகள் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் அல்லது அதற்கென உருவாக்கப்படும் பன்னாட்டு தீர்ப்பாயம் ஒன்றில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே கடந்த பத்தாண்டுகளாகத் தமிழர்களின் கோரிக்கையாக இருந்து வருகின்றது.

கலப்பு நீதிமன்றத்திற்கான பரிந்துரையை 2015ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர் முன்மொழிந்த பொழுது கூட இவ் வேண்டுகையே மேற்குலக இராசதந்திரிகளிடம் தமிழர் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது. எனினும் இதனை நிராகரித்த மேற்குலக இராசதந்திரிகள், சீனா, ரசியா ஆகிய நாடுகளின் எதிர்ப்பை மீறிச் சிறீலங்காவைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்துவதற்கான தீர்மானம் ஒன்றை ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் தம்மால் நிறைவேற்ற முடியாது என்று தெரிவித்திருந்தார்கள். அதுபோல் ஐ.நா. பொதுச் சபையில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளில் ஐம்பது விழுக்காடு நாடுகளின் உதவியைத் திரட்டி றுவாண்டா, யூகொஸ்லாவியா பாணியில் சிறீலங்காவிற்கு எதிரான பன்னாட்டுத் தீர்ப்பாயம் ஒன்றைத் தாம் நிறுவுவதும் சாத்தியமில்லை என்றும் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறினாலும், அதில் தமிழர் பிரதிநிதிகளுக்கான பூடகமான செய்தி ஒன்று மறைந்திருந்தது. அனைத்துலக நீதியைப் பெறும் உங்கள் நகர்வுகளை மாற்று நாடுகளைப் பயன்படுத்திப் பெற்றுக் கொள்ள முற்படுங்கள் என்பது தான் அச் செய்தி. துர்ப்பாக்கியவசமாக அதனை எம்மவர்கள் எவருமே புரிந்து கொள்ளவில்லை. குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் கதையாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் கூட்டங்களை நடத்துவதிலும், வெளியே ஆண்டுக்கு இரண்டு தடவைகள் பேரணிகளை மேற்கொள்வதிலும், ஏனைய மேற்குலக நாடுகளில் பரப்புரைகளை செய்வதிலுமே ஐந்து ஆண்டுகளை நாம் வீணடித்தோம்.

சுவிஸ் மாநாட்டின் இறுதி நாளில் அங்கிருந்த தமிழர் பிரதிநிதிகள் திடுக்கிடும் வகையில் சுவிஸ் வெளியுறவுத்துறை அமைச்சின் இராசதந்திரியான சப்ரீனா பூச்சிலெர் கூறினார்: 'எங்களைப் பொறுத்தவரை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு நீங்கள் யாத்திரை செல்வது ஒரு வினைத்திறனற்ற திட்டம் என்று தான் கூறுவேன்.' வினைத்திறனற்ற திட்டம் என்ற தமிழ் சொற்பதத்திற்கு அவர் பயன்படுத்தியது ஆங்கிலச் சொல்லாடல் 'கிறாப் ஐடியா' என்பதாகும். அதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அவர் கூறவில்லை. மாறாகத் தமது வளங்கள் முழுவதையும் அங்கு தமிழர்கள் குவிப்பதையே 'கிறாப் ஐடியா' என்றார்.

அங்கிருந்த சுவிஸ் இராசதந்திரிகளும் சரி, அவர்களால் அழைக்கப்பட்டிருந்த நிபுணர்களும் சரி ஐந்து விடயங்களை நேரடியாகக் கூறினார்கள்.

**(1) இனவழிப்பு என்ற கோணத்தில் சிறீலங்காவிற்கு எதிரான நகர்வுகளைத் தமிழர்கள் மேற்கொள்வதாயின், தமிழினத்தை அழிக்கும் நோக்கத்துடன் தனது யுத்தத்தை சிறீலங்கா முன்னெடுத்தது என்பதை நிரூபிக்கும் வலுவான ஆதாரங்களைத் திரட்டி ஆவணப்படுத்த வேண்டும்.**

**(2) தமிழர்களிடம் தற்பொழுது உள்ள ஆதாரங்கள் மானிடத்திற்கு எதிரான குற்றங்களும், போர்க்குற்றங்களும் நிகழ்ந்ததை நிரூபிக்கும் வகையிலேயே உள்ளன.**

**(3) சீனாவையும், ரசியாவையும் மீறிப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் சிறீலங்காவை முன்னிறுத்துவதற்கு மேற்குலக நாடுகள் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.**

**(4) சிறீலங்காவிற்கு எதிரான தீர்ப்பாயம் ஒன்றை ஐ.நா. மன்றின் ஊடாக அமைப்பதற்கு மேற்குலகம் நடவடிக்கை எடுக்காது.**

**(5) தமிழர்கள் விரும்பினால் சிறீலங்காவின் முன்னாள் மற்றும் இந்நாள் ஆட்சியாளர்களுக்கும், படை அதிகாரிகளுக்கும் எதிராக மேற்குலக நாடுகளில் பயணத் தடைகளை விதிப்பதற்கும், பிரபஞ்சநியாயாதிக்கத்தின் அடிப்படையில் தாம் வாழும் நாடுகளில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தொடுப்பதற்கும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.**

இதே நேரத்தில் அனைத்துலக நீதியைப் பெறுவதற்கும், தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும் - தமிழர் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட மாற்று யோசனைகளையும் அவர்கள் நிராகரிக்கவில்லை.

உதாரணமாக வெறுமனவே இந்தியாவையும், மேற்குலக நாடுகளையும் மட்டும் நம்பியிருக்காது சீனாவுடனும், ரசியாவுடனும் இராசதந்திர உறவுகளைத் தமிழர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், ஈழத்தமிழர்களின் வெளியுறவுக் கொள்கை என்பது ஓரணி சார்ந்ததாக அல்லாது பன்முகப்படுத்தப்பட்டதாக உலகின் ஏனைய நாடுகளை நோக்கியதாகவும் அமைவதன் மூலமே தமிழர்களுக்கு அனுகூலம் ஏற்படும் என்றும் மாநாட்டின் மூன்றாம் நாள் நான் கூறிய பொழுது, அதற்கு சுவிஸ் இராசதந்திரிகளோ அன்றி அவர்களின் நிபுணர்களோ மறுப்புக் கூறவில்லை.

**இவ்வாறு அவர்கள் கூறினாலும், அதில் தமிழர் பிரதிநிதிகளுக்கான பூடகமான செய்தி ஒன்று மறைந்திருந்தது. அனைத்துலக நீதியைப் பெறும் உங்கள் நகர்வுகளை மாற்று நாடுகளைப் பயன்படுத்திப் பெற்றுக் கொள்ள முற்படுங்கள் என்பது தான் அச் செய்தி. துர்ப்பாக்கியவசமாக அதனை எம்மவர்கள் எவருமே புரிந்து கொள்ளவில்லை.**

இம் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது தான் மியன்மாருக்கு எதிரான நகர்வுகளை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் வங்காளதேசமும், பன்னாட்டு நீதிமன்றத்தில் நமீபியாவும் தொடங்கியிருந்தன. இது பற்றிய கருத்துக்களை அங்கிருந்த கனடிய பின்னணியைக் கொண்ட இளம் ஈழத்தமிழ் பெண் சட்டத்தரணி முன்வைத்த பொழுது அதை அங்கிருந்த சுவிஸ் இராசதந்திரிகளும், நிபுணர்களும் வரவேற்றார்கள். ரொகிங்கியர்களின் பாணியில் நகர்வுகளை மேற்கொள்வது பற்றித் தமிழர்கள் ஆலோசிப்பதாகக் குறித்த ஈழத்தமிழ் பெண் சட்டத்தரணி கூறிய பொழுது, அங்கிருந்த பன்னாட்டு சட்ட நிபுணரான டேவிட் ரொல்பேற் உணர்ச்சிவசப்பட்டுத் தனது இரண்டு கைகளையும் கைதட்டும் நிலைக்குக் கொண்டு சென்று, பின்னர் தான் இருக்கும் இடம் பற்றிய திடீர் பிரக்ஞையைப் பெற்றவராக கைதட்டாமல் நிறுத்தினார்.

அப்பொழுது அங்கிருந்த சுவிஸ் இராசதந்திரிகளின் முகத்தைக் கூர்ந்து அவதானித்தேன். அவர்களின் முகத்தில் புன்முறுவல். மூன்று நாள் மாநாட்டில் தாம் பூடகமாகச் சொல்ல வந்த செய்தியை ஒரு சிலர் புரிந்து கொண்டுள்ளார்கள் என்ற திருப்தி அவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஈழத்தமிழர்களின் வெளியுறவுக் கொள்கை பன்முகப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நான் கூறியதற்கு, மாநாடு முடிந்ததும் என்னை சந்தித்த இரண்டு தமிழர் பிரதிநிதிகள், இவ்வாறான நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபட்டால் தங்கள் அமைப்புக்களை மேற்குலக நாடுகள் அழித்து விடும் என்று அச்சம் வெளியிட்டார்கள். ஆனால் யதார்த்தம் அதுவல்ல.

சிறீலங்காவை சீனாவிடமிருந்து பிரித்தெடுத்துக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமாயினும், நேரடியாகத் தம்மோடு தொடர்புபடாத நாடுகள் மற்றும் பன்னாட்டு அமைப்புக்கள் ஊடான நகர்வுகளை ஈழத்தமிழர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று மேற்குலகம் விரும்புகின்றது. அதற்கான திசைகாட்டிகள் தான் ரொகிங்கியர்கள் எடுத்திருக்கும் நடவடிக்கைகள்.

இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தையும் பதிவு செய்தாக வேண்டும். புலம்பெயர் தமிழர் பிரதிதிநிதிகளுடனான மாநாட்டை நடத்துவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் தான் ரொகிங்கியர்கள் உள்ளடங்கலான புலம்பெயர்வாழ் மியன்மார் மக்களின் பிரதிநிதிகளுடன் இதே பாணியிலான மாநாட்டை சுவிற்சர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சு நடத்தியிருந்தது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

2020ஆம் ஆண்டு பிறந்து ஒரு வாரம் கடந்திருக்கும் நிலையில் இனியும் காலம் தாழ்த்தாது தமது வெளியுறவுக் கொள்கையை மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கு ஈழத்தமிழர்கள் முற்பட வேண்டும். ஏலவே மேற்குலக நாடுகளிலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் முன்னெடுக்கப்படும் பரப்புரை நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் கதவுகளைத் தமிழர்கள் தட்ட வேண்டும். அக்கதவுகளின் ஊடாக சிறீலங்காவிற்கு எதிரான சட்டப் போர்க்களத்தைத் திறக்க வேண்டும்.

சிறீலங்கா அரசுடனான உறவின் மூலம் ஏற்படக் கூடிய வணிக அனுகூலங்களை விடப் பன்மடங்கு வணிக அனுகூலங்களைப் பின்தங்கிய ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் ஏற்படுத்தும் பொருளாதார பலம் தமிழர்களிடம் உண்டு. அதிலும் கோடிசுவரர்களான புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்கள் சிலரிடம் பின்தங்கிய ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தக்கூடிய அளவுக்குப் பணம் உண்டு.

தென்னிந்தியத் திரைப்படங்களிலும், புலம்பெயர் தமிழ் ஊடகங்களிலும் முதலீடு செய்து விரயப்படுத்தப்படும் பணத்தை குறித்த நாடுகளில் முதலீடு செய்தாலே அந் நாடுகளை இத் தொழிலதிபர்களால் வளைக்க முடியும்.

தவிர மொரீசியஸ், கிழக்குத் தீமோர், எரித்திரியா போன்ற நாடுகளில் செல்வாக்குடைய தமிழர்களும் புலம்பெயர் தேசங்களில் இருக்கின்றார்கள். இவர்கள் முயற்சி எடுத்தால் இந் நாடுகளின் ஆட்சியாளர்களையும் தமிழீழ தேசத்தின் அரசியல் அபிலாசைகளின் பக்கம் வளைத்தெடுக்கலாம்.

இன்று ஈழத்தீவில் நிகழ்ந்திருக்கும் சீனசார்பு ஆட்சி மாற்றம், தமிழர்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளுக்குத் திரைமறைவில் ஆசீர்வாதம் வழங்கும் நிலையிலேயே மேற்குலகையும், இந்தியாவையும் தள்ளியுள்ளது.

(முற்றும்)




**தை பிறந்தால் வழி பிறக்கும் என்று காலம் காலமாகச் சொல்கின்றோம். இன்று வரை வழி பிறந்ததாகத் தெரியவில்லை.**

**கேள்வி:–** 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று காலம் காலமாகச் சொல்கின்றோம். இன்று வரை வழி பிறந்ததாகத் தெரியவில்லை. தொடர்ந்தும் இதனையேதான் தமிழர்கள் நாம் சொல்லிக்கொண்டு இருக்கப் போகின்றோமா..?

**நகுலேஸ்வரன் நாகரஞ்சன் (பொபினி பிரான்ஸ்)**

**பதில்:–** 'போராடுபவனுக்கே இந்த உலகம் சொந்தம்' என்றான் ஒரு கவிஞன். 'ஓடாத மானும், ஓடாத ஆறும் உயிர்வாழ முடியாது' என்றான் இன்னொரு கவிஞன்.



இயங்கிக்கொண்டே இருந்தால்தான் உயிர்கள் மட்டுமல்ல சடப்பொருள்கூட வாழ முடியும் என்பது இயற்கையின் விதி. இதில் மனிதன் மட்டும் விதிவிலக்கா என்ன? 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது வெறும் நம்பிக்கை மட்டும்தான். ஆனால், அந்த நம்பிக்கை தரும் உற்சாகம், ஒருவரை இயங்கவைக்கின்றது. இயங்குதல் என்பதே வெற்றிக்கான முதல் அடிதான். அந்த முதலடியுடன் நின்றுவிடாமல் அடுத்த அடுத்த அடிகளை எடுத்து முன்னேறினால் வழி தி(பி)றக்கும்.

அண்மையில் முகநூலில் நண்பரொருவர் சோர்ந்து கிடக்கும் உள்ளங்களுக்கு நம்பிக்கை ஊட்டும் பதிவொன்றை இட்டிருந்தார். அந்தப் பதிவையே உங்கள் கேள்விக்கான இன்னொரு பதிலாகவும் இங்கே தருகின்றேன்.

***'இத்தனை வருடங்களாக ஓடியும் இதுவரை வெற்றிபெறவில்லை என்பதற்காக நாம் வருத்தமடையத் தேவையில்லை.***

***ஏனெனில், இத்தனைக்கு பிறகும் நாம் நின்றுவிடாமல் ஓடுகிறோம் என்பதே பெருமைதான்.***

***எதுவுமே எளிமை இல்லைதான். ஆனால் அனைத்துமே சாத்தியம்தான்.***

***ஒரு மரத்தை வெட்ட 6 மணி நேரம் கிடைத்தால், புத்திசாலி தன் கோடரியை கூர்மையாக்க 4 மணி நேரத்தை செலவு செய்வான். அதுபோல நமக்கும் நம்மை கூர்மைப்படுத்த தக்க நேரம் கிடைத்திருக்கிறது எனக் கொள்வோம்.***

***மண்ணில் விழுந்த விதைகூட போராடியே முளைக்கிறது. காலில் மிதிபடும் புழு கூட துடித்து எழுகிறது***

***தமிழன் மட்டும் வீழ்ந்து கிடந்துவிடுவானா என்ன? மீண்டும் எழுவோம்...'***

தை பிறந்தால் வழி பிறக்கும், துணிந்தெழுந்தால் தடை உடைக்கும்.

**கேள்வி:–** எங்கள் வீட்டில் 'மதுரை ஆட்சி' நடக்கின்றது. 'சிதம்பர ஆட்சியாக' மாற்றுவதற்கு ஒரு வழி சொல்லுங்களேன் அரிச்சந்திரனே..?

**கந்தசாமி ரகுவரன் (பரிஸ் பிரான்ஸ்)**

**பதில்:–** எதற்கு மதுரை, சிதம்பரம் என்று தனித்தனி ஆட்சி? இருவரும் இணைந்து திருச்செங்கோடாக (அர்த்தநாரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள இடம்) ஆட்சி நடத்துங்களேன். கணவன் - மனைவி சரிபாதி என்பதை உணர்ந்து சிவனே தனது உடலில் பாதியை மனைவிக்கு கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக மாறிவிட்டார், மனிதர் உங்களுக்கு ஏன் இந்த ஏட்டிக்குப்



போட்டி? கணவன், மனைவி இருவரும் ஒன்றிணைந்து புரிந்துகொண்டு வாழ்வதுதான் வாழ்க்கை. ஆட்சியை யார் நடத்துவது, அடிமைப்பட்டு யார் கிடப்பது என்பதா வாழ்க்கை?

இந்த வேளையில் மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மையார் திருமண நிகழ்வொன்றில் கூறிய கதைதான் நினைவுக்கு வருகின்றது. அவர் சொன்ன கதையை இப்ப நீங்களும் ஒருக்கா கேளுங்கள்...

முடிவில் வீட்டில் மதுரை ஆட்சியா, சிதம்பர ஆட்சியா? அல்லது திருச்செங்கோடு ஆட்சியா? என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

"கபீர்தாசர் என்பவர் ஒரு மிகப் பெரிய ஆன்மிகவாதி. ஒரு நாள் கபீர்தாசர் இல்லத்தில் ஏகப்பட்ட பக்தர்கள். எல்லோரும் அவரிடம் ஆன்மிகச் சந்தேகங்களை கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கெல்லாம் பொறுமையாக பதில் சொல்லிக் கொண்டிருந்தார் கபீர்தாசர். நண்பகல் 12 மணிக்கு எல்லோரும் போய்விட்டனர். ஆனால், ஒருவர் மட்டும் அங்கேயே உட்கார்ந்திருந்தார். 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கபீர்தாசர் கேட்டார். அதற்கு பதில் சொல்லத் தயங்கினார் அந்த மனிதர். உடனே கபீர்தாசர், 'உங்கள் முகத்தில் காணப்படுகிற அறிகுறிகளைப் பார்த்தால், உங்களுடைய இல்வாழ்க்கை இன்பமாக இல்லை என்று தோன்றுகிறது, அப்படித்தானே?' என்று கேட்டார்.

தொடர்ச்சி 38ம் பக்கம்

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16




## 2018ம் ஆண்டில் ஆயுத விற்பனை அதிகரிப்பு

உலகம் போரை விரும்பவில்லை என்று சொல்லப்படுகின்றது. ஆனால், அதே உலக நாடுகளால் ஆயுதங்களின் விற்பனை அதிகரித்துள்ளதை ஆய்வு அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. 2017ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2018ம் ஆண்டில் உலக அளவில் 5 சதவீத அளவிற்கு ஆயுத விற்பனை அதிகரித்ததாக சுவீடனை சேர்ந்த ஸ்டொக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2018ல் ஆயுத விற்பனை மூலம் 100 மிகப்பெரிய ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் சுமார் 42 ஆயிரம் கோடி டொலர்களை வருமானமாகப் பெற்றுள்ளன.

இந்த நிறுவனங்களில் பெரும்பான்மையானவை அமெரிக்காவைச் சேர்ந்தவை. சர்வதேச ஆயுதச் சந்தையில் அமெரிக்க நிறுவனங்கள் 59 வீதம் பங்கு வகிக்கின்றன.



அமெரிக்க நிறுவனங்களின் விற்பனை மட்டும் கடந்த ஆண்டில் 24 ஆயிரம் கோடி டொலராக உள்ளது. இது, 2017ம் ஆண்டினைக் காட்டிலும் 7.2 சதவீதம் அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய ஆயுத உற்பத்தி நிறுவனமான அமெரிக்காவின் லாக்ஹீட் மார்ட்டின் 2009 முதல் கடந்த ஆண்டு அதிக வருவாயை ஈட்டியுள்ளது. அதன் விற்பனை மட்டுமே உலக சந்தையில் 11 சதவீதம் ஆகும். சர்வதேச ஆயுதச் சந்தையில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் 8.6 வீத விற்பனையுடன் ரஷ்யா உள்ளது. ரஷ்ய நிறுவனமான அல்மாஸ்–அண்டே பட்டியலில் ஒன்பதாவது இடத்திற்கு முன்னேறி உள்ளது. முந்தைய ஆண்டை விட 18 வீதம் அதிகளவு ஆயுத தளவாடங்களை இந் நிறுவனம் ஏற்றுமதி செய்துள்ளது. பிரித்தானியா 8.4 வீதமும், பிரான்ஸ் 5.5 வீதமும் என ஆயுதங்களை விற்பனை செய்து அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளன.

இதேவேளை, சீனா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 சதவீதத்தை 2013ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பாதுகாப்புக்காக செலவிட்டு வருகிறது. அத்துடன், சீனாவின் ஆயுத விற்பனை குறித்து போதிய தகவல் இல்லாததால், இந்தப் பட்டியலில் சீனா சேர்க்கப்படவில்லை. எனினும், ஆயுத விற்பனையில் முதல் 100 இடங்களைப் பிடித்துள்ள நிறுவனங்களில் 3 முதல் 7 சீன நிறுவனங்கள் இடம் பிடிக்கும் வாய்ப்புள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4வது தடவையாக பிரான்ஸ் கூகுளுக்கு அபராதம்

இணையதள விளம்பரத் துறையில் தனது மேலாதிக்கத்தை தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறி, 'கூகுள்' நிறுவனத்துக்கு பிரான்ஸ் 150 மில்லியன் ஈரோக்களை அபராதம் விதித்துள்ளது. அமெரிக்க கூகுள் நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட 4வது அபராதம் இதுவாகும். கடந்த டிசெம்பர் 20ம் திகதி இதுகுறித்து பிரான்ஸ் இணையதள ஒழுங்காற்று அமைப்பு கூறுகையில், கூகுள் விளம்பர தொழில்நுட்பங்கள் சிக்கலாகவும், புரிந்து கொள்ள முடியாதவையாகவும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும், விளம்பரங்களை வெளியிடுவதற்கான தனது நெறிமுறைகள் குறித்து கூகுள் நிறுவனம் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், கூகுள் விளம்பரத் தளத்தின் இயக்க விதிகள் மற்றும் கணக்குகளை இடைநிறுத்துவதற்கான நடைமுறைகளை தெளிவுபடுத்துவதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கூகுள் விளம்பரங்களின் விதிமுறைகளை மீறுவதைத் தடுப்பது, கண்டறிவது மற்றும் கையாள்வது போன்ற நடவடிக்கைகளும் கூகுள் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட வேண்டும். இந்த அபராதத்தை கட்டுவதற்கு கூகுளுக்கு ஒரு மாதம் உள்ளது. இரண்டு மாதங்களில் அவர்களில் செயல்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து விவரிக்கும் அறிக்கையை பிரான்ஸ் இணையதள ஒழுங்காற்று அமைப்பிடம் சமர்ப்பிக்க வேண்டும். 6 மாத கால அவகாசம் வழங்கப்படும். பிரான்சின் இந்த முடிவை எதிர்த்து கூகுள் மேல்முறையீடு செய்வதாக அறிவித்துள்ளது.

## தனியார் மயமாகும் எயார் இந்தியா!

எயார் இந்தியா நிறுவனம் விரைவில் தனியார் மயமாக்கப்படும் என்று இந்திய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்திய மத்திய அரசுக்குச் சொந்தமான விமானப் போக்குவரத்து சேவை நிறுவனமான எயார்




இந்தியா, நீண்ட காலமாகவே நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. 60 ஆயிரம் கோடி ரூபாவிற்கு மேல் கடன் சுமை இருப்பதால் தொடர்ந்து இயங்க முடியவில்லை. எனவே எயார் இந்தியாவைத் தனியாருக்கு விற்பனை செய்து கடனை அடைக்கும் முயற்சியில் இந்திய மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், இது குறித்து விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி நிருபர்களிடம் கூறுகையில், குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு நாங்கள் அடிமையாகவோ, பலியாகவோ விரும்பவில்லை. எயார் இந்தியா நிறுவனம் விரைவில் தனியார் மயமாக்கப்படும். விமான கட்டணங்களை நெறிப்படுத்தும் திட்டம் இல்லை என்று கூறியுள்ளார்.

எமது வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் இனிய தைப்பொங்கல் புதுவருட நல் வாழ்த்துக்கள்

Nandhi™

100% Sorted Rice

Nandhi™ Brand

உங்களுக்காக உங்களுக்கென்றே
தரம் ! மலிவு !! சேவை !!!

வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
மிக நேர்த்தியாக தேர்ந்தெடுக்கப்பட்ட
தரமான மளிகை மற்றும் காய்கறிவகைகள்
மலிவான விலையில்
100% உத்தரவாதத்துடன் பெற்றிட
இன்றே நாடுங்கள்

V S · CO Cash & Carry

197, rue Fbg St.Denis, 75010 Paris - Tél.: 01 40 34 71 65
Bureau : 01 40 34 13 13 Fax : 09 70 29 74 99
email: vsco@vsco.fr
GARE DU NORD LA CHAPELLE

பாரிஸ் லா சப்பலில்

எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

AMBAAL STORE





பல் பொருள்
அங்காடி

இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும்
ஆசிய மளிகைப்பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
கடல் உணவு வகைகள்...

192, rue du Fbg.st.Denis
75010 Paris
Tél: 01 42 05 41 85

உளம்கனிந்த தைப்பொங்கல்
திருநாள் வாழ்த்துக்கள்

மண்டபம், அலங்காரம் உட்பட
உங்கள் விழாக்களிற்குத் தேவையான
அனைத்து ஒழுங்குகளிற்கும்!



baby.ballon@live.fr Baby ballon

பேபி பலூான்
டெக்கரேஷன்

01 39 80 85 23 - 06 13 06 20 29

எமது வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் இனிய தைப்பொங்கல் புதுவருட நல் வாழ்த்துக்கள்

VICHNESH SHOP
மளிகை ஸ்தாபனம்

அனைத்து வகையான
மளிகைப் பொருட்கள் மற்றும்
அனைத்து நாடுகளுக்கான
தொலைபேசி அட்டைகள்
கழிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்!



8, Esplanade de L'Europe
95100 Argenteuil
Tél: 01 39 81 35 60

# புட்டினின் ஆதிக்கமும் ரஷ்யாவின் அசுர வளர்ச்சியும்

## உலகின் எந்த நாட்டு படைகளாலும் தடுத்துநிறுத்தமுடியாத சக்தி !

உலக நாடுகளை ஒட்டுமொத்தமாக வியப்பில் ஆழ்த்தும் வகையில் புதிய ஆயுத சோதனையை முன்னெடுத்துள்ளது ரஷ்யா. இந்த புதிய ஆயுதத்தை எந்த நாட்டு இராணுவமும் தடுத்து நிறுத்த முடியாது என்று ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டின் சவால் விடுத்துள்ளார். தற்போதுள்ள அனைத்து ஏவுகணை தடுப்பு



தொழில்நுட்பங்களையும் முறியடித்து, தங்களால் உருவாக்கப்பட்டுள்ள ஒலியைவிட ஐந்து மடங்கு வேகம் கூடிய ஹிப்பர்சொனிக் ஏவுகணை (Hypersonic missile) இலக்கை தகர்க்கும் என அவர் தெரிவித்தார். 2018ம் ஆண்டு மார்ச் மாதமே ஹிப்பர்சொனிக் ஏவுகணை குறித்து புட்டின் முதன் முறையாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். இந்நிலையிலேயே தனது ஹிப்பர்சொனிக் ஏவுகணைச் சோதனையை ரஷ்யா வெற்றகரமாக நடத்தி முடித்துள்ளதுடன் படையிலும் இணைத்துள்ளது. இதன்மூலம் உலகில் ஹிப்பர்சொனிக் ஏவுகணையை வெற்றிகரமாக ஏவிய முதல் நாடு என்ற பெருமையை ரஷ்யா கைவசப்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் இராணுவ உயர் அதிகாரிகளுடனான சந்திப்புக்கு பின்னர் முக்கிய ஊடகங்களிடம் தகவல் வெளியிட்ட ரஷ்ய அதிபர், உலகில் எந்த நாடும் இந்த ஏவுகணையை தடுத்து நிறுத்தவோ, முறியடிக்கவோ முடியாது என்றும் பெருமைபடத் தெரிவித்துள்ளார்.

ஹிப்பர்சொனிக் ஆயுதங்களில் நாங்கள் தனித்துவமான முன்னேற்றம் கண்டு உள்ளோம். எங்களைப் பிடிக்க மற்ற நாடுகள் முயற்சிக்கின்றன என்று புட்டின்



கூறினார். உலக வரலாற்றில் முதன் முறையாக அமெரிக்காவை விட ஒருபடி மேலே சென்று புதிய ஆயுதம் ஒன்றை ரஷ்யா கைவசப்படுத்தியுள்ளது. மேலும், இந்த ஏவுகணையை உலகின் எந்த நாட்டு இராணுவமும் தடுத்து நிறுத்த முடியாது எனவும், வானில் இருந்து வெளியேறி விண்சென்று, எரிகல் போன்று அது மீண்டும் பூமியை நோக்கித் திரும்பி இலக்கை தாக்கி அழிக்கும் எனவும் புட்டின் தெரிவித்துள்ளார்.

'ஷிர்கோன் (Zircon) என பெயரிடப்பட்டுள்ள இந்த ஹிப்பர்சொனிக் ஏவுகணையானது மாக் 9–ன் வேகத்தை மிஞ்சும் எனவும் மணிக்கு சுமார் 11,300 கிலோ மீற்றர்களை தாண்டும் எனவும் புட்டின் அறிவித்துள்ளார்.

2018ம் ஆண்டு மார்ச் மாதம் அவங்கார்ட் ஹிப்பர்சொனிக் (Avangard hypersonic) மற்றும் கின்ஷ்கோல் ஹிப்பர்சொனிக் ஏவுகணை குறித்து புட்டின் முதன் முறையாக பேசி இருந்தார். அவங்கார்ட் ஹிப்பர்சொனிக் ஏவுகணையானது ஒலியை விட 20 மடங்கு வேகத்தில் பாயும் எனவும் புட்டின் கூறினார். அதுமட்டுமின்றி, இலக்கை நெருங்க நெருங்க ஆயுதத்தின் போக்கு மற்றும் அதன் உயரத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் புட்டின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவைப் போலவே, அமெரிக்காவும் சீனாவும் ஹிப்பர்சொனிக் திட்டங்களில் ஈடுபட்டுள்ளன. இந்த ஆண்டு தொடக்கத்தில் சீனா ஒரு ஹிப்பர்சொனிக் விமானத்தை பரிசோதித்ததாகக் கூறியது. அதே நேரத்தில் அமெரிக்க விமானப்படை ஒரு ஏவுகணையை உருவாக்க லாக்ஹீட் மார்டினுக்கு ஒரு ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், அவங்கார்ட் ஹிப்பர்சொனிக் கிளைட் வாகனம் பொருத்தப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை, முதல் படைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இது தவிர வேறெந்த தகவல்களும் அதில் இடம்பெறவில்லை.

ரஷ்யாவின் அவங்கார்ட் ஹிப்பர்சோனிக் அணு ஏவுகணையின் சோதனை கடந்த ஆண்டு மார்ச் 27ம் திகதி முதல் முறையாக நடந்தது. இந்த சோதனையின் போது மணிக்கு 33,000 கிலோ மீற்றர் வேகத்தில் அது பாய்ந்தது. இது ஒலியை விட 20 மடங்கு அதிவேகமானது. பூமியில் இருந்து செங்குத்தாக வானத்துக்கு செல்லும். பின் அங்கிருந்து அது மீண்டும் தனது இலக்கை நோக்கி அசுர வேகத்தில் கீழ்நோக்கி பாய்ந்து வந்து அழிக்கும்.

இலக்கை நோக்கி ஏவுகணை வரும்போது, அதை இடைமறித்து அழிக்கக்கூடிய சக்திபடைத்த ஏவுகணை, அமெரிக்கா உட்பட எந்த நாட்டிடமும் இப்போது கிடையாது. வானில் இருந்து எரிகல்லை போல் பூமியை நோக்கி அதிவேகத்தில் பாய்ந்து, குறிக்கப்பட்ட இலக்கை துல்லியமாக அழிக்கும்.

### புட்டினின் ஆதிக்கம்

ரஷ்யாவில் 20 ஆண்டுகளாக ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவிகளில் புட்டின் தொடர்ந்து நீடித்து எதிர்க்கட்சிகளுக்கு சிம்மசொப்பனமாக விளங்கி வருகிறார். ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உலகின் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவராக திகழ்கிறார். 1999ம் ஆண்டு ரஷ்யா பொருளாதார நெருக்கடியை சந்தித்தபோது ஒருங்கிணைந்த சோவியத் ஒன்றியத்தின் உளவு அமைப்பில் (கே.ஜீ.பி) விளாடிமிர் புட்டின் பணியாற்றினார்.

தொடர்ச்சி 38ம் பக்கம்

## விமானத்தில் தமிழ் அறிவிப்பு விமானிக்கு பாராட்டு

தமிழுக்கு முன்னுரிமை கொடுப்பதில் ஒரு நாடு இருக்கின்றது என்றால், உலகில் இப்போது சிங்கப்பூர்தான் முதலிடத்தில் உள்ளது என்று சொல்லலாம். அந்நாட்டு அரசு உலகின் பழம்பெரும் மொழி என்ற காரணத்திற்காக, தமிழுக்கு அத்தனை மரியாதை கொடுத்து வருகின்றது. தற்போது சிங்கப்பூர் விமானத்திலும் தமிழுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விமானத்தில் தமிழில் அறிவிப்புச் செய்ததற்குப் பயணிகளிடையே நல்ல வரவேற்புக் கிடைத்தது



மகிழ்ச்சி தருவதாக விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. சிங்கப்பூர் விமான நிறுவனமான ஸ்கூட்டில் பணிபுரிந்து வரும் விமானி சரவணன் அய்யாவுக்கு விமானத்தில் தமிழில் அறிவுப்பு செய்யவேண்டும் என்பது நீண்டநாள் கனவு.

இதனைத் தொடர்ந்து அவர் சமீபத்தில் சென்னையில் இருந்து சிங்கப்பூருக்கு சென்ற விமானத்தில் தமிழில் பயணிகளுக்கு அறிவிப்புகளை வழங்கினார். இந்த அறிவிப்பில், சென்னை மற்றும் சிங்கப்பூரின் வானிலை எவ்வாறு உள்ளது, எவ்வளவு அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கின்றோம், எப்போது தரையிறங்குவோம், நேரம் குறித்த தகவல்களை பதிவு செய்தார். மேலும் இதனை காணொளியாக எடுத்து தன்னுடைய முகநூல் பக்கத்திலும் பதிவேற்றினார். இதனால் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இது குறித்து ஸ்கூட் விமான நிறுவனம், சரவணன் அய்யாவு சிறந்த தமிழ் படைப்பாளியாக இருக்கின்றார். அந்த காரணத்தால் அவருடைய கோரிக்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்று கூறியுள்ளது. இந்த பதிவினை முகநூலில் பார்த்த ஏராளமான தமிழர்கள் சரவணன் அய்யாவுவை மனமார வாழ்த்தி வருகின்றனர்.

## இந்திய விமானப் படை மிக் 27ஐ கைவிட்டது

மிக் 27 ரக போர் விமானங்களுக்கு இந்திய விமானப் படை பிரியா விடை அளித்தது. 1980களில் அப்போதைய சோவியத் ஒன்றியத்தினால் தயாரிக்கப்பட்டவை மிக் 27 ரக போர் விமானங்கள். இந்திய விமானப் படையில் 1985ம் ஆண்டு இப்போர் விமானங்கள் இணைக்கப்பட்டன. இந்திய விமானப் படையில் மிக் போர் விமானங்கள் 7 இருந்தன. தற்போது இந்த மிக் 27 ரக போர் விமானங்களுக்கு ஓய்வளிக்கப்



பட்டுள்ளது. இதற்கான நிகழ்ச்சி ஜோத்பூர் விமானப் படை தளத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. விண்ணில் கடைசியாக பறந்து சாகசங்களை நிகழ்த்திவிட்டு தரை இறங்கிய விமானங்களுக்கு தண்ணீர் பீய்ச்சி வரவேற்பளிக்கப்பட்டது. உலகில் எந்த நாட்டிலும் மிக் போர் விமானங்கள் பயன்பாட்டில் இல்லை. இந்தியாவில் மட்டுமே இருந்தன. தற்போது அங்கும் பயன்பாட்டில் இருந்து ஓய்வுபெற்றுள்ளது. இந்தியா தற்போது பிரான்சின் ரஃபெல் போர் விமானங்களை தனது படையில் இணைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நோர்வே இளவரசியின் கணவர் தற்கொலை!

நோர்வே நாட்டின் இளவரசி மார்த்தா லூயிஸ் (Märtha Louise – 48 வயது). இவருக்கும் டென்

»»

நான்கு தலைமுறைகள் ஒன்றாக இங்கே. நத்தார் பண்டிகையை முன்னிட்டு இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் தனது மகன் சார்லஸ், பேரன் வில்லியம், கொள்ளுப்பேரன் ஜோர்ஜுடன் இணைந்து சமையலில் ஈடுபடும் படங்களை பக்கிங்காம் அரண்மனை



நிர்வாகம் வெளியிட்டுள்ளது. இங்கிலாந்து அரச குடும்பத்தின் 4 தலைமுறையை சேர்ந்தவர்கள் ஒன்றாக காட்சியளிக்கும் இந்தப் படங்கள் விற்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாய் முன்னாள் இராணுவ அதிகாரிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

»»

சவூதி அரேபியாவைச் சேர்ந்த சுமார் 88,000 பேரது சுட்டுரை (டுவிட்டர்) கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து டுவிட்டர் நிறுவனத்தின் இணையதளப் பாதுகாப்புப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சவூதி அரேபிய அரசுடன் தொடர்புடைய, அந்த அரசுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்த சுமார் 88,000 பேரது கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. அந்தக் கணக்குகளைப் பயன்படுத்தி வந்தவர்கள், சவூதி அரேபிய அதிகாரிகளுக்கு ஆதரவாக பெரும்பாலும் அரபி மொழியில் பதிவுகள் மேற்கொண்டு வந்தனர். மேலும், மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களைக் குறிவைத்து, பலர் ஆங்கிலத்திலும் பதிவுகளை வெளியிட்டு வந்தனர். சவூதி அரேபியாவின் கொள்கைகளை உலகளவில் எடுத்துச் செல்வதற்காக அவர்கள் இந்த வலைதளத்தை பல்வேறு வகையிலும் தவறாகப் பயன்படுத்தினர். அதனைத் தடுப்பதற்காகவே, அவர்களது கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

»»

சீன – இந்திய தரைப்படைகளின் 'கையோடு கை–2019' என்னும் பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டுப் பயிற்சி 20ம் திகதி மேகாலயா மாநிலத்தின் ஷில்லாங் நகரிலுள்ள உம்ராய் இராணுவ



முகாமில் வெற்றிகரமாக நிறைவடைந்தது. 14 நாட்கள் நடைபெற்ற இக்கூட்டுப் பயிற்சியில், இரு நாடுகள் முறையே 130 படை அதிகாரிகளை அனுப்பி அணிகளை உருவாக்கின. இது, இரு நாட்டுத் தரைப்படைகள் நடத்திய 8வது பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டுப் பயிற்சியாகும். மேலும், இந்தியாவில் நடைபெற்ற 4வது கூட்டுப் பயிற்சியாகும். சீன கண்காணிப்புக் குழுவின் உறுப்பினரும் மூத்த ஆணையாளருமான வாங்வெய்ஷின் கூறுகையில், இக்கூட்டுப் பயிற்சி, இரு நாடுகளுக்கிடையில் ஒன்றுக்கு மற்றதன் புரிந்துணர்வை அதிகரித்து, இரு நாட்டு படைகளுக்கிடையிலான பரிமாற்றத்தை மேலும் ஆழமாக்கியுள்ளது என்று தெரிவித்தார்.

»»

மெக்சிகோவில் உள்ள ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தில், பாதிரியார்களால் குறைந்தது 175 குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1941ல் இருந்து பாலியல் வன்முறை சம்பவங்கள் நடந்ததாக




கூறப்பட்டுள்ள புகார் தொடர்பாக விசாரிக்கப்பட்டது. அதில், 175 குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு ஆளானது தெரியவந்துள்ளது. அந்தத் தேவாலயத்தை உருவாக்கிய மார்சியல் மேசியல் என்ற பாதிரியார் மட்டும், 60 குழந்தைகளிடம் அத்துமீறி நடந்துள்ளார். அவரைத் தவிர மேலும் 33 பாதிரியார்களும் இந்தக் கொடூரத்தில் ஈடுபட்டுள்ளனர். பல ஆண்டுகள் பாலியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட பாதிரியார் மேசியலை, போப் பதினாறாம் பெனடிக், 2006ம் ஆண்டு ஓய்வு பெற உத்தரவிட்டார். குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளாமலேயே மேசியல் கடந்த 2008ம் ஆண்டு உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

»»


செவ்வாய் கோளுக்கு அடுத்த ஆண்டு அனுப்பப்படவுள்ள அமெரிக்காவின் 5வது ஆய்வு ஊர்தியை செய்தியாளர்களிடம் நாசா அறிமுகப்படுத்தியது.



ஃபுளோரிடா மாகாணம், கேப்கனாவெரல் ஏவுதளத்திலிருந்து அடுத்த ஆண்டு யூலை மாதம் அனுப்பப்படவிருக்கும் இந்த ஆய்வு ஊர்தி, செவ்வாய்க் கோளில் உயிரினங்கள் இருந்தனவா என்பதை ஆய்வு செய்வதோடு மட்டுமன்றி, எதிர்காலத்தில் அந்தக் கோளுக்கு மனிதர்களை அனுப்புவதற்கான சோதனைகளையும் மேற்கொள்ளும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

»»

ஹொங்கொங்கிலிருந்து சீன வணிகர்கள் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி, அந்த நகரில் ஆயிரக்கணக்



கான ஜனநாயக ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஹொங்கொங்கில் கைது செய்யப்பட்டவர்களை சீனாவுக்கு நாடுகடத்த வகை செய்யும் சட்ட மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நகரில் 6 மாதங்களுக்கு முன்னர் தொடங்கிய போராட்டங்கள், அந்த →

மார்க்கை சேர்ந்த பிரபல நாவலாசிரியரான அரி பென்னுக்கும் (Ari-behn) 2002ம் ஆண்டு திருமணம் நடந்தது. இந்த தம்பதிக்கு 3 பெண் குழந்தைகள்



பிறந்தன. எனினும் கருத்து வேறுபாடு காரணமாக 2017ம் ஆண்டு கணவன், மனைவி இருவரும் விவாகரத்து பெற்று முறைப்படி பிரிந்தனர். இந்த நிலையில் நோர்வே தலைநகர் ஓஸ்லோவில் தனியாக வாழ்ந்து வந்த அரி பென் (47 வயது) கடந்த நத்தார் தினத்தன்று தற்கொலை செய்து கொண்டார். அரி பென் எப்படி தற்கொலை செய்து கொண்டார்? இந்த விபரீத முடிவுக்கு காரணம் என்ன என்பது உள்ளிட்ட தகவல்கள் வெளியிடப்படவில்லை. எனினும் இளவரசி மார்த்தா



லூயிஸ், 2019ம் ஆண்டு முதல் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த டுர்க் வேராட் என்பவரை மணம்முடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரி பென்னின் மறைவுக்கு நோர்வே மன்னர் ஹரால்ட் மற்றும் ராணி சோன்ஜா ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரி பென், பல ஆண்டுகளாக எங்கள் குடும்பத்தில் ஒரு முக்கிய அங்கமாக இருந்தார். அவரை பற்றிய இதமான மற்றும் நல்ல நினைவுகளை எங்களுடன் எடுத்துச் செல்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவியல் கட்டுரைகள் சீனாவிற்கு முதலிடம்

உலக அளவில் அறிவியல் கட்டுரைகளை வெளியிடுவதில் சீனாவிற்கு முதலிடம் கிடைத்துள்ளது. அமெரிக்காவின் தேசிய அறிவியல் அறக்கட்டளை, ஆய்வு ஒன்றினை நடத்தி இதனை வெளியிட்டுள்ளது. உலகளவில் வெளியாகும் அறிவியல் கட்டுரைகளில் 20.67 வீதம் சீனாவில் இருந்து வெளிவருகின்றன.

உலக அளவில் அறிவியல் கட்டுரைகளை வெளியிடுவதில் சீனாவிற்கு அடுத்து அமெரிக்காவும் (16.54 வீதம்), 3வது இடத்தில் இந்தியாவும் (5.31 வீதம்) உள்ளன. தொடர்ந்து ஜேர்மனி, ஜப்பான், பிரித்தானியா, ரஷ்யா, இத்தாலி, தென்கொரியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த முதல் 10 இடத்தில் உள்ளன.

அறிவியல் கட்டுரைகளை வெளியிடுவதில், நாடுகள் வெவ்வேறு துறைகளால் வேறுபடுத்தப்படுகின்றன. உதாரணத்திற்கு, சீனா மற்றும் இந்தியா பொறியியல் கட்டுரைகளை அதிகளவில் வெளியிடுகின்றன. ஆனால், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் சுகாதார அறிவியல் கட்டுரைகளை அதிகளவில் வெளியிடுகின்றன.

இதேவேளை, அறிவியல் கட்டுரைகளை வெளியிடுவதில் இந்தியா மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. 2008ம் ஆண்டு வரையான முதல் பத்து ஆண்டுகளில், 48 ஆயிரத்து 998 அறிவியல் மற்றும் பொறியியல் கட்டுரைகளை இந்தியா வெளியிட்டுள்ளது. அடுத்த பத்து ஆண்டுகளில் அதாவது 2018ம் ஆண்டு வரையில் அதன் எண்ணிக்கை 1 இலட்சத்து 35 ஆயிரத்து 788 ஆக உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

## உருகுவே நாட்டில் 4.4 தொன் போதைப்பொருட்கள் பறிமுதல்

உருகுவே நாட்டில் போதைப்பொருள் கடத்தலை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த

# பரிஸ் பேச்சுவார்த்தைக்குப் பின் ரஷ்யா – உக்ரைன் இடையே கைதிகள் பரிமாற்றம்





பிரான்ஸ் – ஜேர்மனி தலைவர்களின் ஏற்பாட்டின் மத்தியத்துடன் பரிசில் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ரஷ்யாவும் உக்ரைனும் தமது முதல் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளன. உக்ரைனுக்கும், ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கைதிகள் பரிமாற்றம் கடந்த 29ம் திகதி தொடங்கியது.

உக்ரைன் உள்நாட்டுப் போர் விவகாரத்தில் ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே நிலவி வரும் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் இந்த நடவடிக்கை முதற் கட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள டொனட்ஸ்க் பகுதியில், ஹார்லிவ்கா நகருக்கு அருகிலுள்ள சோதனைச் சாவடியில் இந்த கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றது. இது குறித்து சுட்டுரை (டுவிட்டர்) வலைதளத்தில் உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி வெளியிட்ட பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: உக்ரைன் மற்றும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் தரப்பில் கைது செய்யப்பட்டிருந்தவர்களை விடுவிக்கும் பணிகள் தொடங்கிவிட்டன. ஹார்லிவ்கா நகருக்கு அருகே உள்ள மேயர்ஸ்கி சோதனைச் சாவடியில் கைதிகள் பரிமாற்றம் நடைபெறுகிறது என்று தனது சுட்டுரைப் பதிவில் ஸெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இரு தரப்பிலும் எத்தனை கைதிகள் விடுவிக்கப்படுகிறார்கள் என்ற விவரத்தை அவர் தெரிவிக்கவில்லை. முன்னதாக, தங்கள் தரப்பிலிருந்து 55 உக்ரைன் படையினர் விடுவிக்கப்படவிருப்பதாகவும், அதற்குப் பதிலாக 87 ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களை உக்ரைன் அரசு விடுவிக்கும் எனவும் செய்தியாளர்களிடம் கிளர்ச்சியாளர்களின் பிரதிநிதி டாரியா மோரஸோவா தெரிவித்தார்.

2013ம் ஆண்டில், ரஷ்யாவுக்கு ஆதரவான அப்போதைய உக்ரைன் அதிபர் விக்டர் யானுகோவிச்சுக்கு எதிராக, ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு பெற்ற எதிர்க்கட்சியினர் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பெரும் அரசியல் குழப்பம் ஏற்பட்டதையடுத்து, விக்டர் யானுகோவிச் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார். இந்தச் சூழலில், உக்ரைனின் அங்கமாக இருந்த கிரீமியாவுக்கு படைகளை அனுப்பிய ரஷ்யா, அந்த தீபகற்பத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது. உக்ரைனின் புதிய அரசுக்கு எதிராக கிழக்கு மற்றும் தெற்குப்பகுதியைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி 38ம் பக்கம்

# ஐரோப்பிய எரிவாயுக் குழாய் திட்டம்

## அமெரிக்காவின் தடைக்கு ரஷ்யா - ஜேர்மனி கடும் எதிர்ப்பு

ரஷ்யாவுக்கும், ஜேர்மனிக்கும் இடையே எரிவாயுக் குழாய் பொருத்துவதற்கான திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது இரு நாடுகளையும் அமெரிக்கா மீது சீற்றமடைய வைத்துள்ளன.

ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு எரிவாயு விநியோகத்தை விரிவுபடுத்தும் வகையில், இரு பகுதிகளுக்கும் இடையே கூடுதலாக இரு எரிவாயுக் குழாய் இணைப்பை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1225 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த எரிவாயுக் குழாய் பதிப்பின் திட்டத்தின் மதிப்பு 11 பில்லியன் டொலர்கள். இந்த திட்டம் அபாயகரமானதாகக் கருதுகிறது அமெரிக்கா. அதாவது ரஷ்யாவின்பிடி ஐரோப்பாவில் இறுகும் எனக் அஞ்சுகிறது அமெரிக்கா. தேவை ஏற்படும்போது ஜேர்மனிக்கான எரிவாயுவைத் துண்டிப்பதன் ஊடாக ஒரு பணயக்கைதியாக மாற்ற ரஷ்யாவிற்கு வாய்ப்பு




ஏற்படும் என்று அமெரிக்கா கருதுகின்றது. இதனால், இந்த திட்டத்துக்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்த நிலையில், புதிய திட்டத்தில் பங்கேற்கும் நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கும் உத்தரவில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த டிசெம்பர் 20ம் திகதி கையெழுத்திட்டிருந்தார்.

Nord Stream 2 என்றழைக்கப்படும் இந்தத் திட்டம் மட்டுமன்றி, ரஷ்யாவுக்கும், துருக்கிக்கும் இடையிலான கருங்கடல் ஊடான Turkish Stream திட்டத்தில் ஈடுபடும் நிறுவனங்களுக்கும் அந்த உத்தரவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தத் திட்டங்களுக்காக கடலடி குழாய்கள் பதிக்கும் கப்பல் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ரஷ்ய – ஐரோப்பிய எரிவாயுக் குழாய் திட்டத்துக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளமையை ஐரோப்பிய ஒன்றியம் கடுமையாக விமர்சித்துள்ளது. ஜேர்மனியும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இந்தத் தடை மூலம் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதாக ஜேர்மனியும் ஐரோப்பிய ஒன்றியமும் குற்றம் சாட்டியுள்ளன. இந்தத் தடை குறித்து ரஷ்யாவும் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. அதேவேளை, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பிற்கு எதிராக, தமது உள்விவகாரங்களில் தலையிட வேண்டாமென காட்டமான கருத்துகளை ரஷ்யா மற்றும் ஜேர்மனி ஆகிய இருநாடுகள் வெளியிட்டுள்ளன.

# எரியும் அவுஸ்திரேலியா இயற்கையின் பேரழிவு!

பிரேசிலிலுள்ள அமேசான் காட்டில் ஏற்பட்ட தீ, பூமிப் பந்திற்கு பேராபத்தை விளைவித்த நிலையில், இயற்கையின் பேரழிவுக்கு அவுஸ்திரேலியாவும் உள்ளாகியுள்ளது. அமேசான் காட்டுத் தீயின் கொடூரம் அடங்குவதற்குள்ளாக தற்போது அவுஸ்திரேலிய வனங்கள் பற்றி எரிகின்றன.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் கோடை காலம் மிகக் கடுமையாக இருந்தது. அதிகரித்த வெப்ப நிலையே இந்த காட்டுத் தீக்கு காரணம். கடந்த மாதம் அவுஸ்திரேலியாவில் அதிகபட்சமாக 50 பாகை செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியிருந்தது.

முன்னதாக கடந்த செப்டம்பர் மாத தொடக்கத்தில் அவுஸ்திரேலியாவில் நாடு முழுவதும் காட்டுத் தீ விபத்துகள் ஏற்பட்டன. இதில் சிக்கி, நூற்றுக்கணக்கான வீடுகள் தீக்கிரையாகின. 50 இலட்சத்திற்கும் அதிகமான ஹெக்டேர் பரப்பிலான (12.4 மில்லியன் ஏக்கர்) விவசாய நிலங்கள் தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக காட்டுத்தீ பரவலாக பல்வேறு இடங்களிலும் எரிந்து வருகின்றது.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவின் தென்கிழக்குப் பகுதியில் வேகமாகப் பரவி வரும் காட்டுத் தீ காரணமாக, அந்தப் பகுதியின் முக்கிய நகரங்களில் மின் தடை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், நிலைமையை சமாளிக்க 3,000 இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே, இந்தக் காட்டுத் தீயில் இரண்டு துணை மின் நிலையங்களும், ஏராளமான மின் கம்பி இணைப்புகளும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






அவுஸ்திரேலியாவில் தெற்கு அவுஸ்திரேலியா, நியூசவுத் வேல்ஸ், விக்டோரியா கடற்கரையையொட்டிய பகுதிகளில் காட்டுத்தீ தொடர்ந்து வேகமாகப் பரவி வருகிறது. விக்டோரியா மாகாணத்தில் தீ பரவி வருகிற பகுதிகளில் வசிக்கிற சுமார் 1 இலட்சம் பேர், வீடுகளை விட்டு வெளியேறும்படி ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காட்டுத்தீயில் 23 பேர் பலியாகி உள்ள நிலையில் மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். அத்துடன் சிலர் காணாமல்போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1,500ற்கும் மேற்பட்ட வீடுகள் அழிந்தன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த காட்டுத்தீ காரணமாக தென் கிழக்கு அவுஸ்திரேலிய பகுதிகளில் வெப்ப நிலை 48 பகை செல்சியசுக்கும் அதிகமாகியுள்ளது.

தீ, கடலோர நகரங்களை சுற்றிவளைத்துள்ளதால் அவை நாட்டின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டன.

இதையடுத்து, அந்தப் பகுதிக்கு நீரோ, உணவுப் பொருள்கள், எரிபொருள் ஆகிய அத்தியாவசியப் பொருள்களை அவுஸ்திரேலிய அரசு கடல் வழியாக விநியோகித்து வருகிறது. இதற்காக கடற்படைக் கப்பல்களும், இராணுவ விமானங்களும் பாதிக்கப்பட்ட நகரங்களுக்கு அருகிலுள்ள கடல் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன. தரையாலும் வான் வழியாலும் தீயை அணைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே பிரதமர் ஸ்காட் மோரீசன் நிருபர்களிடையே பேசுகையில், இதுவரை இல்லாத அளவுக்கு பேரழிவு புதிய நிலைக்கு சென்றுள்ளதை பார்க்க முடிகிறது. நிலைமை மோசமாகி வருவதால், நீங்கள் இப்போது வீடுகளுக்குள் எப்படி பாதுகாப்பாக இருக்க திட்டமிடப்போகிறீர்கள் என்பதுதான் இப்போதுள்ள ஒரே வழி. வீடுகளை விட்டு வெளியேறுவது இப்போதைக்கு ஆபத்தானது என்று கூறினார். பொதுமக்கள் வீடுகளுக்குள் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தீயை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு படைகள் அழைக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரம் படையினர் அழைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஸ்காட் மோரீசன் தெரிவித்தார். அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் ஜனவரி 13 முதல் 16ம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்ய இருந்தார். தற்போது அதை இரத்து செய்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், அவுஸ்திரேலியா முழுவதும் அழிவை ஏற்படுத்தும் காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது. மக்களை பாதுகாப்பதில் அரசு முழு கவனம் செலுத்தி வருகிறது. இதனால், எனது இந்தியா, ஜப்பான் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 18ம் பக்கம்

## கடும் வறட்சியால் நீர்த் திருட்டு

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணம், சிட்னி உள்ளிட்ட பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் அந்நாட்டு அரசு தண்ணீரை சிக்கனமாக உபயோகிப்பது குறித்து பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. பருவநிலை மாற்றம் காரணமாகவும், போதிய மழை இல்லாத காரணத்தினாலும் அங்கு குடிநீர் பற்றாக்குறை நிலவுகிறது. இந்நிலையில் வனப்பகுதிகளில் தொடர் தீ விபத்து தண்ணீருக்கான பற்றாக்குறையை இன்னும் அதிகரித்துள்ளது.

மேலும், குடிநீர் பற்றாக்குறை காரணமாக அங்கு பல்வேறு குற்ற சம்பவங்கள் நடைபெறுவது கண்டு காவல்துறையினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். சிட்னி நகருக்கு மேற்கே ஒரு குக்கிராமமான எவன்ஸ் ப்ளைன்ஸ் என்ற இடத்தில் ஒரு தண்ணீர் தொட்டியில் இருந்து 3 இலட்சம் லீற்றர் தண்ணீர் திருடப்பட்டுள்ளது. குடிநீர் பற்றாக்குறை காரணமாக அவுஸ்திரேலியாவின் சில பகுதிகளில் தண்ணீர் டாங்கிகள் வந்தால் கூட காவல்துறையினர் விசாரணை மேற்கொள்கின்றனர்.

நாட்டின் கடற்படை அதிகாரிகளும், சுங்க அதிகாரிகளும் துறைமுக நகரான மொண்டேவீடியோ நகர துறைமுகத்தில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர். அப்போது சந்தேகத்துக்கு இடமான வகையில் காட்சி




அளித்த சோயா மாவு பெட்டிகளை திறந்து பார்த்தபோது அதிர்ச்சியடைந்தனர். காரணம் அவற்றுக்குள் 4.4 தொன் நிறை கொண்ட கொகைன் போதைப்பொருள் பொதிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இந்த போதைப்பொருட்கள் மேற்கு ஆபிரிக்க நாடான டோகோவின் தலைநகரான லோமுக்கு கடத்த இருந்தது தெரியவந்தது. அவற்றை கடற்படை அதிகாரிகளும், சுங்க அதிகாரிகளும் கைப்பற்றி விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் சந்தை மதிப்பு சுமார் 1 பில்லியன் டொலர் என தகவல்கள் கூறுகின்றன. இது போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு பெருத்த பின்னடைவாக கருதப்படுகிறது. இலத்தீன் அமெரிக்காவில் இருந்து போதைப்பொருட்களை ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்துவதற்கு உருகுவேதான் மையமாக பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. கடந்த நவம்பர் மாதம் இதே மொண்டேவீடியோ நகரில் 3 தொன் கொகைன் போதைப்பொருள் கடத்தலை தடுத்து, பறிமுதல் செய்தது குறிப்பிடத்தக்கது.

## மேற்காசியப் பகுதிகளுக்கு படைகள்

### ஜப்பானின் முடிவிற்கு மக்கள் எதிர்ப்பு

மேற்காசிய பகுதிகளுக்கு ஜப்பான் படைகள் அனுப்பப்படுவதற்கு அந்நாட்டு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து டோக்கியோவிலுள்ள பிரதமர் இல்லத்துக்கு எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பதற்றம் நிலவி வரும் மேற்காசிய கடல் பகுதிகளுக்கு தனது படைகளை ஜப்பான் அனுப்பவுள்ளது. இதற்கான அனுமதியை



ஜப்பான் அமைச்சரவை அண்மையில் வழங்கியது. இந்நிலையிலேயே மக்கள் இந்த எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

மேற்காசிய கடல் பகுதிகளில் தங்களது சரக்குக் கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அந்தப் பகுதிகளுக்கு தங்களது படைகளை அனுப்ப ஜப்பான் திட்டமிட்டது. அந்தத் திட்டத்தின்படி, 260 கடற்படையினர், ஒரு தாக்குதல் போர்க் கப்பல், இரு பி–3சி வகை கண்காணிப்பு விமானங்களை அந்தப் பகுதிக்கு ஜப்பான் அனுப்பவிருக்கிறது.


ஓமன் வளைகுடா, அரபிக் கடல், பொப் எல்–மாண்டெப் நீரிணை ஆகிய பகுதிகளில் பிற நாடுகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நோக்கில் இந்தப் படைகள் மேற்காசியாவுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இதுகுறித்து அமைச்சரவை தலைமைச் செயலர் யோஹிடே சுகா கூறுகையில், மேற்காசியப் பகுதியில் பதற்றம் அதிகரித்து வரும் சூழலில், அந்தப் பகுதியியைக் கண்காணிக்கும் நமது திறனை மேம்படுத்த வேண்டியது அவசியமாகியுள்ளது. அதன் காரணமாகவே, அங்கு படையினரை அனுப்ப வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது

மசோதாவை அரசு திரும்பப் பெற்ற பிறகும், பல்வேறு ஜனநாயக சீர்திருத்தங்களை வலியுறுத்தி தொடர்ந்து நடைபெற்று வருகிறது குறிப்பிடத்தக்கது.

»»

மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் செல்லும் உலகின் அதிவேக தொடருந்து சேவை சீனாவில் கடந்த 30ம் திகதி தொடங்கப்பட்டுள்ளது. பெய்ஜிங் மற்றும் சாங்ஜியாகவ் நகரங்களுக்கு



இடையே இந்தத் தொடருந்து இயங்கும் வகையில் புதிய வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட சென்சார் கருவிகளுடன் தொடருந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. சாதாரண தொடருந்துகளை விட பல்வேறு மேம்படுத்தப்பட்ட நவீன வசதிகள் இந்த அதிவேக தொடருந்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சீன அரசுத் தலைவர் ஷிச்சின்பிங் இது பற்றிய வாழ்த்துச் செய்தியில், பெய்ஜிங் – சாங்ஜியாகவ் இரும்புப் பாதை சீனாவின் இரும்புப்பாதை கட்டுமானத்தின் வளர்ச்சியை மட்டுமல்லாமல், நாட்டின் ஒட்டுமொத்த ஆற்றலின் அதிகரிப்பையும் வெளிக்காட்டுகின்றது என்று தெரிவித்துள்ளார். பெய்ஜிங்–சாங் ச்சியாகாவ் உயர்வேக இரும்புப் பாதை என்பது 2020 பெய்ஜிங் குளிர் கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கான முக்கிய திட்டப்பணிகளில் ஒன்றாகும்.

»»

உலகிலேயே வயதான காண்டா மிருகம் என்ற பெயரை தான்சானியா நாட்டில் வனவிலங்கு புகலிடத்தில் வசித்து வந்த பாஸ்டா என்ற பெண் காண்டா மிருகம் பெற்றிருந்தது. இந்த காண்டா மிருகத்துக்கு வயது 57. இந்த காண்டாமிருகம் 3 வயதாக இருந்த போது, 1965ம் ஆண்டு, நொகோரோங்கோரோ பள்ளம் என்ற இடத்தில் முதன் முதலாக காணப்பட்டது. 54 ஆண்டு காலம் அந்தப்பகுதியிலேயே அது சுற்றித் திரிந்து வந்தது. வயதான காலத்தில் நோய்களால் அவதியுற்று வந்த அந்த காண்டாமிருகம் வனவிலங்கு புகலிடத்



துக்கு கொண்டு வரப்பட்டு, சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த 27ம் திகதியன்று அந்த காண்டாமிருகம் வயோதிகத்தாலும், உடல்நலக்குறைவாலும் மரணமடைந்தது. இந்த காண்டாமிருகம் தன் வாழ் நாளில் ஒரு குட்டியைக் கூட போட்டது இல்லை என்றும் அதுவே அதன் நீண்ட ஆயுளுக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். பொதுவாக காண்டா மிருகங்கள் 37 வயது முதல் 43 வயது வரை வாழ முடியும். அதே நேரத்தில் ஒரு இடத்தில் வைத்து நன்றாக பராமரித்து வந்தால் 50 ஆண்டு காலம்கூட வசிக்குமாம்.

»»»

முகநூல் பயன்பாட்டாளர்கள் தொடர்பான விவரங்களை முறைகேடாகப் பகிர்ந்த குற்றத்துக்காக, அந்த வலைதள நிறுவனத்துக்கு பிரேசில் அரசு 16.5 இலட்சம் டொலர் அபராதம் விதித்துள்ளது. ''திஸ் இஸ் யுவர் டிஜிடல் லைஃப்' என்ற மென்பொருள் மூலம் செயலி உருவாக்குபவர்கள் பிரேசிலைச் சேர்ந்த 4.43 இலட்சம் பயனாளர்கள் குறித்த விவரங்களைப் பெறுவதற்கு வழிவகை செய்ததற்காக முகநூலுக்கு இந்த அபராதம் விதிக்கப்படுவதாக அந்த நாட்டு நீதித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

»»»

தாய்வானின் முப்படை தளபதி ஷென் யி மிங் (62 வயது) உள்பட 13 பேருடன் தாய்வான் இராணுவத்துக்குச் சொந்தமான உலங்குவானூர்தி, வடகிழக்கு



பகுதியில் உள்ள இலான் மாகாணத்துக்கு சென்று கொண்டிருந்த போது, புறப்பட்ட சிறிது நேரத்தில் தடுமாறிய நிலையில் தாய்வானின் மலைப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், மூத்த இராணுவ அதிகாரி உள்பட 8 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

»»»

பிரான்ஸ் தலைநகரமான பரிசின் புறநகரான வீல்யுயிப் பகுதியிலுள்ள பூங்கா ஒன்றில் இனம்தெரியாத நபர் ஒருவர் கத்தி குத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளார். கத்தி குத்து தாக்குதலுக்குள்ளாகி சுமார் நான்கு பேர் வரையில் படுகாயம் அடைந்துள்ளனர். உடனடியாக அவ்விடத்திற்கு வந்த காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

»»»

சீனாவுடனான வர்த்தகப் பதற்றத்தைத் தணிப்பதற்காக, அந்த நாட்டுடன் ஜனவரி மாதம் 15ம் திகதி முதல்கட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திடவிருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். இதுகுறித்து சுட்டுரை (டுவிட்டர்) வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது: சீனாவுடனான முதல் கட்ட வர்த்தக ஒப்பந்தத்தில் அனைத்து



பிரச்னைகளுக்குமான தீர்வுகள் அடங்கிய, முதல்கட்ட வர்த்தக ஒப்பந்தத்தில் ஜனவரி மாதம் 15ம் திகதி கையெழுத்திடவிருக்கிறேன். அதற்கான நிகழ்ச்சி வெள்ளை மாளிகையில் நடைபெறும். சீனாவின் உயர்நிலை பிரதிநிதிகள் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள். அதனைத் தொடர்ந்து, இன்னொரு நாளில் நான் சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்வேன் என்று தனது சுட்டுரைப் பதிவில் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

என்றார்.

மேலும், எரிசக்தித் தேவைக்கு எண்ணெய் இறக்குமதியை ஜப்பான் நம்பியுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஏற்கனவே, அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையிலான மோதலால் மேற்காசிய கடல் பகுதியில் பதற்றம் நீடித்து வருகிறது. இந்த நிலையில் அங்கு ஜப்பானும் படைகளை அனுப்புவது பதற்றத்தை மேலும் அதிகரிக்கலாம் என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவின் இராணுவ கூட்டாளியாக இருந்தாலும், மேற்காசிய கடல்பகுதி பாதுகாப்புக்காக அமெரிக்கா அமைத்துள்ள கூட்டுப் படையில் ஜப்பான் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய ஒன்றிய துணைத் தலைவரின் காதல் கடிதம் வெளியாகியது

பிரெக்சிட் ஒப்பந்தம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய துணைத் தலைவர் பிரித்தானியாவிற்கு எழுதிய காதல் கடிதம் வெளியாகியுள்ளது. பிரெக்ஸிட் ஒப்பந்தத்தை நிறைவேற்றி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேற்றுவதற்காக, போரிஸ் ஜோன்சன் தலைமையிலான அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமையகத்தின் துணைத் தலைவர் ஃப்ரான்ஸ் டிமொர்மான்ஸ் பிரித்தானிய அரசுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

'பிரித்தானியாவிற்கு எனது காதல் கடிதம்: குடும்ப உறவுகளை ஒருபோதும் துண்டிக்க முடியாது' என்ற தலைப்பில் அந்த கடிதத்தை அவர் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது, பிரித்தானியாவை நான் மிகவும் விரும்புகிறேன். அது உங்களுக்கும் நன்றாக தெரியும். ஒரு பழைய காதலன் போல, உங்கள் பலம் மற்றும் பலவீனம் எல்லாவற்றையும் நான் அறிவேன். நீங்கள் இப்போது விலகிச் செல்ல முடிவு செய்திருக்கிறீர்கள். அது மிகவும் வேதனையளிப்பதாக இருந்தாலும், அந்த முடிவை நான் மதிக்கிறேன்.

நாங்கள் எங்கும் விலகிச் செல்லவில்லை. திரும்பி வருவதாக இருந்தால் நீங்கள் எப்போதும் வரவேற்கப்படுவீர்கள் என்று அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களால் பிரெக்ஸிட் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, அடுத்த ஆண்டு ஜனவரி 31ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## சீனாவின் அடக்குமுறைக்கு எதிராக உண்மையின் சக்தியால் போராடுவோம் - தலாய் லாமா

சீனாவின் அடக்குமுறைக்கு எதிராக உண்மையின் சக்தியால் தொடர்ந்து போராடுவோம் என்று திபெத்திய பௌத்த மதத் தலைவர் தலாய் லாமா கூறியுள்ளார். இந்தியாவின் பிகாரிலுள்ள புத்த கயை நகரிலுள்ள மகாபோதி கோயிலுக்கு ஆண்டுதோறும் இரு வார கால பயணமாக தலாய் லாமா செல்வது வழக்கம். அதன்படி, புத்த கயைக்கு அவர் கடந்த மாதம் சென்றிருந்தார்.

அங்கு செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆயுத பலத்துடன் உள்ள சீனாவுக்கு எதிராக, உண்மையின் சக்தியால் தொடர்ந்து போராடுவோம். சீனாவில் 3 ஆண்டுகளுக்கு முன் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், அங்கு திபெத்திய பௌத்தர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. சீனாவானது பாரம்பரிய அடிப்படையில் ஒரு பௌத்த நாடாகும். அங்கு பல மதங்களை பின்பற்றுபவர்கள் இருந்தபோதிலும், பௌத்த மதத்தினர் அதிகம் உள்ளனர். பெரும்பாலான மக்கள், திபெத்திய பௌத்த மதத்தை பின்பற்றுகின்றனர். சீன பல்கலைக்கழகங்களில் திபெத்திய பௌத்த மத ஆய்வாளர்கள் ஏராளமாக உள்ளனர்.

தலாய் லாமா வருகையையொட்டி, கயை மாவட்டம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவரது பயணம் நிறைவடையும் வரை இந்த பாதுகாப்பு நடைமுறையில் இருந்தது. கடந்த ஆண்டு ஜனவரியில் புத்த கயையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலாய் லாமா பங்கேற்றிருந்தார். அவர் உரையாற்றிவிட்டு சென்ற பிறகு, அப்பகுதியில் சக்தி குறைந்த வெடிகுண்டு வெடித்தது குறிப்பிடத்தக்கது.

## மென்று துப்பிய சுவிங்கம் 5700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெண்ணை அடையாளம் காட்டியது!

மென்று துப்பிய சுவிங்கம்மில் இருந்த பற்களின் அடையாளத்தை வைத்து 5700 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெண்ணின் உருவம் வெளியிடப்பட்டுள்ளது. கடித்து துப்பிய சுவிங்கம்மில் உள்ள பற்களின் அடையாளத்தை வைத்தே அது ஆணா, பெண்ணா? எப்படி இருப்பார்? எத்தனை ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார்? என்பதை கணக்கிடும் அளவிற்கு தொழில்நுட்பம் அசுர வளர்ச்சி அடைந்துள்ளது. ஸ்காண்டிநேவியாவில ஒரு சுவிங்கம் கண்டெடுக்கப்பட்டது. கறுப்பு நிறத்தில் இருந்த அந்த சுவிங்கம்மில் பற்களின் தடயங்கள் இருந்தன. இதையடுத்து அந்த மரபணு நுண்ணுயிரிகளை வைத்து 5700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு பெண்ணின் படத்தை வெளியிட்டுள்ளனர். அதாவது அந்த பெண் நியோலித்திக் காலத்தை சேர்ந்தவர். கம்பீர காட்சி வசீகரிக்கும் கண்களுடன் மிகவும் கம்பீரமாக காட்சி அளிக்கும் அந்த பெண்ணின் படம் குறித்து கோபன்ஹாகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் ஹேன்ஸ் ஸ்ரோடர் கூறுகையில், இந்த சுவிங்கமானது மரத்திலிருந்து எடுக்கப்படும் பசையாகும். இந்த பசை முன்னோர்களின் மரபணுக்களை கண்டறிய உதவியது. இது விலை மதிப்பில்லாதது. பால்டிக் கடல் பகுதி அந்த பெண்ணின் மரபணுவை வைத்து அவர் ஐரோப்பாவின் மத்திய பகுதியில் ஸ்காண்டிநேவியாவில் வேட்டையாடும் பெண் என தெரியவருகிறது. அவரது முகம் கறுப்பாக இருந்திருக்கும். முடியோ கருஞ்சிவப்பு நிறமாக இருந்திருக்கும். அத்துடன் அவரது கண்களோ நீல நிறத்தில் இருந்திருக்கும். அந்த பெண் டென்மார்க்கில் உள்ள பால்டிக் கடல் பகுதியில் லோலாந்து தீவில் வசித்திருக்கலாம். இதனால் பேராசிரியர் குழு அந்த பெண்ணுக்கு லோலா என பெயரிட்டுள்ளது.



அவரது உணவாக வாத்து மற்றும் ஹசல் நட்ஸ் இருந்திருக்கும். அது சரியாக ஜீரணமாகாததற்கான அறிகுறிகள் இருந்தன. இந்த சுவிங்கம்மை இவர் பல் வலி மற்றும் மற்ற நோய் சிகிச்சைக்காகவும் பயன்படுத்தியிருக்கலாம் என அந்த பேராசிரியர் கூறினார். சுவிங்கம்மில் உள்ள பற்களின் அடையாளத்தை வைத்தே இத்தனை தகவல்களை வெளியிட்டுள்ளது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

## குழந்தைகளுக்கு மரபணு மாற்றும் சீன ஆராய்ச்சியாளருக்கு 3 ஆண்டு சிறை



கருவிலிருந்த சிசுக்களின் மரபணுவை மாற்றிய விவகாரம் தொடர்பாக சீன ஆராய்ச்சியாளருக்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஹெச்ஐவி எய்ட்ஸ் வைரஸ் தாக்க முடியாத வகையில் பெண்களின் கருவிலிருந்த குழந்தைகளின் மரபணுவை மாற்றிவிட்டதாகவும், இந்த முயற்சியில் 3 குழந்தைகள் பிறந்ததாகவும் சீன ஆராய்ச்சியாளர் ஹி ஜியான்குய் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அறிவித்தார். இதில் இரட்டைப் பெண் குழந்தைகளும் அடங்கும். எய்ட்ஸ் நோயை உருவாக்கும் எச்ஐவி கிருமியை எதிர் கொள்ளக்கூடிய மரபணுவை உருவாக்குவதற்காக இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டதாக ஹி ஜியான்குய் தெரிவித்திருந்தார். மரபணு மாற்றப்பட்ட பயிர்களுக்கே உலகின் பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், அவரது அறிவிப்பு சர்வதேச அளவில் ஆராய்ச்சியாளர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து, சட்டவிரோத மருத்துவ நடைமுறைகளைக் கையாண்டதற்காக ஹி ஜியான்குய் உள்ளிட்ட மூன்று பேர் மீது காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்தனர். இவர்கள் முறையாக மருத்துவம் பயிலாமல் சட்டவிரோதமாக மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், 3 ஆராய்ச்சியாளர்களும் மருத்துவருக்கான தகுதியை பெற்றிருக்கவில்லை. இவர்கள் புகழ் மற்றும் இலாப நோக்கத்துடன் இந்த ஆராய்ச்சியை செய்துள்ளனர். ஆராய்ச்சி குறித்த சீனாவின் விதிமுறைகளை மீறியுள்ளனர். அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மருத்துவம் இரண்டிலுமே இவர்கள் உரிய நெறிமுறைகளை பின்பற்றவில்லை என்று தெரிவித்து, அவர்கள் மீதான குற்றச்சாட்டை உறுதிசெய்தது. மேலும், அரசின் முறையாக விதிமுறைகளை பின்பற்றாமல் சட்டவிரோதமாக மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஹி ஜியான்குய்க்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனையும், ஐந்து இலட்சம் யுவான் (64 ஆயிரம் ஈரோக்கள்) அபராதமும் விதிக்கப்பட்டது. அவருக்கு உதவிபுரிந்த ஆராய்ச்சியாளார்கள் இருவரில் ஒருவருக்கு 2 ஆண்டு சிறை தண்டனையும், மற்றொருவருக்கு 18 மாதங்கள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.


உளம்கனிந்த தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்
உங்கள் உணவகங்கள் சமையல் அறைகளிற்குத் தேவையான
றைஸ் குக்கர் முதல் அனைத்து விதமான பைகள் வரை லாச்சப்பல் அருகில் ஒரே இடத்தில்
EURO RESTO SERVICE
உணவு விடுதிகளிற்கான
உபகரணங்கள் மற்றும் உடைகள்
பாதுகாப்பான
எலி மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள்
இல்ல வைபவங்களிற்கான
பொருட்கள்
அங்கீகரிக்கப்பட்ட
சொப்பிங் பாக்குகள்
மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
245, RUE DU FBG SAINT MARTIN - 75010 PARIS
TÉL.: 01 40 36 00 09 / 06 68 67 15 55
M°: Louis Blanc


உளம்கனிந்த தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்
MALA
மாலா
மளிகை
69€90
ற்குப்
பொருட்கள் வாங்கினால்
இலவசம்
இச் சலுகை
ஜனவரி 10 முதல் 14 வரை
மட்டுமே
தமிழ்ப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
2050
அனைத்து
மளிகைப் பொருட்களும்
ஒரே இடத்தில் - உயர் தரத்தில்
வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையில்
பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
மலிவிற்கு மறுபெயர் மாலா
60 rue Louis Blanc -75010 Paris. Tel: 01 40 34 42 49



# 2019ல் உல

**பிரான்ஸ் மஞ்சள் அங்கிப் போராட்டம், ஓய்வூதிய சட்டத் திருத்தத்திற்கு எதிரான போராட்டம், ஹொங்கொக் நாடு கடத்தலுக்கு எதிரான போராட்டம், தொடர்ந்து சீர்திருத்தப் போராட்டம், ஈராக்கில் வேலைவாய்ப்பு, ஊழல் ஆகிய வற்றுக்கு எதிராகவும், அரசியல் சீர்திருத்தங்களை வலியுறுத்தியும் தொடரும் போராட்டம், ஈரானில் பொருளாதார மந்த நிலையை சமாளிக்க முடியாமல் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதற்கு எதிராக கொழுந்து விட்டெரியும் போராட்டம், இலங்கையில் காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தருமாறு கோரி நடைபெறும் போராட்டம், மற்றும் தென் அமெரிக்க நாடுகளான சிலி, பொலிவியா, பிரேசில், நிகராகுவா என அரசுக்கு எதிராக தொடரும் போராட்டம் என உலகின் பெரும்பாலான நாடுகள் பெரும் போராட்டங்களை எதிர்கொண்ட ஆண்டாக 2019 அமைந்துள்ளது.**

**அத்துடன், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே அதிகரித்த போர் பதற்றம், அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகப் போர், வட கொரிய - அமெரிக்கா அணுசக்தி பேச்சுவார்த்தை தோற்றுப்போனதால் எழுந்த அச்சுறுத்தல், சிரியாவில் குர்துக்களுக்கு வழங்கிய ஆதரவைக் கைவிட்டு அமெரிக்கா ஒதுங்கியதால் துருக்கி குர்துக்களுக்கு எதிராக தொடுத்த போர் பதட்டம், இலங்கையில் மீண்டும் இனப்படுகொலையாளிகளின் குடும்பம் சிறீலங்காவின் ஆட்சிக் கதிரையில் அமர்ந்ததால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல், பிரேசிலில் அமேசான் காடுகள் பற்றி எரிந்ததால், அவுஸ்திரேலியாவில் இன்னமும் காடுகள் பற்றி எரிந்து கொண்டிருப்பதால் இயற்கைக்கு ஏற்பட்ட ஆபத்துக்குறித்த அச்சமும், ஸ்பெயின் பருவநிலை மாநாடு தோற்றுப்போனதால் ஏற்பட்ட அச்சமும் என பெரும் பதட்டத்துடனேயே 2019ம் ஆண்டு கடந்துள்ளது.**

**இந்நிலையில், இந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா நிரந்தரமாகப் பிரியுமா, நவம்பர் மாதம் மீண்டும் டொனால்ட் டிரம்ப் மீண்டும் அமெரிக்க அதிபராகி இந்த உலகத்தை மீண்டும் பதட்டத்திற்குள்ளேயே வைத்திருப்பாரா என்ற எதிர்பார்ப்புக்களுடன் பிறந்துள்ளது. இந்த வேளையில் கடந்த ஆண்டு நிகழ்ந்த சில முக்கிய நிகழ்வுகளை இங்கே பார்ப்போம்...**

**ஜனவரி**

*03:* பூமியிலிருந்து பார்க்க முடியாத நிலவின் பின் பகுதியில், சீனாவின் விண்கலம் முதல் முறையாக தரையிறங்கி சாதனை படைத்தது. மேலும், இதுவரை அறியப்படாத அந்தப் பகுதியின் படங்களையும் அந்த விண்கலம் முதல் முறையாக பூமிக்கு அனுப்பியது.

*07:* வங்கதேச நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற அவாமி லீக் கட்சித் தலைவர் ஷேக் ஹசீனா, 4வது முறையாக அந்த நாட்டின் பிரதமராகப் பதவியேற்று சாதனை படைத்தார்.

**பெப்ரவரி**

*11:* தனது கனவுத் திட்டமான மெக்சிக்கோ எல்லைச் சுவரை எழுப்புவதற்கு நாடாளுமன்ற அனுமதி இல்லாமலேயே நிதி ஒதுக்கீடு செய்வதற்காக, அமெரிக்காவில் அதிபர் டொனால்ட் டிரம்ப் அவசர நிலை அறிவித்தார்.

**மார்ச்**

*10:* எதியோப்பியன் எயார் லைன்சுக்குச் சொந்தமான போயிங் 737 மேக்ஸ் ரக விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் விழுந்து நொறுங்கியதில், அதில் பயணம் செய்த 157 பேரும் உயிரிழந்தனர். ஏற்கனவே, இதே ரகத்தைச் சேர்ந்த இந்தோனேசியாவின் லயன் ஏர் விமானமும் 2018ம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி 189 பேர் உயிரிழந்த நிலையில், இந்த விபத்தைத் தொடர்ந்து உலகம் முழுவதும் போயிங் 737 மேக்ஸ் ரக விமானங்களின் பயன்பாடு நிறுத்திவைக்கப்பட்டது. தற்போது அதன் தயாரிப்பும் நிறுத்தப்பட்டுள்ளது.

*15:* நியூசிலாந்தின் கிரைஸ்ட்சர்ச் நகரில் பிரெண்டன் டாரண்ட் என்ற வெள்ளை இனவாதி இரு மசூதிகளில் அடுத்தடுத்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 51 முஸ்லிம்கள் பலியாகினர். தாக்குதல் நடத்திய பிரெண்டன் கைது செய்யப்பட்டு, அவர் மீது தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

*25:* ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவதற்காக, அந்த அமைப்புடன் பிரதமர் தெரசா மே மேற்கொண்ட செயல்திட்ட ஒப்பந்தத்தை பிரித்தானிய நாடாளுமன்றம் 3வது முறையாக நிராகரித்தது. அதையடுத்து இந்த விவகாரத்தில் சிக்கல் மேலும் அதிகமானது.

**ஏப்ரல்**

*10:* அறிவியல் முன்னேற்றத்தின் ஒரு திருப்புமுனையாக, பால்வெளி மண்டலத்தில் உள்ள மேசியர்-87 என்றழைக்கப்படும் கருந்துளையை விஞ்ஞானிகள் முதல் முறையாக படம் பிடித்து சாதனை படைத்தனர்.

*10:* இஸ்ரேல் நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் அதிபர் பெஞ்சமின் நெதன்யாகுவின் கட்சி 4வது முறையாக அதிக இடங்களைப் பிடித்து சாதனை படைத்தது. ஆனாலும் ஆட்சியமைக்க போதியதாக இது இருக்கவில்லை.

*11:* இலண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் 7 ஆண்டுகளாகத் தஞ்சமடைந்திருந்த விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே, பிரித்தானியக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

*11:* சூடானில் 30 ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சி செலுத்தி வந்த அதிபர் ஒமல் அல்-பஷிருக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, அவரை இராணுவம் ஆட்சியிலிருந்து அகற்றியது.

*21:* ஈஸ்டர் பண்டிகையின்போது இலங்கையின் 3 தேவாலயங்கள் மற்றும் 3 நட்சத்திர விடுதிகளில், நடத்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதல்களில் 359 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) அமைப்பு பொறுப்பேற்றது.

**மே**

*10:* அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஏற்கெனவே எச்சரித்தபடி, 20,000 கோடி டொலர் மதிப்பிலான சீனப் பொருள்கள் மீது 25 சதவீத கூடுதல் இறக்குமதி வரி விதித்தார். இது, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் போர்ப் பதற்றத்தை அதிகரித்தது.

*31:* வர்த்தக சலுகை பெறும் நாடுகளின் பட்டியலில் இருந்து இந்தியாவை நீக்கும் உத்தரவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டார்.

**யூன்**

*7:* பிரெக்ஸிட் இழுபறிக்கு தீர்வு காண முடியாததை ஒப்புக் கொண்ட பிரித்தானியப் பிரதமர் தெரசா மே, தனது பதவியை விட்டு விலகினார்.

*9:* ஹொங்கொங்கில் கைது செய்யப்பட்டவர்களை சீனாவுக்கு நாடு கடத்த வகை செய்யும் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நகரில் மாபெரும் போராட்டங்கள் தொடங்கின. அந்தச் சட்டம் மீளப்பெறப்பட்டபோதும் ஆறு மாதங்களுக்கு மேலாக இந்தப் போராட்டம் தொடர்கின்றது.

*10:* ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் அதிபரும், மறைந்த முன்னாள் பிரதமர் பேநசீர் புட்டோவின் கணவருமான ஆசிஃப் அலி ஜர்தாரி கைது செய்யப்பட்டார்.

*24:* பிரித்தானியாவில் தெரசா மே பதவி விலகலைத் தொடர்ந்து, முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் போரிஸ் ஜோன்ஸன் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றார்.



**யூலை**

*24:* காஷ்மீரிலும், ஆப்கானிஸ்தானிலும் தாக்குதல் நடத்துவதற்காக பாகிஸ்தானில் 30,000 முதல் 40,000 பேர் வரையிலானவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும், அதனை முந்தைய அரசுகள் மறைத்து வந்ததாகவும் அந்த நாட்டின் பிரதமர் இம்ரான் கான் முதல் முறையாக வெளிப்படையாகத் தெரிவித்தார்.

## 2019ம் ஆண்டு சில முக்கிய நிகழ்வுகள்

**01. குறுகிய மற்றும் நடுத்தர தூர அணு ஆயுத ஏவுகணைகளுக்குத் தடை விதிக்கும் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்காவும் ரஷ்யாவும் விலகின. இதனால், சர்வதேச இராணுவக் கட்டுப்பாட்டு அமைப்புமுறைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டமை.**

**02. பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகும் போக்கில் பல உறுதியற்ற காரணிகள் காணப்பட்டதால், ஐரோப்பிய ஒருமைப்பாட்டின் போக்கில் மாபெரும் பாதிப்பு ஏற்பட்டமை.**

**03. கருந்துளை தொடர்பான நிழற்படத்தை மனித குலம் முதன்முறையாகப் பெற்றது. புகழ்பெற்ற அறிவியலாளரான அல்பேர்ட் ஐன்ஸ்டைன் முன்வைத்த பொதுச் சார்புக் கோட்பாட்டை இது நிரூபித்தது.**

**04. உலகளவில் வெப்ப அளவு வரலாற்றில் மிக அதிகமாகப் பதிவாகியுள்ளது. இது தொடர்பாக, மட்ரிட் நகரில் நடைபெற்ற ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டில் முக்கிய பொது கருத்து காணப்பட்டது.**




**05. ஆபிரிக்கக் கண்ட தடையில்லா வர்த்தக மண்டலம் நிறுவப்பட்டது. இது, ஆபிரிக்காவில் புதிய பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகளைக் கொண்டு வந்துள்ளது.**

**06. பிரான்சின் தலைநகர் பரிசில் அமைந்துள்ள மிகப் பழைமை வாய்ந்த நோத்ர டாம் தேவாலயம் கடும் தீ விபத்தில் எரிந்தழிந்தது. அதனையடுத்து உலகப் பண்பாட்டுச் செல்வங்களை எவ்வாறு பாதுகாப்பது என்னும் கருத்து, உலகளவில் கவனத்தை ஈர்த்தது.**

**மிகப் பழமையான நோத்ர டாம் தேவாலயத்தில் கடந்த 200 ஆண்டுகளில் அதாவது 1803ம் ஆண்டுக்குப் பிறகு, முதல் முறையாக இந்த ஆண்டு நத்தார் பிரார்த்தனை நடைபெறவில்லை. 850 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்தத் தேவாலயத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த தீ விபத்து காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.**

# கம்




## 2019ல் உலக அணு ஆயுத பலம்

***2019ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கின்படி உலகில் சுமார் 14 ஆயிரம் அணு ஆயுதங்கள் உள்ளன. இவற்றில் 90 வீதமானவை அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளிடம் மட்டும் உள்ளன. நாடுகள் வசமுள்ள அணு ஆயுதங்களை படத்தில் பார்க்கவும்.***

**ஓகஸ்ட்**

*01:* அல்-காய்தா தலைவர் பின்லேடனின் மகனும், அந்த பயங்கரவாத அமைப்பில் பின்லேடனின் வாரிசுமான ஹம்ஸா பின்லேடன், ஆப்கன்-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தாங்கள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டதை அமெரிக்கா உறுதி செய்தது.

*17:* சூடானில் இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வரலாற்று சிறப்பு மிக்க அதிகார பரவல் ஒப்பந்தத்தில் ஆளும் இராணுவ சபையும், ஜனநாயக இயக்கத்தினரும் கையெழுத்திட்டனர்.

**செப்டம்பர்**

*27:* சவூதி அரேபியாவுக்கு சுற்றுலா வருவதற்கான நுழைவு இசைவுகளை (விசா) முதல் முறையாக வழங்கவிருப்பதாக அந்த நாடு அறிவித்தது.

**ஒக்டோபர்**

*01:* ஈராக்கில் வேலைவாய்ப்பை வலியுறுத்தியும், ஊழலுக்கு எதிராகவும் ஆயிரக்கணக்கானவர்கள் போராட்டத்தைத் தொடங்கினர்.

*09:* சிரியாவில் குர்துப் படையினர் கட்டுப்பாட்டில் உள்ள வடகிழக்குப் பகுதியிலிருந்து அமெரிக்கப் படையினரை திரும்ப அழைக்கப் போவதாக அதிபர் டிரம்ப் அறிவித்ததைத் தொடர்ந்து, அந்தப் பகுதியிலிருந்து குர்துகளை வெளியேற்றும் நோக்கில் அண்டை நாடான துருக்கி, குர்து நிலைகள் மீது வான்வழித் தாக்குதலைத் தொடங்கியது.

*13:* துருக்கிப் படையினருக்கும், குர்துகளுக்கும் இடையிலான மோதலைப் பயன்படுத்தி, குர்துகள் கட்டுப்பாட்டிலிருந்து நூற்றுக்கணக்கான இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாத ஆதரவாளர்கள் தப்பிச் சென்றனர்.

*17:* அக்டோபர் 31ம் திகதிக்குள் பிரெக்ஸிட்டை நிறைவேற்ற ஐரோப்பிய ஒன்றியமும், பிரித்தானியாவும் ஒப்புக் கொண்டன. எனினும், அந்த கெடு திகதி 2020 ஜனவரி 31ம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

*18:* அமெரிக்க விண்வெளி வீராங்கனைகளான கிறிஸ்டினா கோச், ஜெஸிகா மீர் ஆகிய இருவரும் விண்வெளியில் நடந்து சாதனை படைத்தனர். பெண்களே விண்வெளியில் நடந்து பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டது விண்வெளி ஆய்வு வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

*23:* ஹொங்கொங்கில் பல மாதங்களாக போராட்டம் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்த நாடுகடத்தல் மசோதாவை அந்த நகர அரசு அதிகாரபூர்மாக திரும்பப் பெற்றது. எனினும், நேரடி தேர்தல், தலைமை நிர்வாகி கேரி லாமின் பதவி விலகல், அடக்குமுறையில் ஈடுபட்ட காவல்துறையினர் மீது நடவடிக்கை உள்ளிட்ட 5 அம்சங்களை வலியுறுத்தி ஜனநாயக ஆதரவாளர்கள் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

*27:* இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாத அமைப்பின் தலைவர் அபு பக்கர் அல்-பாக்தாதி, தங்களது தாக்குதலில் கொல்லப்பட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

**நவம்பர்**

*17:* இலங்கையில் நடைபெற்ற சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் மீதான இனப்படுகொலையை முன்னின்று நடத்தி



யவரும், இனப்படுகொலைக்கு தலைமை தாங்கியவருமான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரரும், சிறீலங்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபய ராஜபக்ச வெற்றி பெற்றார்.

*20:* தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க தனது பதவியை விட்டு விலகினார். புதிய பிரதமராக மகிந்த ராஜபக்சவை, கோத்தபய ராஜபக்ச நியமித்தார். இதன் மூலம் அண்ணனும், தம்பியும் ஆட்சி செய்யும் உலகின் முதல் நாடு என்ற பெருமையை சிறீலங்கா பெற்றது.

**டிசெம்பர்**

*01:* ஈராக்கில் தொடர்ந்து நடைபெற்று வந்த வன்முறைப் போராட்டங்களின் எதிரொலியாக, தனது பிரதமர் பதவியை விட்டு அடெல் அப்துல் மஹதி விலகினார்.

*09:* உக்ரைனில் நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்காக, அந்நாட்டு அதிபர் வொலோதிமிர் ஸெலன்ஸ்கியும், ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டினும் முதல் முறையாக நேரடியாகச் சந்தித்துப் பேசியுள்ளனர். இந்தச் சந்திப்பு பிரான்சில் நடைபெற்றது. பிரான்ஸ் - ஜேர்மனி தலைவர்களின் ஏற்பாட்டின் மத்தியத்துடன் இந்தப் பேச்சுக்கள் நடந்தன.

*13:* பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் பிரதமர் போரிஸ் ஜோன்ஸன் தலைமையிலான பழமைவாதக் (கொன்சர்வேடிவ்) கட்சி அபார வெற்றி பெற்றது.

*13:* அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையிலான வர்த்தகப் போர்ப் பதற்றத்தைத் தணிப்பதற்காக, இரு நாடுகளுக்கும் இடையே முதல்கட்ட வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானதாக அறிவிக்கப்பட்டது.

*15:* பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பரிஸ் ஒப்பந்தத்தை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக, ஸ்பெயினின் மேட்ரிட் நகரில் 2 வாரங்களாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தை, முக்கிய முடிவுகள் எட்டப்படாமல் முடிவடைந்தது.

*17:* பாகிஸ்தானில் தனது ஆட்சிக் காலத்தின்போது முன்னாள் அதிபர் முஷ்ரஃப் அவசர நிலை அறிவித்தது தொடர்பாக நடைபெற்று வந்த தேசத் துரோக வழக்கில், அவருக்கு மரண தண்டனை விதித்து இஸ்லாமாபாத் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

*18:* அமெரிக்க முன்னாள் துணை அதிபர் ஜோ பிடன், உக்ரைனில் செய்து வரும் தொழில் தொடர்பாக அவர் மீது ஊழல் விசாரணை நடத்த வேண்டுமென்று உக்ரைன் அரசுக்கு அதிபர் டொனால்ட் நெருக்கடி கொடுத்ததாகக் கூறப்படும் விவகாரத்தில், எதிர்க்கட்சியினர் பெரும்பான்மை வகிக்கும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் கீழவை டிரம்ப்பை பதவிநீக்கம் செய்வதற்கான தீர்மானங்களை நிறைவேற்றியது. அமெரிக்க வரலாற்றில் கீழவையால் அதிபர் பதவி நீக்கம் செய்யப்பட்டது இது 3வது முறையாகும்.

## 2019ல் விமான விபத்துக்களில் 257 பேர் பலி!

2019ம் ஆண்டில் உலக அளவில் இடம்பெற்ற பயணிகள் விமான விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையானது குறைவடைந்துள்ளதாக நெதர்லாந்து விமான சேவையொன்று நடத்திய ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளது. 2018ம் ஆண்டில் 13 கோர விபத்துக்கள் உட்பட மொத்தமாக 160 விமான விபத்துக்கள் இடம்பெற்றன. இதில் 534 பேர் உயிரிழந்திருந்தனர். இந் நிலையில் 2019ம் ஆண்டு 8 கோர விபத்துக்கள் உட்பட மொத்தமாக 86 விமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதில் சிக்குண்டு 257 பேர் உயிரிழந்தும் உள்ளனர். 2019ம் ஆண்டில் மிகவும் மோசமான விமான விபத்தாக மார்ச் 10ம் திகதி எத்தியோப்பியாவில் இடம்பெற்ற போயிங் 737 மெக்ஸ் விமானம் விபத்து பதிவாகியுள்ளது. இந்த விபத்தில் 157 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் உள்ள ஷெரெமெட்டியோ விமான நிலையத்தில் விமானம் ஒன்று தரையிறங்கும்போது தீப் பிடித்து எரிந்ததில் 41 பேர் உயிரிழந்தமையும் கோர விபத்தாக பதிவாகியுள்ளது.

இதேவேளை 2005ம் ஆண்டில் உலக அளவில் இடம்பெற்ற பயணிகள் விமான விபத்துக்களில் 1000ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதே நேரம் 2017ம் ஆண்டில் உலக அளவில் இடம்பெற்ற பயணிகள் விமான விபத்துக்களில் 13 பேர் மாத்திரம் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புகைக்கும் ஆண்கள் குறைகிறது உலக சுகாதார அமைப்பு மகிழ்ச்சி

உலக அளவில் புகையிலை பயன்படுத்தும் ஆண்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக உலக சுகாதார அமைப்பு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், சிகரெட், பீடி, சுருட்டு, மெல்லக் கூடிய புகையிலை போன்றவற்றைப் பயன்படுத்தும் ஆண்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக குறையத் தொடங்கியுள்ளது. புகையிலை பயன்படுத்தும் 4ல் 3 பேர் ஆண்கள் என்ற நிலையில் அவர்களது எண்ணிக்கை குறையத் தொடங்கியுள்ளது. புகையிலைப் பயன்பாட்டுக்கு எதிரான எங்களது போராட்டத்தில் முக்கிய திருப்புமுனையாகும்.

ஆண்டுக்கு 80 இலட்சம் மக்கள் புகையிலை பயன்பாட்டால் உயிரிழக்கின்றனர் என்றும் அவர்களில் 70 இலட்சம் பேர் நேரடியாக புகையிலையை பயன்படுத்தியவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆய்வறிக்கையில், புகையிலை பயன்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை கடந்த 2000ம் ஆண்டிலிருந்தே குறைந்து வந்தாலும், ஆண்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்தது. இதன் காரணமாக உலகம் முழுவதும் புகையிலை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 130 கோடிக்கும் மேலாக இருந்தது. எனினும், கடந்த ஆண்டுக்குப் பிறகு புகையிலை பயன்படுத்தும் ஆண்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியுள்ளது. இந்தப் போக்கு நீடித்தால், புகையிலை பயன்படுத்தும் ஆண்களின் எண்ணிக்கையில் அடுத்த ஆண்டு 10 இலட்சமும், 2025ம் ஆண்டுக்குள் 50 இலட்சமும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

# குழந்தை பிறப்பில் இந்தியா சாதனை!

உலகம் முழுவதும் கடந்த ஆங்கிலப் புத்தாண்டான முதலாம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு பிறந்த குழந்தைகள் குறித்த விவரங்களை யுனிசெப் அமைப்பு வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு: இந்த புத்தாண்டு தினத்தில் உலகம் முழுவதும் மொத்தம் 3 இலட்சத்து 92 ஆயிரத்து 78 குழந்தைகள் பிறந்துள்ளன. இதில் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவில் 67 ஆயிரத்து 385 குழந்தைகள் பிறந்துள்ளன. (2019ம் ஆண்டு புத்தாண்டு தினத்தில் இந்தியாவில் சுமார் 70,000 குழந்தைகள் பிறந்தது குறிப்பிடத்தக்கது.) அடுத்த இடத்தில் சீனாவுள்ளது. சீனாவில் 46 ஆயிரத்து 299 குழந்தைகள் பிறந்துள்ளன.

அடுத்த இடங்களில் நைஜீரியா (26,039), பாகிஸ்தான் (16,787), இந்தோனேசியா (13,020) நாடுகள் உள்ளன. 2018ம் ஆண்டில் குறை பிரசவம், சிக்கலான பிரசவம் உள்ளிட்ட பிரச்னைகள் காரணமாக, பிறந்த ஒரு மாதத்துக்குள் 25 இலட்சம் குழந்தைகள் இறந்துள்ளன. எனினும், மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக, இந்த பிரச்னைகளால் இறக்கும் எண்ணிக்கை தற்போது 47 சதவீதம் குறைந்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. அத்துடன், ஐரோப்பிய நாடுகள் குழந்தைகள் பிறப்பு விகிதத்தில் மிக மிக பின் தங்கியுள்ளன. 2020ம் ஆண்டின் முதல் குழந்தை பிஜி நாட்டில் பிறந்திருப்பதாக ஐ.நா. சபை கணித்துள்ளது.

## விரல்களை கண்களாக மாற்றிய...

பள்ளி நூலகத்தில் இருந்த நூல்கள் அனைத்தையும் ஒரே மூச்சில் படித்துவிட வேண்டும் என்கிற ஆசை பிரெய்லிக்கு இருந்தது. ஆனால், புத்தக வடிவில்தான் அவருக்கு பிரச்சனை காத்திருந்தது. அதாவது புத்தகத்தின் மீது அனைத்து எழுத்துகளும் தடவிப் பார்த்து உணரும் விதத்தில் மேடாக உருவாக்கப்பட்டிருக்கும். எப்படி எல்லா நூல்களையும் படித்து முடிப்பது என்று அவருக்கு அப்போது புரியவில்லை. எனவே, எளிதாகவும், வேகமாகவும் பயில ஒரு புதிய எழுத்து முறையை உருவாக்க உறுதியேற்றார் லூயிஸ்.

இரவும் பகலும் பாடுபட்டு ஆராய்ச்சியில் இறங்கினார். புள்ளிகளைப் பல விதமாக மாற்றி மாற்றி அமைத்து, பரிசோதனைகள் செய்து, ஒரு புதிய குறியீட்டு மொழியை அவர் உருவாக்கினார். இந்தப் புதிய எழுத்து முறையை உருவாக்கியபோது அவருக்கு




20 வயதுகூட பூர்த்தியாகவில்லை. அவரது இந்தக் கண்டுபிடிப்பை பாராட்டி, ஊக்கப்படுத்திய பள்ளியின் இயக்குநர், பள்ளியிலும் அதை அறிமுகம் செய்தார். பட்டப்படிப்பு முடித்த பிறகு அதே பள்ளியில் லூயிஸ் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 6 புள்ளிகள் கொண்ட பிரெய்லி முறையின் முதல் புத்தகத்தை 1829ல் அவர் வெளியிட்டார். இதே முறையைப் பயன்படுத்தி 'ஹிஸ்டரி ஒஃப் பிரான்ஸ்' என்ற நூலை அவரது பள்ளி நிர்வாகம் 1837ல் வெளியிட்டது. தொடர்ந்து அறிவியல், கணிதம் தொடர்பான பிரெய்லி எழுத்து முறை புத்தகங்களை அவர் வெளியிட்டார்.

தனது முயற்சிகளுக்கு சமுதாய மற்றும் சட்டப்பூர்வமான அங்கீகாரம் பெற தொடர்ந்து போராடியும் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. பார்வையற்றோர் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றிவைத்த மேதை லூயிஸ் பிரெய்லி காசநோயால் பாதிக்கப்பட்டு, 1852, ஜன.6ம் திகதி தனது 43வது வயதில் உயிர் நீத்தார். மரணத்திற்குப் பிறகு இவர் கண்டுபிடித்த ஆறு புள்ளிகளை ஆதாரமாகக் கொண்ட எழுத்து முறை படிப்படியாகத் தொடர்ந்து பிரபலமடைந்தது. பார்வையற்றவர் கண்கள் இல்லையென கவலைப்பட வேண்டாம். அவர்களின் விரல்களையே கண்களாக மாற்றிய லூயி பிரெய்லி பார்வையற்றவர்களின் இதயங்களில் என்றும் வாழ்வார்.

## விடுதலைப் போராட்ட வரலாற்றில்...

விடுதலைப் புலிகள் இயக்கத்தால் சிறிலங்கா இராணுவத்தினர் வீதி வீதியாகத் திரிந்த காலத்தில் அவர்கள் மீது நடத்தப்பட்ட பல தாக்குதல்களில் பங்கேற்ற கேணல் கிட்டு, 1985ல் யாழ். மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின் வடமாகாணத்திலேயே பெரிய பொலிஸ் நிலையமாகிய யாழ். பொலிஸ் நிலையம் மீது தாக்கியழித்து, அங்கிருந்து நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும், ரவைகளையும் கைப்பற்றி போராட்டத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவர்.

அதன் பின் தளபதி கேணல் கிட்டு யாழ். குடாநாட்டிலிருந்த படைமுகாம்களில் நிலைகொண்டிருந்த படையினரை முற்றுகையிட்டுத் தாக்கி, சிங்களப் படைகளை முற்றாக முகாம்களுக்குள் முடக்கி யாழ்ப்பாணக் குடாநாட்டை விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தவர்.

இம்முற்றுகையை உடைக்க பலமுனைகளில் பலமுறை முயன்ற சிறிலங்கா இராணுவத்திற்கு தகுந்த பதிலடி கொடுத்து இம் முயற்சிகளை முறியடித்தவர் தளபதி கிட்டு.

இவ்வாறான முற்றுகையால் ஆத்திரமடைந்த சிங்கள அரசாங்கம் யாழ். குடாநாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்து மக்களை அடிபணிய வைக்க முயன்றபோது, அதற்கு எதிரான போராட்டத்தை தளபதி கிட்டு ஆரம்பித்தார். கிராமிய உற்பத்திக் குழுக்களை ஆரம்பித்து சொந்தக் காலில் தமிழ் மக்கள் நிற்கமுடியும் என நிருபித்தவர் தளபதி கிட்டு.

அவ்வேளையில் சிங்கள இராணுவத்திடமிருந்து மட்டுமல்ல இனத்துரோகிகளிடமிருந்து, சமூக விரோதிகளிடமிருந்தும் தமிழீழ தேசத்தைப் பாதுகாக்க கேணல் கிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் அவர்களின் செயற்பாடுகளை முறியடித்தன.

யாழ். குடாநாட்டில் சிறீலங்காப் பொலிஸாரினது நடவடிக்கைகளை முழுமையாக முடக்கிய தளபதி கிட்டு, அங்கு இடம்பெற்ற சட்டவிரோதச் செயல்கள், சமூக ஒழுக்கமீறல்கள், சிறு பிணக்குகள் என்பவற்றை கடுப்பாட்டுக்குள் கொண்டுவர கிராமிய நீதிமன்றங்களை அமைத்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கொச்சைபடுத்தும் வகையில் மேற்கொண்ட பிரச்சாரத்தை முறியடிக்கவும் மக்கள் மத்தியில் விடுதலை உணர்வை வளர்க்கவும், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, நாடகம் போன்ற கலைவடிவங்களை ஊக்குவித்துடன் களமுனைகளை ஆவணப்படுத்தி களமுனைக்காட்சிகளை 'நிதர்சனம்' மூலம் மக்கள் மத்தியில் கொண்டு சென்றவர் கேணல் கிட்டு. அத்துடன் அவர் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவருமாவார். பல கள நிகழ்வுகளை எழுத்தில் அவர் கொண்டுவந்திருக்கிறார்.


தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை சிங்கள மக்களுக்கும், உலக மக்களுக்கும் புரியவைக்க கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் கேணல் கிட்டு பயன்படுத்தினார்.

யாழ். குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வேளை அங்கு வருகைதந்த அரசியல் தலைவர்கள், பௌத்த பிக்குகள் அனைவரோடும் உரையாடியும் 1986ம் ஆண்டு கார்த்திகை 10ம் நாள் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரை விடுவிக்க எடுத்த நடவடிக்கையின்போது தனது அரசியல் ஆற்றலை கேணல் கிட்டு வெளிப்படுத்தினார்.

ஆயுதப் போராட்டத்தைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருந்த அதேவேளை மக்களை அணிதிரட்டி, போராட்டங்களை நடத்துவதிலும் கேணல் கேட்டு சிறந்தவராகவே விளங்கினார். 1986 கார்த்திகை தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ்நாட்டில் இந்திய அரசுக்கு எதிராகச் சாகுவரை உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தபோது தமிழீழ மக்களை அணிதிரட்டி மிகப்பெரிய கண்டன ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும் நடத்திக் காட்டியவர் கேணல் கிட்டு.

கேணல் கிட்டு 1987ல் தேசவிரோதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இடதுகாலை இழந்தபோது மக்கள் அடைந்த துன்பத்துக்கு அளவேயில்லை. சிங்கள இராணுவத்தை தெருவழியே திரியவிடாது முகாம்களுக்குள் முடக்கி வைத்திருந்த தளபதி கிட்டு மீது மக்கள் அளவிடமுடியாத அன்பு வைத்திருந்தார்கள். இந்தச் சம்பவத்தின் பின் 1987 வைகாசி (மே) தினத்தன்று விடுதலைப் புலிகள் நல்லூரில் நடத்திய மேதின நிகழ்வின்போது கிட்டண்ணா உரையாற்ற வருகிறார் என அறிவிக்கப்பட்டபோது மக்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அங்கு திரண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் கிட்டண்ணா வந்த வாகனம் கடலில் ஒரு படகுபோல மிதந்து வந்தமையே மகளின் மகிழ்ச்சிக்குச் சான்றாக அமைந்தது.

பின்னர் 1989ல் விடுதலைப் புலிகளின் வெளிநாடுப் பிரிவிற்குப் பொறுப்பாளராக பதவியேற்று வெளிநாடுகளில் அவர் புரிந்த பணிகள் அளப்பெரியவை. அவர் வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராகிய பின் அங்கு போராட்டத்திற்கு ஆதரவான செயற்பாடுகள் துரிதமடையத் தொடங்கின. இன்று தமிழீழப் போராட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்களும், தமிழ் மக்களும் பிற நாட்டுமக்களும் காட்டும் ஈடுபாட்டுக்கும், பங்களிப்புக்கும் கிட்டண்ணா ஆரம்பித்து வாய்ந்த செயற்பாடுகளே காரணம் எனலாம்.



இவ்வாறு சகல துறைகளிலும் சாதனை படைத்த தளபதி கேணல் கிட்டுவின் வீரச்சாவும் முற்றிலும் வேறுபாடான சரித்திர நிகழ்வாகவே அமைந்துவிட்டது.

மேற்குலக நாடுகள் சிலவற்றின் முன்முனைப்புடன் தமிழீழ மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்டம் குறித்த ஆலோசனைகளுடன் சர்வதேச கடல் வழியூடக தமிழீழம் நோக்கி வந்துகொண்டிருந்த தளபதி கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் இந்தியாவின் நாடாறிக் கப்பல்கள் 1993 தை 13ம் திகதி சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து வழிமறித்தன. பின்னர் இந்தியக் கரையைநோக்கிக் கப்பலைச் செலுத்தும்படி நிர்ப்பந்தித்தன.

கேணல் கிட்டு தமிழீழம் நோக்கி வங்கக்கடல் வழியாகப் பயணம் செய்கிறார் என்ற செய்தியும், மேற்குலக சமாதான முயற்சியின் தூதுவனாக அவர் பயணம் செய்கிறார் என்றும் இந்திய அரசுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் அக் கப்பலை வழிமறிக்கும்படி அன்றைய இந்திய அரசு கட்டளையிட்டது.

தை 15ம் திகதி இந்தச் செய்தி உலகமெங்கும் பரவிவிட்டது. கிட்டுவை உயிருடன் பிடிக்கவேண்டும் அல்லது அவரை அழிக்கவேண்டும், மேற்குலகின் சமாதான முயற்சியைக் குழப்ப வேண்டும் என அன்றைய இந்திய அரசாங்கம் முடிவெடுத்தது.

சர்வதேசக் கடற்பரப்பிலிருந்து இரண்டு நாள் கடற்பயணத்தின் பின் கேணல் கிட்டுவும் தோழர்களும் பிரயாணம் செய்த கப்பல் சென்னைத் துறைமுகத்துக்கு நேரே இந்தியக் கடல் எல்லைவரை கொண்டுவந்து, சரணடையும் படியும் மறுத்தால் கப்பல் மூழ்கடிக்கப்படும் எனவும் இந்தியக் கடற்படை எச்சரித்தது. சரணடைந்தால் தம்மீது பொய் வழக்குகள் சுமத்தப்பட்டு தமது இயக்கம் மீதும், போராட்டம் மீதும் களங்கம் சுமத்த அன்றைய இந்திய அரசு முயற்சிக்கும் என்பதை உணர்ந்து கொண்ட கேணல் கிட்டு கப்பல் சிப்பந்திகள் அனைவரையும் கப்பலை விட்டு இறக்கியபின் கப்பலை வெடிக்கவைத்துத் தகர்த்து தன் தோழர்களுடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு சாதனை வீரராகியவர் தளபதி கேணல் கிட்டு, போராட்டத்தின் ஒவ்வொரு துறையிலும் அவர் நாட்டிய விதைகளே இன்று விருட்சமாக வளர்ந்து போராட்டச் சோலையை நிறைத்து நிழல் தருகின்றன. அவர் போராட்ட வரலாற்றில் ஓர் அத்தியாயம்.

# எரியும் அவுஸ்திரேலியா...

இதேவேளை, அவுஸ்திரேலிய வரலாற்றில் காட்டுத்தீயை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு படை வீரர்கள் அழைக் கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை என்று அந்த நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் லிண்டா ரெனால்ட்ஸ் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியவின் மலகூட்டா நகரம் மிகவும் ஆபத்தான காட்டு தீயின் பிடியில் சிக்குண்டுள்ளதை தொடர்ந்து அந்த நகரை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கடற்கரையில் தஞ்சமடைந்தனர். அத்துடன், வெப்பம் தாங்கமுடியாத பகுதிகளில் இருந்தும் மக்கள் கடற்கரைகளில் சென்று முகாமிட்டுள் ளனர். தீயின் சுவாலையால் நகரங்கள் பல இரவும் இரத்தச் சிவப்பாகக் காட்சி யளிக்கின்றது.



இதேவேளை, இந்த காட்டுத் தீ காரணமாக அவுஸ்திரேலிய வன விலங்குகளின் வாழ்க்கை பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. காட்டுத் தீயில் சிக்கி, சுமார் 480 மில்லியன் உயிரினங்கள் கொல்லப்பட்டுள்ளன என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. சிட்னி பல்கலைக் கழகத்தின் சூழலியல் வல்லுநர்கள், நடத்திய ஆய்வில், காட்டுத் தீ தொடங் கியதில் இருந்து கிட்டத்தட்ட அரை பில்லியன் (480 மில்லியன்) பாலூட் டிகள், பறவைகள் மற்றும் ஊர்வன இறந்துவிட்டதாக மதிப்பிடுகின்றனர்.

நியூ சவுத் வேல்ஸின் மூன்று மில்லியன் ஹெக்டேயர்களில் மட்டும் சுமார் 10 நாட்களுக்கு முன்பு வரை தீயில் நாசமாகியதாக நாங்கள் மதிப்பிட்டுள்ளோம், அநேகமாக 480 மில்லியன் பாலூட்டிகள், பறவைகள் மற்றும் ஊர்வன போன்றவை தீவிபத் தால் பாதிக்கப்பட்டிருக்கும் என்று பேராசிரியர் டிக்மேன் கூறினார்.

நிச்சயமாக, கங்காருக்கள் அல்லது ஈமுக்கள் போன்ற பெரிய விலங்குகள், பல பறவைகள், தீ நெருங்கும்போது அதை விட்டு விலகிச் செல்ல முடியும், என்று அவர் மேலும் கூறினார். அரி தாகிவரும் கோலா கரடிகள் கிட்டத்தட்ட 8000 அநியாயமாக இந்த காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இப்படியாக தீயை பார்த்ததும், இரு கங்காருக்கள், சாலையை கடந்து தப்பியோடும் ஒரு படம் சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ளது. இந்த படம் பார்ப்போர் நெஞ்சங்களை கனமாக்கும் வகையில் உள்ளது. செத்து மடிந்த விலங்குகளின் உடல்களைப் பார்க்கும்போது மனதை பிசைகிறது. அதை விட மீட்கப்படும் உயிரினங்க ளின் கண்ணில் காணப்படும் மிரட்சி யும், தங்களை மீட்டோரிடம் அவை விடாப்படியாக இறுகக் கட்டிப்பிடித்துக் கொள்ளும் காணொளிக் காட்சிகளும் கண்ணீர் விட வைக்கின்றன. தீவிபத் திலிருந்து தப்பி குளிர்ச்சி நிறைந்த பகுதியை நோக்கி ஆயிரக்கணக்கான பறவைகள் பறந்தோடிய காட்சி இதில் இடம் பெற்றுள்ளன.

வரலாறு காணாத காட்டுத் தீயில் சிக்கித் தவிக்கிறது அவுஸ்திரேலியா. புவி வெப்பமயமாதல்தான் இந்த கொடூர காட்டுத் தீக்கு காரணமே. அதாவது மனிதர்கள் செய்த தவறால் இன்று அப்பாவி விலங்குகளும், வனங் களும் அநியாயமாக அழிந்து கொண் டுள்ளன.

## ஐ.நா. அதிகாரி அச்சம்

2019ம் ஆண்டு மிகவும் மோசமானது. 2020 வருடம் அதனை விட மோசமான தாக காணப்படும், எனத் தெரிவித்துள்ள ஐ.நா. அதிகாரியொருவர், 2020ல் கால நிலை மாற்றம் மோதல்கள் காரணமாக பெருமளவானவர்கள் பாதிக்கப்படுவார் கள் அவர்களிற்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

2019ம் வருடம் மிகவும் மோசமானது, 2019ம் வருடம் குறித்த எனது மதிப்பீடுகள் பிழையானவையாகி விட்டன என ஐக்கிய நாடுகளின் நிவாரண ஒருங்கிணைப்பாளர் மார்க்லொவ்கொக் தெரிவித்துள்ளார். 2019ம் வருடம் 145 மில்லியன் மக்களிற்கு மனிதாபிமான உதவி தேவைப்படலாம் என 2018ம் வருடம் நான் எதிர்பார்த்தேன். ஆனால் 165 மில்லியன் மக்களிற்கு மனி தாபிமான உதவிதேவைப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

என்னிடம் மாயக்கண்ணாடியில்லை, 2020ம் வருடம் நாங்கள் எதனை எதிர் கொள்ளப்போகின்றோம் என்பது தெரி யாது. ஆனால் 2020 குறித்து என்னிடம் மோசமான எதிர்பார்ப்புகள் உள்ளன என ஐக்கிய நாடுகளின் நிவாரண ஒருங்கிணைப் பாளர் மார்க் லொவ்கொக் தெரிவித்துள் ளார். 2020ம் வருடம் நிலைமை மிக மோசமானதாகயிருக்கும் என நான் நினைக்கின்றேன், அஞ்சுகின்றேன் என அவர்தெரிவித்துள்ளார்.

உதவிகள் தேவைப்படும் மக்களிற்கு அவை சென்றடையுமா என்பதை பூகோள அரசியல்போட்டியே தீர்மானிக்கும் என குறிப்பிட்டுள்ள அவர் சிரியா மற்றும் வெனிசூலா மக்களின் நிலைமை குறித்து கவலை வெளியிட்டுள்ளார். நாங்கள் கையாள்கின்ற ஒவ்வொருநெருக்கடியி லும் பெண்களும் யுவதிகளும் அங்கவீனர் களுமே மோசமாக பாதிக்கப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். இவர்களே அதிகளவிற்கு மறக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர் எனஅவர் தெரிவித்துள்ளார். பெண்களும் யுவதிகளும் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இளம் வயது திருமணம் பாலியல் தொழில்கள் போன்றவற்றில் ஈடுபடவேண்டிய நிலை காணப்படுகின்றது எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

# முதலாம் ஆண்டு நினைவில்



திருமதி
**இரத்தினசிங்கம்**
**சிவபாக்கியம்**

[பண்ணாகம், நாரந்தனை – யாழ்ப்பாணம்]

**மண்ணில் : 05.05.1925**
**விண்ணில் : 20.12.2018**
**திதி : 08.01.2020**

## எல்லோருக்கும் கிடைக்காது எங்களின் (சிவ) பாக்கியம்!

*இருக்கும் போது தெரிவதைவிட*
*இல்லாதபோதுதான் வெறுமை*
*மனதை இழுத்துவைத்து*
*அறுக்கின்றது.*
*இப்போதுதான் உங்கள்*
*நினைவுகள் அடிக்கடி வருகின்றது.*
*எங்கிருந்தோ உங்களின்*
*குரலோசை*
*கேட்பதுபோன்ற பிரமை.*
*31வது வயதில்*
*கணவனை இழந்தும்*
*யாரிடமும் எதுவுமே*
*குறைகேட்காமல்*
*ஒரு நல்ல தாயாக*
*பிள்ளைகளை வளர்த்தெடுத்து*
*நல்வாழ்வை அமைத்துத் தந்தீர்கள்.*

*பேரப் பிள்ளைகளோடு*
*அதிகம் விளையாடிய*
*அம்மம்மாவும், அப்பாச்சியும்*
*நீங்கள் ஒருவர்தான்.*
*எல்லாப் பேரப்பிள்ளைகளுமே*
*உங்கள் பாசத்தில்*
*திளைத்து வளர்ந்தவர்கள்.*
*'தாத்தா, பாட்டிகள்*
*இருக்கும் வீட்டில் வளரும்*
*இளைய தலைமுறைகள்*
*அதிஷ்டசாலிகள்'*
*என்றார்கள்.*
*உண்மைதான்*
*எத்தனை கதைகள்..!*
*எத்தனை நகைச்சுவைகள்..!*
*எத்தனை கள்ளத்தீன்கள்..!*
*பாசமும், பரிகாசமுமாய்*
*பரிமாறியவை இன்றும்*
*நாவில் ருசிக்கின்றது.*
*மண்ணெண்ணெய் விளக்கு*
*வெளிச்சத்தில்*
*வெற்றிலையை இடித்து*
*ஒரு சொட்டுத் தந்தாலும்*
*இன்னும் நினைத்தால்*
*நாவு சுவைக்கிறது.*


*பேரப்பிள்ளைகளுடன்*
*நின்றுவிடாது*
*பூட்டப் பிள்கைளையும்*
*தூக்கிச் சுமந்து*
*கொஞ்சி மகிழ்ந்தீர்கள்.*
*வயதானாலும் வைராக்கியம்*
*குறையாமல் வாழ்ந்தீர்கள்.*
*துரித உணவுடனும்,*
*தூங்கி வழியும் பொழுதுடனும்*
*நீண்ட ஆயுள் வாழ்வதே*
*இன்றைய தலைமுறைக்கு*
*சாதனை என்றாகிப் போனது.*
*உங்கள் உணவும், நடையுமே*
*உங்களின் நீண்ட ஆயுளின்*
*ஆரோக்கிய இரகசியம் - இதனை*
*யாருக்குக் கற்றுக் கொடுப்பது?*

*எல்லோருக்கும் கிடைக்காது*
*எங்களுக்கு கிடைத்த*
*பாக்கியம் நீங்கள்.*
*நூற்றாண்டை எட்டித்*
*தொட்டுவிடும் தூரத்தில்...*
*ஐந்தாவது தலைமுறை*
*நெருங்கும் தூரத்தில் ...*
*நீங்கள் இருந்தும்*
*இத்தனை அவசரமாக*
*எமைவிட்டுச் சென்றதேனோ..?*

**உங்கள் நினைவால் உருகும்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்கைள்.**

## தமிழர்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க...

*1: இலங்கை பல்லின கலாசாரங்களையும் கொண்டிருக்கும் மக்கள் வசிக்கும் நாடு அல்ல. அதற்கு ஜனநாயக பண்புகள் என்று எவையும் கிடையாது. அது மனித உரிமைகளுக்கு கிஞ்சித்தும் மதிப்பளிக்காத, பௌத்த பேரின வாத சிந்தனைக்குள் ஊறி, உப்பி உருப்பெருத்து நாறிக்கிடக்கும், இனத்துவேசங்களால் நிரம்பி வழியும், பக்கச் சார்பை அதிகம் அதிகம் வெளிப்படுத்தும் ஒரு காட்டாட்சியை கொண்டிருக்கும் நாடு.*




*2: ஆகவே நாங்கள் ஒற்றையாட்சிக்குள் இவர்களோடு சேர்ந்து வாழ முடியாது. தமிழ்த் தேசமாக சுயநிர்ணய உரிமையோடு பிரிந்து செல்வது தான் தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தர பாதுகாப்பையும், இனப் பிரச்சினைக்கு உயரிய தீர்வையும் தரும்.*

*3: தமிழ் மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு பெருமெடுப்பில் தயாராக வேண்டும் என்பவையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## பரிஸ் பேச்சுவார்த்தைக்குப்...

ரஷ்ய இராணுவ உதவியுடன் சண்டையிட்ட அவர்கள், கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க், லூஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றினர். இந்த விவகாரத்தில் உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே பதற்றம் நீடித்து வந்த நிலையில், ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டினும், உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கியும் முதல் முறையாக பரிசில் கடந்த மாதம் 9ம் திகதி சந்தித்துப் பேசினர். அப்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே, இந்த கைதிகள் பரிமாற்ற நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தக் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின்கீழ், முன்னாள் அதிபர் விக்டர் யானுகோவிச் ஆட்சி காலத்தின்போது ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு போராட்டக்காரர்கள் பலரை சுட்டுக்கொன்றதாகக் குற்றம் சாட்டப்படும் கலவரத் தடுப்புக் காவல்துறையினரும் விடுவிக்கப்படுவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனைக் கண்டித்து, அந்த நாட்டின் தன்னார்வ அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

## புட்டினின் ஆதிக்கமும்...

1999ம் ஆண்டு ரஷ்யாவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது அப்போதைய ஜனாதிபதி போரிஸ் எல்ட்சின், பொறுப்பு பிரதமராக புட்டினை நியமனம் செய்தார். அதன்பின் ஜனாதிபதி பொறுப்பை விட்டு போரிஸ் எல்ட்சின் 1999ம் ஆண்டு டிசெம்பர் 31ம் திகதி விலகினார். அப்போது பொறுப்பு ஜனாதிபதியாக விளாடிமிர் புட்டினை நியமித்தார்.



அப்போது கிளர்ச்சியாளர்களுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக வான்வெளி தாக்குதலை புட்டின் நடத்தியமையால் ரஷ்ய மக்களிடம் பெரும் புகழ் பெற்றார். அன்றுமுதல் புட்டின் ரஷ்யாவில் ஜனாதிபதி அல்லது பிரதமர் ஆகிய 2 பதவிகளில் ஏதாவது ஒன்றை வகித்தபடி தன்னை அரசியலில் நிலை நிறுத்தி வந்துகொண்டிருக்கிறார். கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் புட்டின் அபாரவெற்றி பெற்றார். அவர் 2022ம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருப்பார். ரஷ்ய நாட்டு அரசாங்கத்தை தனது கை விரல் நுனியில் வைத்திருக்கும் புட்டின், தனது அரசியல் பயணத்தின் 21வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார். புட்டின் மீது பல்வேறு சர்சைகள் கூறப்பட்டாலும் அவர் ரஷ்யாவில் சக்தி வாய்ந்த தலைவராகவே இருந்து வருகிறார்.

### அமெரிக்காவிற்கு நன்றி

அமெரிக்கா அளித்த உளவுத் தகவலின் அடிப்படையில், ரஷ்யாவில் புத்தாண்டு தினத்தன்று நிகழ்த்த திட்டமிடப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் முறியடிக்கப்பட்ட விவகாரத்தில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டின் நன்றி தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் நகரில் புத்தாண்டு தினத்தன்று பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட இருப்பதாக, அந்நாட்டுக்கு அமெரிக்க உளவு அமைப்பு தகவல் அளித்தது. இதன் அடிப்படையில் ரஷ்ய பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனை நடத்தினர். இதில் சந்தேகப்படும்படியாகக் கைது செய்யப்பட்ட இரு நபர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது, அவர்களிருவரும் பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட இருந்தது தெரியவந்தது. இதையடுத்து, அவர்களிடமிருந்த அதற்கான பொருட்களைப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.

இந்நிலையில், சரியான நேரத்தில் தகவல் அளித்ததற்காக அதிபர் டிரம்ப்புக்கு, ரஷ்ய அதிபர் புட்டின் நன்றி தெரிவித்தார். இது தொடர்பாக கிரெம்ளின் மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில், ரஷ்யாவில் நிகழ்த்த திட்டமிடப்பட்ட தாக்குதல், அமெரிக்காவின் சிறப்பு அமைப்புகள் அளித்த தகவலினால் முறியடிக்கப்பட்டது. இதற்காக டிரம்ப்புக்கு அதிபர் புட்டின் நன்றி தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோத்தபாயவின் வெறித்தனங்களை....

இந்த விடயத்தை சர்வதேசத்தின் காதுகளுக்கு கொண்டுசெல்லும் பொறுப்பை எடுக்கப்போவது யார்? இந்த விடயத்தில் புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழர் கட்டமைப்புக்களின் பொறுப்பு என்ன? தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளின் பொறுப்பு என்ன? தாயகத்தில் உள்ளவர்களையும் புலம்பெயர் தேசத்தவர்களையும் ஒருங்கிணைக்கப்போவது யார்? தாயகம், தேசியம் சுயநிர்ணய உரிமைக்காக தொடர்ந்து உறுதியோடு குரல்கொடுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வகிபாகம் என்ன? இந்தக் கேள்விகள் தமிழ் மக்களிடம் எழுந்திருக்கின்றன.

இலங்கைத் தீவில் குறிப்பாக தமிழர்கள் வாழ முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது சிங்கள பேரினவாதத்தின் திட்டமிட்ட செயற்பாடு. பௌத்த சிங்கள நாடு என்ற கோசத்துடன், ஒன்றையாட்சித் தத்துவத்தில் செயற்படும் சிறீலங்கா அரசாங்கத்தை கட்டுக்குள் கொண்டுவருவதற்கு சர்வதேச சட்டங்கள் இருக்கின்றன. மனிதாபிமான மீட்பு நடவடிக்கை என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டது இன அழிப்பு யுத்தம் என்பதை சர்வதேச நாடுகளே ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு வந்திருக்கின்றன.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட இன அழிப்பு நடைபெற்றது என்பதை சர்வதேச நாடுகளின் மனித உரிமை அமைப்புக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற போதிலும் அவர்கள் அதை வெளிப்படுத்த தயக்கம் காட்டுகின்றனர். ஜனநாயக நாடொன்றுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது என்பது அவர்களின் கருத்தாக இருக்கின்றது. ஆனால், சிறிலங்காவில் நடைபெறுவது ஜனநாயக ஆட்சி அல்ல, அரசின் உத்தியோகபூர்வ பத்திரிகை மூலம் இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆதாரங்களுடன் சர்வதேச சமூகத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.

பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதை விடுத்து, தாயகம் - புலம் பெயர் தேசம் என இரண்டும் தமிழர் தேசத்தின் இறைமையைப் பாதுகாக்க ஒன்றிணைய வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவை. இந்த ஒருங்கிணைவுக்கு தமிழ்த் தேசியத்தின் பெயரால் நேர்மையுடன் செயற்பட்டு வருகின்ற அச்சு இலத்திரனியல் ஊடகங்களும் தமது காத்திரமான பங்களிப்பை வழங்கவேண்டும்.

**தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் கடந்த 25 ஆண்டுகாலமாக அப்பளுக்கற்ற பணியாற்றி வருகின்ற ஈழமுரசு பத்திரிகையின் தாயக செய்தியாளர்கள் இந்தப் பணியைச் செவ்வனே செய்வதற்கு தயாராக இருக்கின்றனர்.**

தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் கடந்த 25 ஆண்டுகாலமாக அப்பளுக்கற்ற பணியாற்றி வருகின்ற ஈழமுரசு பத்திரிகையின் தாயக செய்தியாளர்கள் இந்தப் பணியைச் செவ்வனே செய்வதற்கு தயாராக இருக்கின்றனர். தாயகத்திலும் பன்னாடுகளிலும் இருக்கின்ற தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களும் இப்பணிக்காகத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர் கூறியதைப் போன்று, இலட்சியத்திற்காக ஒன்றுபட்ட மக்களை எந்தச் சக்தியாலும் அழித்துவிட முடியாது என்பதற்கு இணங்க, எமது விடுதலைக்கான எழுச்சிக்கு அனைவரும் தயாராகவேண்டும். இதுவே, எமது நிம்மதியான வாழ்விற்காக தங்களை ஆகுதியாக்கிய வீர மறவர்களுக்கு நாம் செய்யும் மகத்தான கைமாறு ஆகும். அந்த மாவீரர்களின் கனவை நனவாக்க அனைவரும் அணிதிரள்வோம்.

## உழுதவன் கணக்குப் பார்த்தால்...

*அப்பா, அம்மா, தம்பி, தங்கச்சி, அக்கா, அண்ணன், மனைவி, கணவன், மகள், மகன், நண்பன், நண்பி என்று எத்தனையோ உறவுகளை மாவீரர்களாகக் குடுத்துப் போட்டு எங்கடை சனம் அமைதியாக இருக்குது.*

*இன்னும் எத்தனையோ முன்னாள் போராளிகளும், செயற்பாட்டாளர்களும், ஆதரவாளர்களும் நாட்டிலையும் சரி, வெளிநாட்டிலையும் சரி எத்தனையோ தியாகங்களைச் செய்து போட்டு அமைதியாக, ஒழுக்கத்தோடு இருக்கினம்.*

*இவையள் யாருமே தாங்கள் செய்ததைக் கணக்குப் பார்க்கிறதில்லை. உதைத் தான் 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது' என்கிறது. ஏதோ சம்பந்தப்பட்டவையள் புரிஞ்சு கொண்டு நடந்தால் சரி.*

*ஆனாலும் ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் சந்திரன் போல் ஆகாது என்கிற மாதிரி, தம்பி பிரபாகரன் மாதிரி ஒரு உத்தமனும் இல்லை பாருங்கோ.*

*வரட்டே?*

## அரிச்சந்திரன் பதில்கள்...

*'அப்படித்தாங்க. என்னுடைய மனைவியும், நானும் சந்தோசமாக குடும்பம் நடத்தவில்லை. எப்பொழுதும் சண்டை தான். நான் என்ன சொன்னாலும், அவள் கேட்பதில்லை. எதிர்த்து பேசுகிறாள். கோபப்படுகிறாள். ஆத்திரப்படுகிறாள். எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை' என்றார், அந்த மனிதர்.*

*உடனே கபீர்தாசர், 'இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருங்க. யோசனை செய்து பதில் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றார். பின்னர், ஒரு பெரிய நூல் கண்டை எடுத்து வந்து வீட்டிற்கு வெளியே வெளிச்சத்தில் உட்கார்ந்தார். நூல் கண்டில் உள்ள சிக்கல்களை ஒவ்வொன்றாக பிரித்து எடுத்தார். அப்போது, மனைவியை கூப்பிட்டு 'விளக்கை ஏற்றி எடுத்து வா' என்று சொன்னார். அந்த அம்மையாரும் ஒரு விளக்கை ஏற்றி எடுத்து வந்து அவர் பக்கத்திலே வைத்தார். இவ்வளவு வெளிச்சம் இருக்கும் போது, கபீர்தாசர் தான் விவரம் இல்லாமல் விளக்கு கொண்டு வரச் சொன்னால், அந்த அம்மையாரும் விளக்கு கொண்டு வருகிறாரே என்று நினைத்து, திகைத்துப்போனார் அந்த மனிதர்.*

*சிறிது நேரம் கழித்து, அந்த அம்மையார் இரண்டு டம்ளர்களில் பாலை எடுத்துக் கொண்டு வந்து, அவர்கள் முன்பு வைத்தார். பாலை குடிக்க ஆரம்பித்த அந்த மனிதரின் முகம் சுருங்க ஆரம்பித்தது. பாலை அவரால் குடிக்க முடியவில்லை. ஏனெனில், கபீர்தாசரின் மனைவி தவறுதலாக பாலில் சர்க்கரைக்கு பதிலாக, உப்பை போட்டிருந்தார். அந்த பக்தர், கபீர்தாசரைக் கவனித்தார். கபீர்தாசரோ, கிடுகிடுவென்று பாலை குடித்தார். பாலை குடித்து முடிக்கும் தருவாயில், அவரது மனைவி சமையல் கட்டில் இருந்து கொண்டே, 'பாலுக்கு சர்க்கரை சரியா இருக்கிறதா?' என்று கேட்டார். இதற்கு கபீர்தாசர், 'சரியாக இருக்கிறது' என்று சொன்னார்.*

*இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அந்த மனிதர் கபீர்தாசரை நெடுஞ்சாண்கிடையாக வணங்கினார். உடனே கபீர்தாசர், அந்த மனிதரைப் பார்த்து 'என்னவோ கேட்க வேண்டும் என்று கூறினாயே?' என்று கேட்டார்.*

*அதற்கு அந்த மனிதர் 'ஒன்றும் கேட்க வேண்டாம் ஐயா. நண்பகலில் நீங்கள் விளக்கேற்றி வைக்கச் சொல்கிறீர்கள். உங்கள் மனைவியும் விளக்கேற்றி வைக்கிறார். உப்பு போட்ட பாலில் சர்க்கரை சரியாக இருக்கிறதா? என்றால் சரியாக இருக்கிறது என்று நீங்கள் பதில் கூறுகிறீர்கள். எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது' என்று கூறி அங்கிருந்து புறப்பட்டார்."*

*அதாவது, கணவனை மாற்ற வேண்டும் என்று மனைவி நினைக்காமலும் மனைவியை மாற்ற வேண்டும் என்று கணவன் நினைக்காமலும் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு புரிந்துகொண்டு வாழ்ந்தாலே, இல்லற வாழ்வு அமைதியாக, இனிமையாக, சொர்க்கம் போல் இருக்கும் என்பதை இந்த நிகழ்வு எடுத்துரைக்கிறது, என்றாராம்.*


SEREE MAHAL
ARTICLES DE CADEAUX, BRICOLAGE
வீட்டு விழாக்களுக்குத் தேவையான
தரமான அன்பளிப்புப் பொருட்கள் மலிவு விலையில்!
100% எலி, பூச்சி கொல்லி மருந்துகள்
எம்மிடம் கிடைக்கும்!
14, rue Cail, 75010 Paris
Tel: 06 69 58 61 61
09 51 15 82 03
M La Chapelle ou Gare du Nord


OM MURUGA
DESIGN & PRINT
+33 1 71 93 34 32
Info@omprint.fr
71 Rue Louis Blanc 75010 Paris
NEW
Ria MONEY TRANSFER
OM MURUGA
பணம் அனுப்பும் சேவை
BANK CARD மூலம் RIAஇல்
பணம் அனுப்பிக் கொள்ளலாம்
VISA
VISA Electron
EUROCARD MasterCard
Maestro


சாரி பிளவுஸ்
30 நிமிடங்களில்
தைத்துத் தரப்படும்
Devi Textile & Tailors
ஆண் பெண்
இருபாலாருக்கும்
அனைத்து விதமான ஆடைகளும்
மற்றும் உங்கள் வசதிக்கு
அமைவான தோல்பைகளும்
உங்கள் எண்ணத்திற்கேற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
Tél: 09 51 01 85 59
Suresh: 07 81 29 86 50
29, Bld de la Chapelle
75010 Paris
M°: La Chapelle (ligne 2)


ஈழமுரசு®
உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை
ஈழமுரசின் 25 ஆவது ஆண்டு நிறைவில்
வெள்ளிமுரசு மலர் வெளியிடப்படவுள்ளது.
விபரங்கள் விரைவில்...!
ஈழமுரசின்
25
வெள்ளிமுரசு
நிகழ்வு : 05.04.2020 - மாலை 15 மணி
இணையத்திலும்
www.eelamurazu.com
தொடர்புகளுக்கு:
mediacentre
BP 40
93141 Bondy PDC, France
Tél : 00 33 781 808 116


உ
சேர்ஜி சிவன்கோவில் நிர்வாக சபையினரால் கொண்டாடப்படும்
தைப்பொங்கல் திருவிழா
LA FÊTE DE PONGAL
26.01.2020
ஞாயிற்றுக்கிழமை
LOCA SALLE
6 Rue de la Palombe
95610 ERAGNY
காலை
9:00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சேர்ஜி சிவாலய நிர்வாக சபை
VENEZ FÊTER AVEC NOUS


சொந்தமாக ஒரு வீடு!
Île-de-Franceஇல்
நீங்கள் விரும்பிய இடத்தில்!
தொடர்பு: 07 64 08 93 83
1F (Studio) முதல் F5 (5 அறைகள்) வரையான வீடுகள்.
அடுக்குமாடி கட்டிடத்தில்!
Frais de Notaire 0% முதல் 2,5% வரை
வங்கிக்கடன் ஆலோசனைகள்!
வட்டி இல்லாத கடன்கள்
எம்மிடம் வீடுகள் இருப்பில் உள்ள இடங்கள்...
அனைவர்க்கும்
இனிய தைப்பொங்கல்
புதுவருட நல் வாழ்த்துக்கள்
NEUILLY-SUR-MARNE
BOBIGNY
SARCELLES
LE BOURGET
AULNAY-SOUS-BOIS
BONDY
www.acheter-appartement-neuf.com
தமிழில் உரையாடி தமிழிலே விளக்கங்களை பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு: 07 64 08 93 83


ஸ்ரீ காமாட்ஷி அம்பாள் ஆலயம்
(அடியவர்கள் ஆலயம்)
36 AVENUE DE LA DIVISION LECLERC 93000 BOBIGNY
www.sri-kamadchi-amman-en-france.com
பொங்கல் திருவிழா
15.01.2020
காலை 8மணிக்கு ஆரம்பிக்கப்படும்
பிரான்ஸ் மாநகரில் BOBIGNY இல் அமைந்துள்ள
ஸ்ரீ காமாட்ஷி அம்பாள் ஆலயத்தில் முதன் முறையாக
எமது ஆலயத்தில் தான் வெளி வாசலில் சூரியனை நோக்கி பொங்கல் பானை வைத்து
பொங்கும் விழா நடைபெறுவது சிறப்பம்சம் . அனைத்து பக்தர்களையும் கலந்து
ஸ்ரீ காமாட்ஷி அம்பாளின் அருளைப்பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
தொடர்புகளுக்கு :
ஆலயம் : 09 88 31 93 94
ஆலயகுரு : 06 64 79 28 37
ஆலயநிர்வாகம் : 07 53 42 91 02